இதழ் 197

# மண்

ஜேர்மனி / 2019
புரட்டாதி - ஐப்பசி / September - October



வாழும்பொழுதே வாழ்த்தப்படும் மூத்த எழுத்தாளர் - கவிஞர்
90 வயது கடந்தவர் இராமலிங்கம்-அம்பிகைபாகர் - அவுஸ்திரேலியா








முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள துணுக்காய் "ஒளிரும் வாழ்வு இல்லம்" துணுக்காய் - பாண்டியன்குளம் பிரதேச செயலகப் பிரிவுகளில் வசிக்கும் ஆதரவற்றோருக்கு உணவளிக்கப்பட்டது. முல்லைத்தீவு மாவட்ட உளவளத்துறை அதிகாரியினால் இலவச மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டது. இப்பிரதேசங்களிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு இலவச கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களுக்கு "மணி" சஞ்சிகையின் வாசகர்களும் நிதி உதவி புரிந்து வருகின்றனர்.

# உள்ளே


- எங்கள் கருத்து
- சிறுவர்வட்டம்
- வினாவிடைப்போட்டி
- சிறுவர்போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- இலக்கியச் சாரல்
- சிறுகதை, கட்டுரை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்புகள்
- செய்திக்கண்ணோட்டம்
- ஆதரவற்றோர் உதவிநிதி



முகவரி: V. Sivarajah
Am Windhoevel 18a
47249 Duisburg
Germany

தொலைபேசி: 0203/8073898

தொலைநகல்: 0203/8073898

மின்னஞ்சல்: v.sivarajah@arcor.de


வங்கிவிபரம்: Mann (Erde) Verein e.V. Duisburg
Stadtsparkasse Duisburg
Kontonummer: 225 000 421
Bankleitzahl: 350 500 00
IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21
SWIFT-BIC: DUISDE33XXX

# எங்கள் கருத்து...

இன்று நமது நாட்டில் நமக்கு அவசியமாக வேண்டியிருக்கும் விசயங்களில் முக்கியமான ஒன்று இன நல்லுறவு இனங்களுக்குமிடையிலான ஐக்கியமும் ஆகும். ஆனால், அதுவோ மாறிமாறி வரும் அரசுகளாலும் இனவாதிகளாலும் எட்டாக்கனியாக இருக்கிறது. இனங்களுக்கிடையிலான பிளவுகளைச் சாத்தியப்படுத்தியே தீர வேண்டும். இல்லையென்றால் இலங்கைத்தீவில் அமைதி ஒருபோதுமே ஏற்படப்போவதில்லை.

அமைதி வேண்டுமாக இருந்தால் எத்தகைய தடைகள் வந்தாலும் கடந்து இன நல்லுறவை எட்டியே தீர வேண்டும். அமைதிக்கான அடிப்படையும் அத்திவாரமும் இன நல்லுறவே. இல்லையென்றால் எந்தப் பிரச்சினைகளுமே தீர்க்கப்படாமல் நெருக்கடிகளின் மத்தியிலேயே வாழ வேண்டும். கூடவே அச்சம் நிறைந்த சூழலையும் எதிர்கொண்டேயாக வேண்டும்.

நெருக்கடிகள் சூழ்ந்திருக்கும்போது எவராலும் நிம்மதியாக வாழ முடியாது. புதியனவற்றைச் சிந்திக்க முடியாது. முன்னேற்றமும் வளர்ச்சியும் ஏற்படாது. அச்சத்துடன் வாழ்வதென்பது நிம்மதியற்றுப் பதற்றத்தோடு வாழ்வதாகும். இது ஏறக்குறைய அடிமைத்தனத்துடன் வாழ்வதாகும். இத்தகைய நெருக்கடியான வாழ்க்கையை வாழப்போகிறோமா? அல்லது எல்லோரும் கூடிக் களித்து மகிழ்ச்சியாக இருக்கும் அமைதியான வாழ்க்கையை வாழப்போகிறோமா?

இதுவே இன்று இலங்கைச் சமூகங்களின் முன்னிருக்கும் கேள்வி.மிகச் சிறிய இலங்கைத்தீவிலுள்ள தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் அரசியல் காரணங்களினால் மிக மோசமான அளவில் பிளவுபடுத்தப்பட்டுள்ளனர் இந்த இரண்டு சமூகத்தினரும் பெரும்பான்மைச் சிங்களத் தரப்பினால், அவர்களை மையப்படுத்திய அரசினால் ஒடுக்குதலுக்குள்ளாகின்றனர். அரசானது பிரித்தாளும் தந்திரத்தை மிகச் சுலபமாகப் பயன்படுத்துகின்றது ஆகவே இந்த அபாயச் சூழலிலிருந்த விடுபட்டுத் தப்பித்துத் தம்மைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டுமாயின் இரண்டு சமூகங்களும் பரபரஸ்பரம் உறவாட வேண்டும்.

தமிழ் பேசும் சமூகங்கள் ஒன்றுபட்டே ஆகவேண்டும். இது தவிர்க்கவே முடியாத அவசிய நிர்ப்பந்தமாகும். ஏனெனில் இதற்குப் பின்னே ஆழமான காயங்களும் இருண்ட பக்கங்களும் உள்ளன. வலியும் துயரும் நிறைந்துள்ளன. இதையெல்லாம் நாம் வெட்டித் திறந்து போக்க வேண்டும். அதற்கு முதற்கட்டமாக மனந்திறந்த உரையாடல்கள் பல இடங்களிலும் நிகழ வேண்டும். அந்த உரையாடல்கள், ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளக் கூடியதாக, ஒருவரை ஒருவர் மனங்கொண்டு அங்கீகரிப்பதாக அமைய வேண்டும்.

சமூக மட்டத்தில். மதத்தலைவர்களிடத்தில். பல்கலைக்கழகச் சூழலில். எழுத்தாளர்கள், கலைஞர்களின் பங்களிப்பிலும் பங்கேற்பிலும். சமூக வலைத்தளங்களைப் பொறுப்பாகக் கையாள்வதில். ஊடகங்களில். ஊடகவியலாளர்களிடத்தில். சமூகச்செயற்பாட்டாளர் மத்தியில். அரசியல் தரப்பினர்களால் மனந்திறந்து பேசவேண்டும். சுமூகமான தீர்வை நோக்கிப் போகவேண்டும். இப்படிப் பல இடங்களிலும் தொடர்ச்சியாக நடக்கும் முயற்சியினால்தான் நற்சாத்தியங்களை உண்டாக்க முடியும்.

இது ஒரு திட்டமிடப்பட்ட அவசியமான பணி என்ற உள்ளுணர்வு ஒவ்வொருவருக்குமே இருந்தாற்தான் இதற்கு மாறான தடத்தில் நம்முடைய எண்ணங்களும் நடவடிக்கைகளும் கால் பதிக்காது. நம்முடைய குழந்தைகளின் எதிர்காலத்துக்காக நாம் உழைத்துச் சேகரிப்பதில் முக்கியமானதாக இருக்க வேண்டியது பாதுகாப்பும் அமைதியும். அது இல்லையென்றால் எதையும் நாம் பாதுகாப்பானதாக வைத்திருக்க முடியாது. அந்த அமைதிக்கும் பாதுகாப்புக்கும் அவசியமானது நல்லுறவு. அயலாருடன். அடுத்தவருடன். உலக மனிதருடன். இதுவே இன்றைய...நாளையை விதி... ஆமாம், ஒன்றுபட்டால்தான் உண்டு வாழ்வு. ஆகவே இன ஐக்கியத்தை அனைவரும் ஒன்றுகூடி வலுப்படுத்துவோம்!...

-ஆசிரியர்-

# ஆத்திசூடி விளக்கம்!...




## மனந்தடுமாறேல்....

மனிதனுக்கு மனஉறுதி வேண்டும். திட மனம் கொண்டவர்கள் வாழ்க்கையில் தோல்வியே அடையமாட்டார்கள். நீ ஒரு காரியத்தைச் செய்ய நினைக்கிறாய். அதைச் செய்யத் தொடங்கு முன், "நான் இதை வெற்றியோடு செய்து முடிப்பேன்" என்ற தன்னம்பிக்கை வேண்டும். உறுதி மட்டும் போதுமா?..செய்யும் காரியத்தில் ஈடுபாடும் கொள்ள வேண்டும். அதில் மனம் ஊன்றி நிற்கவேண்டும். உன் சிந்தனையும் செயலும், மேற்கொண்ட அந்தக் காரியத்திலேயே இருக்க வேண்டும்.. வேறு காரியங்களில் கவனம் செலுத்தக்கூடாது. "இக்காரியம் முடியுமோ?.. முயடியாதோ?" என்ற தடுமாற்றம் கூடாது. சந்தேகம் வரக்கூடாது. "முடியுமா முடியாதா" என்ற சந்தேகம் ஏற்படுமானால், மனம் ஒரு நிலைப்படாது. தடுமாறும், கலங்கும், குழம்பும். இதனால் மேற்கொண்ட காரியம் நிறைவேறாமல் போய்விடும்...

## மாற்றானுக்கு இடங்கொடேல்....

மாற்றான் என்றால் யார்?..வேற்று ஆள், வேற்று மனிதன், வேற்று நாட்டவனும்கூட மாற்றான்தான். உங்களோடு கருத்து வேறுபாடுகொண்ட பகைவனையும் மாற்றான் என்று கூறலாம். இத்தகைய மாற்றானான பகைவன் நமக்குக் கெடுதல் செய்யவே முற்படுவான். பலவகையில் உங்களுக்குத் துன்பமும் தொல்லையும் தரத் திட்டமிடுவான். அப்படிப்பட்டவனிடம் நீங்கள் எச்சரிக்கையோடு கவனமாக இருக்க வேண்டும். உங்களுடைய அமைதியான இன்ப வாழ்க்கையை நாசமாக்க முயற்சிப்பான். உங்களுக்குப் பாதகம் செய்ய, எந்த வகையிலும் அவனுக்கு வாய்ப்பளிக்கக்கூடாது. அப்படி அவனுக்கு வாய்பளித்தால் உங்கள் வாழ்க்கை, சந்தோஷம் பாழாகும். ஆகவே உங்கள் பகைவனுக்கு இடம் தராதீர்கள் என்கிறார் ஔவைப்பாட்டி.

# வாக்குண்டாம்.... (மூதுரை) (தொடர்ச்சி)

மடல்பெரிது தாழை மகிழ் இனிது கந்தம்
உடல்சிறியர் என்று இருக்க வேண்டா - கடல்பெரிது
மண்ணீரும் ஆகாது, அதன் அருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகி விடும்...

தாழம்பூ இருக்கிறதே அது பார்வைக்கு மிகவும் பெரிதாக இருக்கின்றது. மிகப்பெரிய மடல்கள். மகிழம்பூவோ பார்வைக்குச் சிறிதாக இருக்கும். வாசனை எதற்கு அதிகம்.? தாழம்பூவுக்கா?..மகிழம்பூவுக்கா?.. மகிழம் பூவுக்குத்தான். கடல் இருக்கிறது. மிகப்பெரியது இருந்தும் என்ன பயன்?..அந்த நீர் எதற்குப் பயன்படும்?..ஒன்றுக்கும் உதவாது. ஆனால் கடற்கரையிலுள்ள ஒரு சிறிய ஊற்றுநீர் (கிணறு) எப்படி இருக்கும்?..குடிப்பதற்கு ஏற்றதாய் இருக்கும். பெரியவர் என்றோ.. சிறியவர் என்றோ..உருவத்தினால் மதிப்பிடக்கூடாது. பெரியவருள் பலர் சிறுமைக் குணமாயிருப்பர். உருவத்தினால் சிறியவர் பலர் பெரும் குணமுடையவராய் இருப்பர்..

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள் - சபை நடுவே
நீட்டு ஓலை வாசியா நின்றான் குறிப்பு அறிய
மாட்டா தவன்நன் மரம்...

கிளைகள், கொப்புகள் ஆகி காட்டிலே நிற்கும் மரங்கள் அனைத்தும் நல்லவையல்ல. இதேபோல சபை நடுவே, கற்றோர் மத்தியிலே ஒரு விடையத்தை வாசிக்கத் தெரியாதனாய் நிற்பவனும் பிறரது உள்ளக் குறிப்பை உணராதவனும் எப்படி இருப்பான். நல்ல மரம் எது?.. காட்டிலே இருப்பதா?..கொப்பும் கிளையும் உள்ளதா?.. இல்லை. பின் ஏது?..நாலுபேர் கூடிய சபையிலே ஒருவர் நீட்டிய எழுத்து ஓலையை வாசிக்க இயலாது நிற்பவனே நல்ல மரம் ஆவான். எழுதப்படிக்க அறியாதவன் பிறர் உளக்குறிப்பை அறியாதவன் நல்ல மரத்துக்கு ஒப்பாவான்..

# ஒழுக்கம் உயர்வுதரும்......

"ஒழுக்கம் விழப்பம் தரும்" என்பது குறள் நெறி. விழப்பம் என்றால் உயர்வு தரும் எனறு பொருள். ஒழுக்கம் வாழ்வில் உயர்வைத் தருவதால் ஒழுக்கத்தை உயிரினும் பெரிதாய் மதித்துப் போற்ற வேண்டும் என்று வள்ளுவர் குறளின் வழியே வலியுறுத்துகின்றார். ஒருவர் தம் வாழ்வில் நன்மையடைய வேண்டுமென்றால் நல் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து வாழ்தல் அவசியமானது. இக்கருத்தையே வள்ளுவர் "நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்" என்று விளக்குகின்றார். நல்லொழுக்கத்தோடு கூடிய உயர்வே நிலைக்கும் தழைக்கும்.

கல்வி கற்கும் மாணவர்களாகிய நாம் ஒழுக்கத்தையும் கல்வியையும் இரு கண்களாகக் கடைப்பிடித்து வாழ்க்கைக் கல்வியைப் பயின்று சிறப்புற வேண்டும். ஒழுக்கத்தைக் காலந்தோறும் பேணிக் காக்க வேண்டும். நம்மை நல்வழிகளில் நெறிப்படுத்தி மேன்மையோடு கூடிய வாழ்வில் தழைக்கச் செய்யும் பண்பே ஒழுக்கம் ஆகும். வாழ்வில் ஒழுங்கைக் கடைப்பிடித்து வாழ்வதே நாம் தலைசிறந்து வாழ வழிவகுக்கும்.. ஒழுங்கு என்பது சாட்சிகள் இல்லாத இடத்திலும் தவறிழைக்காமல் நேர்மையாக நடப்பதாகும்.. இதை முன்னோர் அறநெறிகள், அனுபவங்கள் மூலம் உணர்த்திச் சென்றுள்ளனர். நீதி நூல்களாகவும் எழுதி வைத்துள்ளனர்.

மாணவர்களாகிய நாம் நேர்மையுடனும் பொறுப்புடனும், சமூகப்பொறுப்புக் கொண்டோராகவும் வளரவேண்டும். பெற்றோர்கள், ஆசிரியர்கள், பெரியோர்கள் வழிகாட்டும் பழக்க வழக்கங்களைப் பின்பற்றி அறிவினால் திறமையினால் சிறந்த சிந்தனை கொண்டோராகச் செயற்பட வேண்டும். ஒழுக்கம் என்னும் பழக்கம் நம்மிடம் இருந்தால் மற்றைய நற்பழக்கங்கள் நம்மிடம் தானாகவே வளரும். திரைப்படம், தொலைக்காட்சி, தொலைபேசி போன்ற புறக்கவர்ச்சிகளில் அடிமையாகி நம் வாழ்வை வீணடிக்காமல் உயிரினும் மேலான ஒழுக்கத்தையும், அறிவூட்டும் கல்வியையும் செம்மையாக்கி நல்ல ஒழுக்கம் உள்ளவர்களாக வாழப் பழகிக் கொள்வோம்.

செல்வன் பிரணவன் சுரேஸ்குமார்
தமிழ்மொழிச்சேவைப் பாடசாலை
Essen

# முட்டாள் யார்.......

ஆற்றிலிருந்து வீடு திரும்பிக்கொண்டிருந்தான் முல்லா. அப்போது அவன் நண்பர்கள் இருவர் காலைக் கடன்களைக் கழிக்க ஆற்றுக்குச் சென்றுகொண்டிருந்தனர். அவர்கள் இருவரும் சரியான வடிகட்டிய முட்டாள்கள் என்று முல்லாவுக்குத் தெரியும். இருந்தாலும் ஒரு மரியாதையின் பொருட்டு "காலை வணக்கம்" என்று கூறிவிட்டுச் சென்றான் முல்லா. உடனே ஒருவன் மற்றவனைப் பார்த்துக் கேட்டான்..."காலை வணக்கத்தை உனக்குச் சொல்லாமல் ஏன் எனக்குச் சொன்னான் முல்லா" நீ தானே எனக்கு முன் இருந்த முல்லாவின் நண்பன். இதைக் கேட்ட அடுத்தவன் எரிச்சலானான்.

"நீ ஒரு சரியான முட்டாள் முல்லா எனக்குத்தான் வணக்கம் தெரிவித்தான்" நீ தான் தப்பாக அர்த்தம் செய்துகொண்டாய். என்று கூறினான். உடனே முதலாமவனுக்குக் கோபம் வந்தது. அவர்கள் இருவரும் அப்பிரச்சனை பற்றிக் காரசாரமாகப் பேசிக்கொண்டனர். இருவரும் சரமாரியாகத் திட்டித் தீர்த்துக் கொண்டனர். கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தனர். "இந்தப் பிரச்சனையை முல்லாவிடமே கேட்டுத்தெரிந்து கொள்ளலாமே" என்று இருவரும் முல்லாவிடம் சென்றனர்.

"நீ யாருக்குக் காலை வணக்கத்தைச் சொன்னாய் முல்லா" எனக்கா?..இவனுக்கா?...என்று ஒருவரை ஒருவர் சுட்டிக்காட்டிக் கேட்டனர். முல்லாவோ அமைதியாகக் கூறினான் "உங்களில் யார் ஒருவன் மிகப்பெரிய முட்டாளோ அவனுக்குத்தான் சொன்னேன்" இதைக்கேட்ட இருவரும் முல்லாவைவிட்டு விலகி வந்தனர். அந்த முட்டாள் நான்தான் என்றான் ஒருவன். இல்லை அது நான்தான் என்றான் அடுத்தவன் மீண்டும் அவர்களுக்குள் பிரச்சனை உருவாக ஆரம்பித்தது.

ஆகவே சிலர் எம்மைக் குழப்பி எம்மிடையே பிரச்சனைகளை ஏற்படுத்திவிடுவார்கள். எனவே எக்காரியத்தையும் நமது புத்திகூர்மையுடன் அணுகி வாழப்பழகிக் கொள்வோம்.

செல்வி யூ லிகா கிருஷ்ணன்
நீத் மிஷன் - கிளிநொச்சி

# வீண் பேச்சு........

சோமபுரி என்னும் நாட்டை அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். அவன் காரணமில்லாமல் எப்போதும் வள.. வளவென்று பேசுவான். வீண் பேச்சுப் பேசுவதால் நன்மை விளையாது. தீமைதான் விளையும் என்பதை அரசனிடம் எப்படிச் சொல்வது என்று தயங்கினார் அமைச்சர். வழக்கம் போல அமைச்சர் அரசனுடன் சோலையில் உலாவிக் கொண்டிருந்தார். அப்போது பறவைக் குஞ்சு ஒன்று கத்தியபடியே மரத்திலிருந்து கீழே விழுந்தது. இந்தக் குஞ்சு ஏன் கீழே விழுந்தது?.. என்று அண்ணார்ந்து பார்த்தார் அரசர்.

கூடு ஒன்றில் தாய்ப்பறவை இருப்பது தெரிந்தது. வியப்படைந்து அவர்...அமைச்சரே தாய்ப்பறவை ஏன் இந்தக்குஞ்சைக் கீழே தள்ளியது என்று கேட்டார். வாய்ப்புக் கிடைத்தது என்று மகிழ்ந்த அமைச்சர் அரசே!..இந்தப் பறவைகுஞ்சு தேவையில்லாமல் பேசியது. வீண் பேச்சுப் பேசியதால் இந்த நிலைக்கு ஆளானது என்றார். நீர் சொல்வது எனக்கு விளங்கவில்லை என்றார் அரசர்.

அரசரே!..கீழே விழுந்தது குயில் குஞ்சு. அது காக்கையின் கூடு.காக்கைக்குத் தெரியாமல் குயில் ஒன்று காக்கையின் கூட்டில் முட்டை இட்டது. காக்கை தன் முட்டைகளுடன் சேர்த்து குயிலின் முட்டையையும் அடைகாத்தது. முட்டைகளிலிருந்து காக்கைக் குஞ்சுகளுடன் குயில் குஞ்சுகளும் வெளியே வந்தன.குயில் குஞ்சையும் தன் குஞ்சு என்று நினைத்தது காக்கை. அதற்கும் உணவுகொடுத்துக் காப்பாற்றி வந்தது. இந்தக் குயில்க்குஞ்சு பேசாமல் இருந்திருந்தால் துன்பம் வந்திராது. தேவையில்லாமல் பேசியதால் குரலைக் கேட்ட காக்கை தன்குஞ்சு இல்லை என்பதைப் புரிந்துகொண்டுதான் அந்தக் குஞ்சைக் கீழே தள்ளிவிழத்தியது.

இனி இந்தக்குஞ்சால் காக்கையின் கூட்டிற்குள் சென்று வாழமுடியாது துன்பப்படவேண்டியதுதான். ஆகவே தேவையில்லாமல் பேசுவதால்தான் இப்படிப்பட்ட சம்பவங்கள் வந்து துன்பப்படுவார்கள் என்பதை அரசனும் புரிந்துகொண்டு அளவோடு பேச ஆரம்பித்தார். இனி நான் வீண் பேச்சைப் பேசமாட்டேன் என்றார்.

செல்வி வி திர்சா
நீத் மிஷன் - கிளிநொச்சி

# நட்பின் பெருமை.....

எம் கல்லூரிப் பயணத்தில்
எனக்காக எழுதிய
உனது பக்கங்களை- சில
நேரங்களில்நான்வாசிக்கும்போது
அவை அழகிய நினைவுகளாக
எனக்குப் பரிசளிக்கின்றன!...

உனது தோழமை
உன்னை நினைக்கும் போது
இதழோரம் மலரும் புன்னகையும்
இமையோரம் சிந்தும் கண்ணீரும்
உன்நட்பின் அடையாளங்களாகவே
தெரிகின்றது எனக்கு
நீ எழுதிய பக்கங்களைப் படித்து
முடித்ததும் உன் நட்பின்
உண்மையை உணர்கின்றேன்!..

தோழியே.. ஆனால் நீ
என்னை விட்டுத் தொலைவாகி
சென்றுவிட்டாய் உன்னுடன் கூடி
இருந்த நிமிடங்கள் எல்லாம்
என் கண் முன்னே நினைவுகளாக
நிழலாடுகின்றன-இதயம் உன்னை
எண்ணி அழுகின்றது - உன்
நட்பின் அடையாளமாய் - என்
கண்களில் கண்ணீர்த் துளிகள்
தோழியே!........

செல்வித தவராயினி
"""அருளகம்""" - வவுனியா

# பள்ளிப் பருவம்.....

காலையில் தினம் எழுந்து
பாடம் கற்கப் புறப்படுவோம்
கனிவுடனே பல கலைகள்
கற்றிடுவோம் தினம்..தினம்!...

பள்ளியில் பாலர் நாம் ஒன்றாய்
கூடிடுவோம் - பவ்வியமாய்
பல கதைகள் பேசிச் சிரித்து
விளையாடி மகிழ்ந்திடுவோம்!...

ஆசிரியர் சொற்படி நடந்திடுவோம்
அன்புள்ள பெற்றோருக்கு - நற்
பிள்ளைகளாய் வளர்ந்திடுவோம்
நல்லவர்களாய் உயர்ந்திடுவோம்!.

செல்வி. ச நிவேதா
"""இந்து அன்பகம்""" - வவுனியா

# அடிமை!...

பெண்களை அடிமையாக்க
கலாச்சாரம் பண்பாடு மரபு
என்னும் பல ஆயுதங்கள்!..

# பேதம்!...

பெண் அடங்க வேண்டியவள்
ஆண் அடக்குபவன்
பேதம் நிறைந்ததுதான்
மூத்த குடித்தமிழர் வாழ்வு!..

– சிவா –

# தமிழில்....

01-பூ
02-தடி
03-பந்து
04-கடவுள்
05-கடற்கரை
06-கட்டுமரம்
07-குட்டைப்பாவாடை
08-கண்கட்டுவித்தை
09-அகதிவிண்ணப்பம்
10-விடுதலைப்போராளிகள்
11-அட்டுழியக்காரர்கள்
12-செவிப்புலனற்றவர்கள்
13-கடலுற்பத்திப்பொருட்கள்
14-புகலிடக்கோரிக்கையாளர்கள்
15-அத்துமீறிக்குடியேறியவர்கள்
16-சமாசங்களின்ஒன்றியத்தலைவர்
17-தேசியவனவிலங்குகள்சரணாலயம்
18-கட்டிடப்பொருட்கள்கூட்டுத்தாபனம்
19-மாவட்டபண்பாட்டலுவல்கள்அமைச்சர்
20-அகதிஅந்தஸ்துமறுக்கப்பட்டவர்கள்

இதில் குறிப்பிடப்பட்ட 1 - 20 வரையுள்ள சொற்கள் அனைத்தும் ஒரு சொற்களாகும். இப்படியாகத் தமிழில் பல்லாயிரம் சொற்கள் இருப்பது சிறப்பான விடையமாகும். ஆகவே உங்களுக்குத் தெரிந்த இப்படியான 20 சொற்களை எமக்கு அனுப்பி வைத்தால் அவற்றை எனைய வாசகர்களும் அறிந்துகொள்ள இலகுவாக இருக்கும்....

---

பொன்மொழி:-

போராடி வாழ்வதற்கு வாழ்க்கை ஒன்றும் போர்க்களமல்ல
அது பூ வனம். ரசித்து வாழ்வதே சிறப்பு!....

# சுடுக்கோ புதிர்ப்போட்டி இலக்கம் - 17

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 4 | 2 | | 5 | 7 | | 8 | |
| | | | | | | | | 3 |
| | | | 8 | | 2 | | | |
| 8 | | | | 6 | | | | 2 |
| | 6 | | | 1 | 3 | | | |
| | | 7 | | | | 5 | | |
| | 3 | | | | 4 | | 2 | |
| | 7 | | | 2 | 5 | | | 1 |
| | | 5 | | | | 4 | | |

# சிறுவர் குறுக்கெழுத்துப் போட்டி 108
## (புரட்டாதி-ஐப்பசி-2019)

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

இ – வ:

01–04 இது நெருங்கிவிட்டால் சில மாணவர்கள் பயப்படுவார்கள்.

10–11 மாதங்களில் ஒன்று.

13–16 படித்துப் பெற வேண்டியது இது.

வ – இ:

07–05 நவரத்தினங்களில் ஒன்று.

கீ – மே:

08–04 வகுப்பறையில் காணப்படும்.

13–05 விளையாட்டுப் பொருள்.

மே – கீ:

07–11 மன்னர் தலையில் காணப்படுவது

08–16 அடித்தால் சத்தம் போடும் இசைக்கருவி

(விடைகளை கண்டு பிடியுங்கள். முடியாவிடின். பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்)

# பெரியார் வாக்குகள்....

## இரண்டு!.......(2)

வருவதும் போவதும் இரண்டு-இன்பம், துன்பம்.
வந்தால் போகாத இரண்டு-புகழ், பழி.
போனால் வராத இரண்டு-மானம், உயிர்.
தானாக வருவது இரண்டு-இளமை, முதுமை.
நம்முடன் வரும் இரண்டு-பாவம், புண்ணியம்.
அடக்கமுடியாத இரண்டு-ஆசை, துக்கம்.
நம்மால் பிரிக்கமுடியாத இரண்டு-பந்தம், பாசம்.
நமக்கு அழிவைத்தரும் இரண்டு-கோபம், பொறாமை.
நம் எல்லோருக்கும் சமமான இரண்டு-பிறப்பு, இறப்பு.

கிருபானந்தவாரியாரிடம் ஒருவர் கேட்டாராம் "சாமி" உண்மையான சைவம் யார்?.. உண்மையான அசைவம் யார்?...என்று, வாரியார் கூறிய பதில்..அடிபட்டுத்துடிக்கும் ஆட்டுக்குட்டியைப் பார்த்து கண்களில் நீர் சுரந்தால் அவன் சைவம்!.. வாயில் நீர் சுரந்தால் அவன் அசைவம்!.. என்றார்.

– கிருபானந்தவாரியார் –

நிலத்தின் அடியில் ஓடும் நீர் ஓடை கண்ணுக்குத் தெரியாது. ஆனால் இந்த நீரோடையின் காரணமாக நிலத்தின் மேற்பரப்பு பசுமையாகக் காணப்படும். இப்படித்தான் பெயர் தெரியாத பலர் செய்த நன்மைகளால்தான் இன்னும் நாம் பசுமையாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

– அருட்பெரும் ஜோதி –

Its not how mach we give
but how mach Love we
put into giving........

-Mother Teresa-

# வள்ளுவர் தமிழ்ப் பாடசாலை - டோட்முண்ட் திருக்குறள் மனனப் போட்டி - 2019

திருக்குறள், மனித வாழ்விற்கு வழிகாட்டும் உலகப் பொதுமறை. தமிழர் வாழ்வின் இலக்கணம் திருக்குறள். பெரும் சிறப்புவாய்ந்த திருக்குறளை, நம்பிள்ளைகள் அறிந்தும், படித்தும் பயனடைய வழிகாட்டும் நோக்கில் நடாத்தப்படும் போட்டியே, திருக்குறள் மனனப் போட்டியாகும். இப்போட்டியில் பிள்ளைகளைப் பங்குகொள்ளச் செய்து, திருக்குறள்வழி வாழ வைப்பதற்கும், தமிழ்க் கல்வியில் ஆர்வத்தை ஏற்படுத்துவதற்கும் பெற்றோர்களும், பெரியோர்களும் ஒத்துழைக்க வேண்டுகின்றோம்.

ஒவ்வொரு பிரிவில் பங்குபற்றும் பிள்ளைகளில் கூடிய புள்ளிகளைப் பெறும் மூவருக்கு, முதலாம்,இரண்டாம், மூன்றாம் பரிசுக்குரிய வெற்றிக் கிண்ணங்கள் வழங்கப்படும். பங்குபற்றிய யாவருக்கும் பதக்கங்கள் வழங்கப்படும்.போட்டிகள் 2019.11.16ந் திகதி டோட்முண்ட் நகரத்தில் நடைபெறும். இடம், நேரம் பின்பு அறியத்தரப்படும். முடிவுகள் யாவும் அத்தினமே அறிவிக்கப்பட்டு பரிசுகளும், பதக்கங்களும் வழங்கப்படும். விண்ணப்பங்களைப் பூரணப்படுத்தி போட்டிக்கான அனுமதிக் கட்டணத்தையும் சேர்த்து அனுப்புதல் வேண்டும். (ஒருவருக்கான கட்டணம் 10,- ஒயிரோ. குடும்பத்தில் ஒரு பிள்ளைக்குக் கூடுதலானவர்கள் பங்குபற்றும்போது, முதலாவது விண்ணப்பத்தாரர் தவிர்ந்த
மற்றவர்களுக்கு முறையே 5.- ஒயிரோ) விண்ணப்பம் அனுப்பும்போதே பணம் அனுப்புதல் வேண்டும்.

போட்டிக்கான விபரங்களையும், விதிமுறைகளையும் நன்கு கவனித்து கொள்க. பிரிவுகளுக்கான வயதுக்கணிப்பை, போட்டியின்போது உறுதிப்படுத்த வேண்டும். அந்தந்த வயதுப் பிரிவுகளுக்குரிய குறட்பாக்களையே மனனம் செய்தல் வேண்டும். விண்ணப்பங்களைப் பூரணப்படுத்தி 2019.09.30ந் திகதிக்கு முன் அனுப்பி வைத்தல் வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி:
Valluvar Tamilische Schule
Postfach 1646
59159 Kamen.

**பணம் அனுப்ப வேண்டிய வங்கி விபரம்:**
Ponnthurai Srijeevaghan
Bank:- Ing-Diba AG, Frankfurt am Main
Konto Nr:- 5405356143
Bankleitzahl:- 50010517

**மேலதிக விபரங்களுக்கு**
**02307-299384**

விபரங்கள்: வயது விடயம் - திருக்குறள்

பாலர் பிரிவு
31.10.2014 - 30.10.2016 திகதிக்குள் பிறந்தவர்கள் 4 வயது தொட. 5 வயது வரை இரண்டாம் (2) அதிகாரமான வான்சிறப்பு என்ற அதிகாரத்திலிருந்து முதல் நான்கு குறட்பாக்களை மனனம் செய்து கூறுதல்.
குறளிலக்கம்:- 11 - 12 - 13 - 14

கீழ்ப்பிரிவு
31.10.2012 - 30.10.2014 திகதிக்குள பிறந்தவர்கள் 6 வயது தொட. 7 வயது வரை பத்தாம் (10) அதிகாரமான இனியவை கூறல் என்ற அதிகாரத்திலிருந்து முதல் ஐந்து குறட்பாக்களை மனனம் செய்து கூறுதல்.
குறளிலக்கம்:- 91 - 92 - 93 - 94 - 95

கீழ்ப்பிரிவு கடைநிலை
31.10.2010 - 30.10.2012 திகதிக்குள பிறந்தவர்கள் 8 வயது தொட. 9 வயது வரை இருபத்திமூன்றாம (23) அதிகாரமான ஈகை என்ற அதிகாரத்தின்
ஏழு குறட்பாக்களையும் மனனம் செய்து கூறுதல்.
குறளிலக்கம்:- 221 - 222 - 223 - 224 - 225 - 226 - 227

மத்தியபிரிவு
31.10.2008 - 30.10.2010 திகதிக்குள் பிறந்தவர்கள் 10 வயது தொட. 11 வயது வரை முப்பத்தோராம் (31) அதிகாரமான வெகுளாமை என்ற அதிகாரத்தின்
பத்துக் குறட்பாக்களையும் மனனம் செய்து கூறுதல்.
குறளிலக்கம்:- 301 - 302 - 303 - 304 - 305 - 306 - 307 - 308 -309 - 310

மத்தியபிரிவு கடைநிலை 31.10.2006 - 30.10.2008 திகதிக்குள பிறந்தவர்கள் 12 வயது தொட. 13 வயது வரை
நாற்பதாம் (40) அதிகாரமான கல்வி என்ற அதிகாரத்திலிருந்து ஏழு குறட்பாக்களை மனனம் செய்து பொருளுடன் கூறுதல்.
குறளிலக்கம்:- 391 - 392 - 393 - 394 - 395 - 396 - 397.

மேற்பிரிவு

31.10.2004 – 30.10.2006 திகதிக்குள பிறந்தவர்கள் 14 வயது தொட. 15 வயது வரை
நாற்பத்திமூன்றாம் (43) அதிகாரமான அறிவுடைமை என்ற அதிகாரத்தின் பத்துக் குறட்பாக்களையும் மனனம் செய்து பொருளுடன் கூறுதல்.
குறளிலக்கம்:- 421 - 422 - 423 - 424 - 425 - 426 - 427 428 -429 - 430.

மேற்பிரிவு கடைநிலை

31.10.2002 - 30.10.2004 திகதிக்குள் பிறந்தவர்கள் 16 வயது தொட. 17 வயது வரை
எழுபத்தொன்பதாம் (79) அதிகாரமான நட்பு என்ற அதிகாரத்தின் பத்துக் குறட்பாக்களையும் மனனம் செய்து பொருளுடன் கூறுதல்.
குறளிலக்கம்:- 781 - 782 - 783 - 784 - 785 - 786 - 787 788 - 789 - 790.

அதிமேற்பிரிவு

31.10.1996 - 30.10.2002 திகதிக்குள பிறந்தவர்கள் 18 வயது தொட. 23 வயது வரை
தொண்ணூற்றொன்பதாம் (99) அதிகாரமான சான்றான்மை என்ற அதிகாரத்தின் பத்துக் குறட்பாக்களை மனனம் செய்து பொருளுடன் கூறுவதுடன், நூறாவது (100) அதிகாரமான பண்புடைமை என்ற அதிகாரத்திலிருந்து முதல் ஐந்து குறட்பாக்களை மனனம் செய்து கூறுதல்.
குறளிலக்கம்:- 981 - 982 - 983 - 984 - 985 - 986 - 987 - 988 - 989 - 990. ( பொருளுடன் கூறுதல் )
991 - 992 - 993 - 994 - 995. ( குறள் மட்டும் கூறுதல் )

# குறளும் பொருளும்

கேள்வி: –

411. செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாந் தலை.

412. செவிக்குண வில்லாத போழ்ந்து சிறிது
வயிற்றுக்கு மீயப் படும்.

413. செவியுணர்விற் கேள்வி யுடையா ரவியுணவி
னான்றாரோ டொப்பர் நிலத்து.

414. கற்றில னாயினுங் கேட்க வஃதொருவற்
கொற்கத்தி னூற்றாந் துணை.

415. இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே
யொழுக்க முடையார் வாய்ச்சொல்.

416. எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்.

417. பிழைத்துணர்ந்தும் பேதமை சொல்லா ரிழைத்துணர்ந்
தீண்டிய கேள்வி யவர்.

418. கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியாற்
றோட்கப் படாத செவி.

419. நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
வாயின ராத லரிது.

420. செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்க
ளவியினும் வாழினு மேன்.

# குறளும் பொருளும்

(கற்றவர் சொல் கேட்டல்)

411. செவியினால் கேட்டறியும் செல்வம் செல்வங்களுள் சிறந்தது. அச் செல்வம் செல்வங்கள் எல்லாவற்றிற்கும் முதன்மையானது ஆகும்.

412. செவிக்கு உணவாகிய கேள்விச் செல்வம் இல்லாத போது வயிற்றுக்கும் சிறிது உணவு தரப்படும்.

413. செவி உணவாகிய கேள்வியை உடையவர்கள் பூமியில் இருந்தாலும் தேவருணவுண்ணும் தேவர்களுக்கு ஒப்பாவார்கள்.

414. கற்கவில்லையானாலும் கற்றவர் சொல்லும் சொற்களைக் கேட்டால் தளர்ந்த காலத்தில் அவை ஊன்றுகோல் போலத் துணை ஆகும்.

415. சேற்று நிலத்தில் செல்பவருக்கு ஊன்றுகோல் உதவுவது போல் ஒழுக்கமுடையவரின் வாய்ச்சொற்கள் துன்ப காலத்தில் உதவும்.

416. ஒருவன் சிறிதளவாயினும் நல்ல சொற்களைக் கேட்க வேண்டும். கேட்ட அளவிற்கு அவை நிறைந்த பெருமையைக் கொடுக்கும்.

417. நுட்ப அறிவுடன் அறிஞர்களின் சொற்களையும் கேட்டவர்கள் ஒன்றைத் தவறாக உணர்ந்திருந்தாலும் இழிவுதரும் சொற்களைச் சொல்ல மாட்டார்கள்.

418. கேள்வி அறிவால் துளைக்கப்படாத செவிகள் பிறர் சொல்லும் சொற்களின் ஓசையைக் கேட்டாலும் செவிட்டுத்தன்மை உடையவையேயாகும்.

419. நுட்பமான சொற்பொருள்களைக் கேட்டறியாதவர்கள் பணிவான சொற்கள் உடையவராக இருக்க முடியாது.

420. செவியால் நுகரப்படும் சுவையை உணராமல் வாய்ச்சுவையை மட்டும் உணரும் மக்கள் இறந்தால் என்ன? வாழ்ந்தால் என்ன?..

# காசி ஆனந்தனின் சிந்தனைகள்!...



## கறை:-

கடை....தராசில் பொருட்களை ஏற்றும் போதெல்லாம் தட்டு ஒரு பக்கம் சாய்ந்தது. படிக்கல் இருக்கும் தட்டு மேலேயே நின்றது. உருளைக் கிழங்குகளும் வெங்காயங்களும் இதை உற்றுக் கவனித்தன. ஓ!...இது கொடுமை!..என்று கத்தியது உருளைக்கிழங்கு. வெளியே தலை நீட்டிக்கொண்டிருந்த வெங்காயமும் "இது பச்சைத் திருட்டு" என்று வயிற்றெரிச்சலைக் கொட்டியது. இரண்டும் சேர்ந்து குரலெழுப்பின...

"தராசை முதலில் எடைபோடு"

## புடம்:-

காட்டில் இருந்த மூங்கில் ஒருநாள் கத்தியால் வெட்டப்பட்டது. நெருப்புக் கம்பி தன்னைத் துளைத்த போது "ஐயோ" உடல் புண்ணாகிறதே!.. என்று கதறி அழுதது. "கொஞ்சம் பொறுமையாக இரு" என்று மூங்கிலைப் பார்த்து ஆறுதல் சொன்னது காற்று. மூங்கில் புல்லாங்குழல் ஆனது. மேடையில்...உலகமே மயக்கும் இசையை அள்ளிப் பொழிந்து கொண்டிருந்த புல்லாங்குழலைப் பார்த்து மேனி சிலிர்த்தது காற்று.. அது சொன்னது..

"புண்பட்டவன் பண்பட்டவன்"

# நாட்டின் சொத்து.......

(படித்ததில் பிடித்தது)

ஜெர்மனிக்கு சுற்றுலா சென்ற இரண்டு இந்தியர்கள் ஒரு உணவகத்தில் சாப்பிட்டு முடித்து எழுந்தார்கள்...இவர்கள் தட்டுகளில் கால்பகுதிக்கு மேல் உணவு சாப்பிடப்படாமல் அப்படியே விடப்பட்டிருக்க... இருவரும் பில் தொகையை உணவு பரிமாறியவரிடம் செலுத்த முயன்ற போது... அவர்களின் பக்கத்து மேசையில் சாப்பிட்டுக் கொண்டிருந்த இரு மூதாட்டிகள், உணவக உரிமையாளரிடம் இவர்களை அழைத்துச் சென்று... சாப்பிடாமல் உணவை விரயம் செய்து விட்டுச் செல்வதற்கு தங்கள் அதிருப்தியையும், எதிர்ப்பையும், வருத்ததையும் தெரிவித்திருக்கிறார்கள்...

அந்தக் கடை உரிமையாளர், "ஏன் உணவை இப்படி விரயம் செய்தீர்கள்?" என்று மென்மையாகக் கேட்க, உடனே நம்மவர்கள், "நாங்கள் ஆர்டர் செய்ததற்கு கட்டணத்தை செலுத்தி விட்டோம், அதுபற்றி நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்? அது எங்கள் உரிமை..." என்று பேசியிருக்கிறார். அந்த வயதான மூதாட்டிகளுக்குக் கோபம் வந்து, உடனே யாருக்கோ தொலைபேசியில் பேச... சில மணித்துளிகளில் சீருடையில் வந்த அதிகாரி கடுமையான குரலில், 'எப்போதும் உங்கள் தேவைக்கேற்ப ஆர்டர் செய்யுங்கள்... பணம் உங்களுடையதாக இருக்கலாம். ஆனால் அந்த உணவுப் பண்டங்கள் இந்த நாட்டின் தேசியச் சொத்து...

உலகம் பல பற்றாக்குறைகளைக் காணும் இக்காலகட்டத்தில் இப்படி உணவுகளை விரயம் செய்வது பகுத்தறிவுக்கு முரண் அல்லவா? எனவே இனி எங்கும் இப்படிச் செய்யாதீர்கள். என்று அறிவுறுத்தி விட்டு 50 யூரோ பணம் அபராதம் விதித்திருக்கிறார். நம்மவர்கள் அபராதம் செலுத்தி விட்டு, மன்னிப்பு கேட்டிருக்கிறார். நண்பர்களே! ஜெர்மன் அதிகாரி சொன்னது, உணவை விரயம் செய்கிற அனைவருக்கும் பொருந்தும். "பணம் நம்முடையதாக இருக்கலாம் ஆனால் உணவு நாட்டின் சொத்து" என்ற கருத்து விதை நம் இல்லங்கள் தோறும் உள்ளங்கள் தோறும் விதைக்கப்பட வேண்டும்... உணவுப் பொருட்கள் விரயம் செய்வது தேசிய குற்றமாகக் கருதப்பட வேண்டும்...

# குறுக்கெழுத்துப்போட்டி-171
## (புரட்டாதி-ஐப்பசி 2019)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

இ-வ

01-06 அகிலம் போற்றும் அன்னை.
12-14 நீர் நிலைகளில் கிடைக்கும்.
22-24 வீட்டில் ஒருவர்.
24-28 சைவக்கடவுள் இவர்.
44-47 இதற்கு விலை இல்லை என்றும் சொல்வார்கள்.

வ-இ

12-09 ஒன்று கூடி இதை தோற்றுவிப்பார்கள்.
18-16 வீடு கட்டவும் பயன்படும்.
21-19 வலு, தைரியம் என்றும் கூறலாம்.
35-33 நம் ஊர் வீடுகளில் காணப்படும் ஊர்வன ஒன்று.
49-47 இதை வளர்த்தால்தான் உயிர் வாழலாம் என்று கூறுவார்கள்.

கீ.மே

04-25 வாரத்தில் ஒரு நாள்.
21-07 இலக்கியத்தில் ஒருத்தி.
38-24 பறக்கும் உயிரினம்.
41-34 உறுப்புக்களில் ஒன்று.
44-23 நம்ம ஊர் பாவனைப் பொருள் இது.

மே-கீ

01-43 இலங்கையில் ஒரு நகரம்.
18-39 களவெடுப்பவளுக்கு ஒத்த ஆண்பாற்சொல்.
35-42 நம் நாட்டு வடபகுதியின் தேசிய மரம்.
40-47 கோவில் திருவிழாக்களில் பவனிவருவது.

(விடைகளை கண்டு பிடியுங்கள். முடியாவிடின். பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்)

# குழந்தைகள் அளவுக்கதிகமாக தொலைக்காட்சி பார்க்கிறார்களா?........

பெரும்பாலான வீடுகளில், டி.வி நிகழ்ச்சிகளைப் பெற்றோர்களுடன் சேர்ந்து குழந்தைகளும் பார்க்கிறார்கள். இது, குழந்தைகளின் உடல் மற்றும் மனநலனை எப்படியெல்லாம் பாதிக்கும் என்பதை விளக்குகிறனர் குழந்தைகள் மனநல மருத்துவர்கள்.

மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகள் தொடர்ந்து டி.வி-யில் பார்க்கும் விஷயங்களுக்குப் பழக்கப்பட ஆரம்பிப்பார்கள். டி.வி பார்த்துக்கொண்டே சாப்பிடும் பழக்கத்துக்கும் சில குழந்தைகள் ஆளாவார்கள். இதனால், உடல் எடை அதிகரிக்கலாம். ஒருவரை ஒருவர் தாக்கிக்கொள்வது போன்ற நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து பார்க்கும் குழந்தைகள் அதை நடைமுறையிலும் பின்பற்ற ஆரம்பிப்பார்கள். எதற்கெடுத்தாலும் பயப்படும் குழந்தைகளுக்கு பயம் இன்னும் அதிகரிக்கும் பள்ளி செல்ல மறுப்பது, தனியாக ஓர் அறைக்குள் செல்ல மறுப்பது போன்றவற்றில் ஈடுபடுவார்கள். எனவே, மூன்று வயதுக்கு முன்னர் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக் குழந்தைகளுக்கு அறிமுகம் செய்வதைப் பெற்றோர்கள் தவிர்க்க வேண்டும்.

குழந்தைகள் படிக்கும்போது அவர்களைத் தனியறையில் அடைத்துவிட்டு பெற்றோர்கள் தொலைக்காட்சி பார்க்கும் பட்சத்தில், குழந்தைகளின் முழு கவனமும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலேயே இருக்கும். இதனால், அவர்களுக்குப் படிப்பின் மீது நாட்டம் குறையலாம். சிறு வயதிலேயே அழுகை, சந்தேகம், பொறாமை, கோபம், பழிவாங்கும் உணர்வுகளைத் தொலைக்காட்சியின் மூலம் உள்வாங்கும் குழந்தைகள் இப்படிப்பட்ட எதிர்மறை குணங்களுடனேயே வளர்வார்கள்.

மேலும், இந்த குணங்களை மற்றவர்களிடமும் அதிகமாக வெளிப்படுத்துவார்கள். வயதுக்கு மீறிய படங்கள், நிகழ்ச்சிகளைப் பார்க்கும் குழந்தைகளுக்கு இளம் வயதிலேயே பாலுணர்வு சார்ந்த பிரச்சினைகள் ஏற்பட்டு, அவர்கள் தவறான பாதையில் செல்லவும் வாய்ப்பிருக்கிறது. அதிகமாக விளம்பரங்களைப் பார்க்கும் குழந்தைகள், அவற்றில் வரும் பொருள்களுக்கு ஆசைப்படுவார்கள். இது நாளடைவில் அடம், பிடிவாதம் போன்ற குணங்களாக மாற வாய்ப்பிருக்கிறது.

குழந்தைகள் ஓவரா டி.வி பார்க்கிறார்களா? பெற்றோருக்கான ஆலோசனைகள் மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குப் பெற்றோர்கள் தொலைக்காட்சியை அறிமுகம் செய்யக் கூடாது. மூன்று வயதுக்குப் பின்னர் குழந்தைகளின் அறிவை மெருகேற்றும் நிகழ்ச்சிகளைப் பார்க்க அனுமதிக்கலாம். குழந்தைகளை ஒரு நாளைக்கு ஒரு மணி நேரத்துக்கு மேல் எந்தக் காரணம் கொண்டும் டி.வி பார்க்க அனுமதிக்காதீர்கள்.

குழந்தைகள் விளம்பரங்களைப் பார்த்து ஆரோக்கியமற்ற பொருள்களைக் கேட்டு அடம்பிடிக்கும்போது, இது தவறு, இது ஆரோக்கியத்துக்கு ஏற்றதல்ல, என்பதைப் பொறுமையாகப் பேசிப் புரியவையுங்கள். குழந்தைகள் வளர்ந்து பதின்ம வயதை எட்டும்போது, அவர்கள் என்னென்ன நிகழ்ச்சிகளைப் பார்க்கிறார்கள் என்பதைப் பெற்றோர்கள் கவனிக்க வேண்டியது அவசியம்.

தொலைக்காட்சி தவிர்த்து தோட்டக்கலை, புத்தகம் வாசிப்பு என எதிலெல்லாம் குழந்தைகளின் கவனத்தைத் திசைதிருப்ப முடியும் என்பதைப் பெற்றோர்கள் திட்டமிட்டுக்கொள்வது நல்லது.டி.வி பார்ப்பதற்கென குழந்தைகளுக்கு ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி, மற்ற நேரங்களில் அவர்களை வேறு செயல்பாடுகளில் கவனம் செலுத்தவைப்பது நல்லது. கூடுமானவரை வீட்டிலிருக்கும் பெரியவர்கள் டி.வி பார்க்கும் நேரத்தைக் குறைத்துக்கொண்டாலே இது போன்ற பிரச்சினைகளைத் தவிர்த்துவிட முடியும்.

குழந்தைகள் ஓவரா டி.வி பார்க்கறாங்களா? கண்களை கவனியுங்கள்! குழந்தைகள் அதிக நேரம் டி.வி பார்ப்பதால் கண் சார்ந்த பிரச்சினைகள் ஏற்படுகின்றன. வீட்டில் டி.வி இருக்கும் இடத்திலிருந்து பத்து அடி தூரத்தில் அமர்ந்துதான் பார்க்க வேண்டும். இல்லையெனில், தூரத்துப் பார்வை பிரச்சினை ஏற்படும்.அதிக நேரம் டி.வி பார்க்கும் குழந்தைகளுக்குக் கண்கள் வறட்சியடைந்து, அலர்ஜி, அரிப்பு ஏற்பட வாய்ப்பிருக்கிறது. எத்தனை மணி நேரம் டி.வி பார்த்தாலும், அரை மணி நேரத்துக்கு ஒரு முறை கண்களுக்குப் பத்து நிமிடங்கள் ஓய்வு கொடுக்க வேண்டியது அவசியம்.

உங்கள் குழந்தைகள் கண் சார்ந்த பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டிருந்தால், டிவி-யை மிக அருகில் சென்று பார்க்க ஆரம்பிப்பார்கள். அடுத்தகட்டமாக கண்களைச் சுருக்கிப் படிப்பார்கள். இந்த அறிகுறிகள் தெரிந்தால், மருத்துவர்களிடம் ஆலோசனை பெற வேண்டியது அவசியம்.

# நவராத்திரி விரதம்......

உலகம் முழுவதும் பரந்துபட்டு வாழும் இந்துக்களால் அனுட்டிக்கப்படும் சக்திக்குரிய விரதங்களில் மிகமுக்கியமானது நவராத்திரி விரதமாகும். நவம் என்பதன் பொருள் ஒன்பதாகும். இராத்திரி என்பது இரவு. எனவே நவராத்திரி என்பது ஒன்பது இரவுகளைக் குறிக்கும். இது புரட்டாதி மாதத்தில் அமாவாசையைத் தொடர்ந்து வருகின்ற பிரதமைதினத்தன்று கும்பம் வைத்து பூசை ஆரம்பிக்கப்படும். பத்தாவது நாளை விஜயதசமி என அழைக்கப்படுகின்றது.

நவராத்திரி என்பது பெண்களுக்கும் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் உரிய சிறப்பான விரதமாகும். முதல் மூன்று நாட்களும் வீரத்தை வேண்டி துர்க்காதேவியை வழிபடுவர். அடுத்த மூன்று நாட்களும் செல்வத்தை வேண்டி இலட்சுமியை வழிபடுவர். இறுதி மூன்று நாட்களும் கல்வி, அறிவு, சகலகலை ஞானங்கள் என்பனவற்றை வேண்டிச் சரஸ்வதிதேவியை வழிபடுவர்.

இந்நாட்களில் சர்க்கரைப்பொங்கல், கடலை, வடை, மோதகம், அவல், பால், கற்கண்டு, பழவகைகளையும் வைத்து வழிபடுவர். மேலும் இத்தினங்களில் சக்திக்குரிய பாடல்களையும் பஜனை செய்து ஒன்பது நாட்களும் பாடுவர். நவராத்திரிப் பூசையானது ஆலயங்களில் பாடசாலைகளில் தொழில்செய்யும் இடங்களிலும் கொண்டாடப்படும். நவராத்திரியின் ஒன்பதாம் நாளாகிய மஹா நவமியன்று வீடுகளில் பூசை நடைபெறும். மாணவர்கள் தமது பாடப் புத்தகங்களையும் கலைஞர்கள் கலை உபகரணங்களையும் தொழில் புரிவோர் தமது தொழில் உபகரணங்களையும் அத்துடன் நைவேத்தியங்களையும் தேவியின் பூசையில் வைத்துத் தேவியை வழிபடுவர். இவற்றை விஜயதசமி அன்றுதான் பாவிப்பார்கள்.

துர்க்காதேவி மகிசன் என்னும் அரசனுடன் ஒன்பது இரவுகள் போரிட்டு பத்தாம்நாள் மகிசனை வெற்றிகொண்டாள் என்றும் அந்தப் பத்தாம் நாளே விஜயதசமி என்று புராணக்கதை கூறுகின்றது. இந்த வெற்றி நாளில்தான் குழந்தைகளுக்கு ஏடு தொடக்குதல், புதியகலை வகுப்புகள், புதிய தொழில்களை ஆரம்பிப்பது வழக்கமாகும். விஜயதசமி அன்று ஆலங்களில் வாழைவெட்டு நிகழ்வும் இடம்பெறும். ஆகவே இந்துக்களாகிய நாம் இந்த விரதத்தை அனுட்டித்து வீரம், செல்வம், கல்வி ஆகிய மூன்று செல்வங்களையும் பெற்றுச் சிறப்புடன் வாழ்வோம்!...

செல்விசாமினி சிவதாசன்
தமிழ்மொழிச்சேவை பாடசாலை – எசன்

## உத்தமனாய் வாழ்ந்திடவே......

விஞ்ஞான வளர்ச்சியில்
வித வித சிந்தனைகள்
அஞ்ஞரனம் அஞ்சிட
ஆங்காங்கே அலுவல்கள்.

எஞ்ஞானம் எப்படியும்
நம்ஞரனம் மாறாது
நன்றியுடன் பார்ப்போம்
நடராஜன் சேவடியே.

மக்கள் மனதில்
பலகோடி ஆசைகள்
அதனால் விளைந்தது
அதிக துன்பங்கள்.

இருந்தும் மாறவில்லை
இவரது மனங்கள்
இதனால் உழலுகிறார்
ஊழ்வினை செயல்கள்.

எது எப்படியோ போகட்டும்
நாம் வாழ்வோம் மனிதராய்
ஊழ்வினை களைந்து
நாமும் உத்தமராய் வாழ்ந்திடவே.

கெங்கா ஸ்டான்லி.

### தேர்தல்!...

தேர்தல் அரசியலில் மட்டுமல்ல
தமிழர்களின் சைவக்
கோவில்களிலும் தேர்தல் அதிகாரி
யார் அந்த ஆண்டவன் முருகன்!...

### போதனை!...

இளவயதுத் திருமணம்
ஆரோக்கியத்திற்குக் கேடு
இடித்துரைத்த கிழட்டு
வாத்தி மாணவிகளுடன் சல்லாபம்!...

### மோகம்!...

குறை மாதத்தில் பிரவசம்
நிறை குறைந்த பிள்ளை
அலறித் துடிக்கும் தாய்
அடுத்தவளின் மோகத்தில் தந்தை!...

### திட்டம்!...

அரசின திட்டம் அழகானது
எல்லோருக்கும் வீடு - இன்றும்
கோழிக்கூட்டு வீடுகளில்தான்
கோலம் மாறாத மலையகவாழ்வு!..

– சிவா –

# மனித ஜென்மம்.......

-கவி மீனா-

கரையும் காகமும் கூடி வாழது
இரையை கண்டால் கா கா என
தன் இனத்தைக் கூட்டியே
கொடுத்து உண்ணுது
பறவைக் கூட்டம் ஒன்றன் பின்
ஒன்றாய் பறந்து போகுது
இதில் யார் தலைவன்
என்பது தெரியாமலே!...

ஒன்றை ஒன்று பிடித்து தின்னும்
விலங்கு கூட பகிர்ந்து உண்ணுது
போகும் போதும் கூட்டமாய்போகுது
மனித இனம் மட்டும் காலை வாரி
முதுகிலை குத்தி துரோகிகளாய்
வாழ நினைக்குது
கணவன் மனைவி ஆனால் கூட
ஒற்றுமையின்றி நீ நான்
என்று அடிபட்டு பிரியுது!...

மலையையும் அருவியையும்
படைத்த இறைவன்
இந்த மானிட ஜென்மத்தை
ஏன் படைத்தானோ?
மலை அருவி ஓடும் நாட்டில்
எங்கும் குருதிசிதறி ஆறாய் ஒடுது
மானிடர் வாழ்வில் துன்பம் பெருகி
கண்ணீர்கூட அருவிபோல் பாயுது!..

எல்லா உயிர்களும் ஒற்றுமையாய்
வாழ்கையில்மனித ஜென்மம்மட்டும்
பணத்துக்கும் காமத்துக்கும்
மண்ணுக்கும் பொன்னுக்குமாய்
அடிபட்டு பிணமாய் போகுது!...

# எங்கே!...எங்கே!...

செவ்வந்திப் பூவுடனே பூத்திட்ட
செங்கதிரோனும் செங்காந்தளும்
எங்கே ?
செங்கழநீரும் குவளையும்
செவ்வாம்பலும் மலர்ந்த எம்
குளங்கள் எங்கே ?
செக்கச்செவேல் என்று
செம்பருத்தி பூத்த எம் முற்றம்
எங்கே ?
செந்நாப் புலவோரும் உள
உரவோரும் செந்தமிழீழத்தில்
எங்கே ?
செம்மொழியாம் தமிழ்மொழியின்
செல்வக்களஞ்சியமான யாழ்
நூலகம் எங்கே ?
செம்மாப்புடன் பரந்திருந்த
செழுமையான தென்னந்
தோப்புகள் எங்கே ?
செங்கோலாட்சி புரிந்திட்ட
செல்வந்த வேந்தன் எங்கே ?
செல்வமெல்லாம் கொண்ட
செந்தமிழ்மண்ணில் வாழ்ந்த
தமிழன் எங்கே ?
செல்லுமிடம் அறியாது
சென்றுவிட்டான் உலகெலாம்
சிதறுண்டு
செந்தமிழ் மண்ணின்
செல்வங்களை விட்டுவிட்டு ...!

-தேசா-

## மூலதனம்....

தேவைக்கு ஏற்ப தேவைப்படும்
தேசங்கள் முழுதும் தேடப்படும்
மூலப்பொருளாய் மூலதனம்
முதலீடாகும் முழுஉலகும்
வாழ்வுக்கும்இதுவேஅத்திவாரம்
வருமானத்திற்கும் வாழ்வுதரும்
உறவுக்குள் உரிமைக்
குரல் எழுப்பும்
நல் நட்புக்கும் நம்பிக்கை
உரம் கொடுக்கும்
அறிவுக்குகல்வியாய்அடிபதிக்கும்
அன்புக்கும் இதுவே
அடிப்பலம் கொடுக்கும்
காலத்திற்கு நேரம் மூலதனம்
கவிதைக்கும் கருவே மூலதனம்
இன்றைய சூழலின் எழுச்சிக்கு
ஊடகப் பணிகள் மூலதனம்
ஒற்றுமைக்குரலைஒன்றிணைக்க
ஆற்றிடும் அளப்பெரும்
சேவைகள் உயர்வுபெறும்
காத்திடம் அறிந்துகருக்கொண்டு
காரியம் ஆற்றிடும் ஆளுமையும்
ஒருவரின் முன்னேற்ற
முனைப்புக்கு மூலதனம்
பணம் என்ற ஒன்று மட்டுமல்ல
பற்பல வளங்களும் மூலதனம்
உயிருக்கு சுவாசம் மூலதனம்
உடலுக்கு உயிரே மூலதனம்
ஆரோக்கியமே அனைத்திற்கும்
மூலதனம்
அன்பும் அறனும் பொக்கிஷங்கள்
முதலீட்டுவாழ்வோம் மூலதனமாய்.

வசந்தா ஜெகதீசன்

## உயிர் வரை இனித்தாய்.....

உயிர் வரை இனித்தாய்
உணர்வுகளுடன் சங்கமித்தாய்
உறவாக நீ வருவதற்கு
உரிமையுடன் நினைக்கின்றாய்
உன்னிடம் மயங்கச் செய்கிறாய்
உலகையும் மயக்க வைக்கிறாய்
உன்னாலே இயங்கவும் விடாய்
உயிரினில்வந்து ஒட்டிக்கொள்கிறாய்
உன்னைநான்உணர்ந்து கொண்டேன்
உனக்காக வாழப்போகிறேன்
உயிரினின் உயிராக மாறப்போகிறேன்

## இன்று நேற்றல்ல....

இன்று நேற்றல்ல
நேற்று இன்றல்ல
நாளையும் இன்றல்ல
இன்றும் நாளையல்ல
நாளும் மாறும் காட்சிகள் பல
நடுவில் நாம்காணும்காட்சிகள் சில
போகும் பாதை வெகு தூரம்
புதிதாய் நாளும் புதுப்புது அறிமுகம்
புன்சிரிப்புடன் பிரிபவர் சிலர்
புண்படுத்திவிட்டுப் பிரிபவர் பலர்
வாழ்வு மட்டும் நம் கையில்
வாழ்ந்து முடிப்பதும் நம் கையில்
வாழ்க்கை வாழ்வதற்கே
வாழ்வோம் நலமாய் நமக்காகவே!...

மீரா குகன்

# தாவணிகளை அவசர புடவையாக்காதீர்!..

நெடுந்தீவு முகிலன்

குழந்தை குமரி ஆனதும் தங்களிடம்
ஒரு தேவதை இருக்கிறாள் என்று
ஊருக்கு எல்லாம் அழைப்பு வைத்து
ஆடம்பரமாய் சடங்குகள் முடிகின்றது!...

முடி சிக்கு எடுக்காமலே ஓரங்களில் இரட்டை
பின்னலோடு திரிந்த சின்னஞ் சிட்டுக்குருவி
வயதுக்கு வந்ததும் கூந்தலை விரித்துவிட்டு
அழகு பார்க்கிறது சின்னப் பெண்ணு!..

பல்லு விளக்காமலே பள்ளிக்கூடம்
போனது நினைவில் இல்லை
இப்போது பால்க்காரன் வந்தாலும்
கண்ணாடி பார்த்து விட்டுத்தான்
கதவு திறக்க வருகிறது!...

அம்மாமேல் கால் போட்டுப் படுத்த பிள்ளை
தனியறையில் தொலைபேசியோடு சிரிக்கிறது
உடம்பில் உணர்வில் மாற்றம் வந்துவிட
எதைக் கேட்டாலும் வெட்கம் தருகிறது!...

மழை வந்தால் முற்றத்தில் கூட்டமாய்
காகிதத்தில் கப்பல் விட்ட கதை மறந்து
மொட்டை மாடிக்குப் போய் தனியாய் லேசாக
நனைந்து பாட்டுப் பாடும் ஆசை வருகிறது!..

தன்னைத் தானே ரசிக்கும் அழகிய
பருவம் இது- ஆனால் இந்தக் கனவை
கொஞ்ச நாளிலே கலைத்து - குடும்பம்
ஒரு கலியாணம் கட்டிக் கொடுத்து
அவளைப் பெரிய மனிசி ஆக்கி விடுகிறது!..

தாவணிகளை அவசர புடவைளாக்காதீர்கள்
விவைில் விதவைகளாகி விடுவார்கள் - சிலவேளை
விரைவிலேயே விவாகரத்தும் கேட்டுவிடுவார்கள்!...




## மண் 196 - அட்டைப்படக் கவிதை

எண்ணங்களை படைப்பதும் இலக்கியமாய் வடிப்பதும்
என்றைக்கும் இலகுவாய் எல்லோர்க்கும் எளிதில்லை
வண்ணங்களைக் குழைத்து வரைந்திடும் ஓவியங்கள்
வகைப்பட்டு வருவதற்கு பயிற்சியின்றி வாய்ப்பில்லை.....

கிண்ணத்தில நிரப்பிவைத்த தேன்கலந்த பசும்பாலாயக்
கீதத்தேடு நாதம் கலந்து எமைக் கிறங்கிட வைப்பதில்லை
உண்ணத்தரும் அமுதத்தில் உள்ளன்பு பாசம் கலந்து
உணர்வோடு ஊட்டுகின்ற அன்னைக்கு இணையேயில்லை.....

திண்ணமாய் எழுகின்ற சிந்தனையைத் திரட்டிவைத்து
தீந்தமிழ் இலக்கியமாய் தொகுத்திடுதல் இலகுவில்லை
கண்ணையும் கருத்தினையும் கலந்துநிற்கும் தம்பதியர்
கலைவடிவத்தில் ஒன்றித்தல் காலத்தின் சேர்ப்பிலில்லை.....

மண்ணையும் மக்களையும் மனமொத்து ஆதரித்திடவே
மாற்றுக்கருத்தின்றி நேசித்தல் மாண்பின்றி வேறில்லை
உண்மையும் நேர்மையும் உடன்பட்ட இருவருழைப்பிலும்
ஊறில்லா வாழ்வுவாழ உளமாரவாழ்த்துதல் தவறில்லை.....

அம்பலவன் புவனேந்திரன்

# மகாகவிபார(தி)தீ..!

நேர்கொண்ட பார்வையாய் நெஞ்சில் உறுதியாய்
நிறுவிய எழுத்துக்களில் நிமிர்ந்ததே கூனிய வில்
சோர்வின்றி சுழன்றடித்த புயலொன்று சுருங்கிய
சோகத்தை எடுத்துச்சொல்..!

ஏர்கொண்டு மனங்களை எழுத்தினால் பண்படுத்திய
ஏற்றத்தின் உதாரணமாய் இறுமாப்பில் எழுந்துநில்
கார்மேகக் கண்ணன்பாட்டும் காதலில் பராசக்தியும்
கற்கண்டாம் கண்டுகல்..!

கூர்அம்பு வரிகளாய்க் குவலயத்தின் தமிழ்க்குரலாய்
கூவியதே குயில்ப் பாட்டாய்க் குவலயத்தில் பரந்து
வேர்கொண்ட அவன்வரிகள் விழுதான கவிதைகள்
விருச்சமாய் தாங்கும் விரிந்து..!



நார்தொடுத்த மலர்சரத்தை நாமவர்க்காய்ச் சூட்டிட
நறுமணத்தை இழந்திடுவது நலமிலையென எழுது
பார்போற்றும் பாவலன் பைந்தமிழ்ப் பாரதியைப்
பாடிடாதவர் கவிதையே பழுது..!

யார்தடுத்தும் அஞ்சிடாது யமனையே எதிர்த்தன்று
யாதியை எரித்தவரை ஆராதிக்க அனுதினம் நினை
போர்மூண்ட பொழுதினிலும் புதியதேசம் புலர்ந்திட
பூத்தவனுக்கு கவியொன்று புனை.!

ஊர்தோறும் பள்ளிகளில் உயர்ஞானக் கல்விதனை
ஊட்டிய தமிழுணர்வின் உரத்தோடுநீயும் எழு
தேர்ஏறித் தமிழ் உலகின் தேசமெங்கும் படரவிட்ட
தேவனைப் போற்றித் தொழு.!

– அம்பலவன் புவனேந்திரன்.

# சிற்பியின் கையில்....

-கவி மீனா-

ஒரு சிற்பியின் கையில் கிடைக்கும் கல்லு அவனது கை வண்ணத்தில்தான் அழகான சிற்பமாக வடிவம் பெறுகிறது. சிற்பியின் திறமையில்தான் சிற்பத்தின் அழகு தெரியும் சிற்பிக்கு சிற்பத்தை செதுக்க தெரியாவிடில் கல்லு அழகு இழந்து குண்டும் குழியுமாக உடைந்த தோற்றத்தில்தான் இருக்கும்! இது போலத்தாங்க ஒரு நல்ல பெண்ணின் கையில் கிடைக்கும் ஒரு அழகிய குணமான ஆண்மகனை அவள் சிற்பம் போலே செதுக்கி மென் மேலும் வல்லவனாக நல்லவனாக மாற்ற முடியும்,

அவனுடைய பெருமையும் சிறப்பும் ஊருக்கே தெரிய வரகூடும். அது ஒரு குணம் கெட்ட பெண்ணின் கையில் அகப்பட்டால் ஆலையில் அகபட்ட கரும்பாக அவனை பிழிந்து சாறு எடுத்து சக்கையாக்கி துப்புற பெண்ணும் உலகிலே இருக்கதான் செய்கிறாள்!

இதைப் போலதான் ஒரு அழகிய இளமங்கையை திருமணம் செய்கிற குணம் கெட்ட ஆண்மகனாலே குடும்பம் என்னும் கோயிலிலே குத்து விளக்காய், அந்த வீட்டில் தேவியாக வாழ நினைத்து வரும் அமைதியான குணவதியைக் கூட காளியாக மாற்றி விடுகிறான் தனது கெட்ட அகங்காரம் பிடித்த குணத்தாலே!


இது ஆணுக்கும் பெண்ணுக்கும் சமமானது கல்லை சிற்பமாக செதுக்கவும் உடைத்து குண்டும் குளியுமாக்கி எறிவதும் சிற்பியின் செயல்பாடு போலேதான், இந்த மனித வாழ்வில் நல்லதொரு ஆணை குணம் கெட்ட பெண்ணும் சீரழித்து விடுவாள், அவனது இளமையும் அழகும் தேய்ந்து மூப்பும் முதுமையும் சேரும் வரை ஆட்டிப் படைக்கும் பெண் வடிவில் பேய்களும் உண்டு உலகிலே!

நல் இளமங்கையின் வாழ்கையில் குணம் கெட்ட அரக்கன் வந்தால் அவனது ஆணவத்தாலும், அடக்கு முறையாலும், சந்தேகத்தாலும், பொறாமையாலும் அவளை நித்தம் நித்தம் வருத்தி சொல்லாலும் செயலாலும் வறுத்து எடுத்து அவளது வாழ்வைச் சீர்குலைத்து விடுவான். நல்லவன் கையில் கிடைத்த கல்லு வீடாக குறைந்தது ஒரு படிகட்டாக மாறுவது சிற்பியின்

கையில் கிடைத்த கல்லு சிற்பமாக மாறுது ஆனால் சில குணம் கெட்டவன் கையில் கிடைத்த கல்லு நாய்க்கு எறியதான் உதவுது வாழ்கையும் ஒன்றே! குணம் கெட்டவர்களின் கையில் அகபட்டு சிதைந்து மடியுது பலரது வாழ்க்கை!..

-----------------------

கயானா நாட்டு பிரதமர் மோசஸ் வீராசாமி நாகமுத்து ஒரு தமிழர்.. உலகிலேயே தமிழர் ஒருவர் ஒரு நாட்டுக்கு பிரதமர் பதவி வகிப்பது இதுவே முதல்முறை..




அதிகம் பகிர்ந்து தமிழன் பெருமையை நம் நண்பர்களுக்கு தெரியபடுத்துவோம்

# விமர்சிப்பவர்களே!... ஒவ்வொரு நாளும் இந்நிகழ்ச்சியில் மூழ்கிப் போகின்றார்கள்!......




– கௌசி –

இன்று தமிழர்கள் வாழும் நாடுகளில் பரவலாகப் பேசப்படும் ஒரு நிகழ்ச்சி Bigg Boss. இந்நிகழ்ச்சி எம்முடைய தமிழ்க் கலாச்சாரத்தை சீர்கெடுக்கும் நிகழ்ச்சி, வேலையில்லாதவர்களே இந் நிகழ்ச்சியைப் பார்க்கின்றார்கள் என்று பலரும் விமர்சனங்களைத் தந்தாலும், விமர்சிப்பவர்களே ஒவ்வொரு நாளும் இந்நிகழ்ச்சிக்குள் மூழ்கிப் போகின்றவர்களாகக் காணப்படுகின்றார்கள் என்பது உண்மையே.

என் பார்வையில் இந்நிகழ்ச்சி மனித மனங்களைப் பற்றிய ஆச்சரியத்தையே கொண்டு வருகின்றது. பல்வேறுபட்ட துறைகளிலுள்ள, பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்குள் வாழ்ந்த, பல்வேறுபட்ட குணாதிசயங்களுக்குள்ள மனிதர்களை ஒரு வீட்டுக்குள் 100 நாள்கள் அவர்களுக்குப் பிடித்த துறைகளுக்கான பொருள்களோ, விடயங்களோ எதுவுமில்லாமல், நேரத்தைக் காட்டும் மணிக்கூடு கூட இன்றி, 24 மணிநேரமும் கைத் தொலைபேசியுடன் அலைந்தவர்களின் கையில் எந்தவித தொலைத்தொடர்பு சாதனங்களும் இன்றி, தொலைக்காட்சி, கணனி இன்றி உலாவ விட்டால் எப்படி இருக்கும் என்பதை இந்த உலகம் பார்க்க வைக்கும் ஒரு நிகழ்ச்சியாகவே படுகின்றது. மற்றையவர் விடயங்களில் தலையிடுவார்கள். தம்முடைய கருத்துக்களை பிறர் மேல் திணிக்க முற்படுவார்கள். ஒருவரைப் பற்றி மற்றவர்களிடம் பேசுவார்கள்.

தம்முடைய கருத்துக்களே சரியென்று நிறுவ முற்படுவார்கள். இவ்வாறு மனித மனங்கள் வெளிச்சம் போட்டுக் காட்டப்படுகின்றன.

ஒவ்வொரு மனிதர்களுக்கும் வேறுபட்ட ஆசாபாசங்களும், கருத்துகளும், விருப்பு வெறுப்புக்களும் இருக்கின்றன. இவற்றை அவர்கள் வாழ்ந்த சூழலும், கற்ற கல்வியும், குடும்ப வளர்ப்பு முறையும், மரபணுக்களின் செல்வாக்குமே தீர்மானிக்கின்றன. இவர்களை ஒரு வீட்டுக்குள் எந்தவித வெளித்தொடர்புகளும் இன்றி அனுப்பினால் எப்படி இருக்கும் என்பதை எடுத்துக் காட்டுவதே இந்நிகழ்வாக இருக்கின்றது. இதிலிருந்து என் சிந்தனை விரிவு காணுகின்றது.

ஒரு அறையில் நல்ல கல்வி கற்ற, பண்பாளர்கள் மூவரை அடைத்து வைத்து அவர்களுக்கு 3 வேளை 3 சிறிய தட்டில் ஒரு வாரம் உணவு வழங்கப்பட்டது. அடுத்த வாரம் 2 தட்டாக மாற்றப்பட்டது. அதன் அடுத்த வாரம் 1 தட்டாக மாற்றப்பட்டது. ஒரு வேளை உணவே ஒரு தட்டில் வழங்கப்பட்டது. சிறிது சிறிதாக உணவு குறைக்கப்பட அந்த அறையில் ஒரு பிரளயமே ஏற்பட்டது. ஒவ்வொருவரும் பசி தாங்கமுடியாது ஆளையாள் உணவுக்காகச் சண்டை போட்டு ஒருவரை ஒருவர் தாறுமாறாக தாக்கத் தொடங்கினர். அறையெங்கும் சோற்றுப் பருக்கைகள் வீசப்பட்டன. உணவுக்காக நாய்கள் அடிபட்டுக் கொண்டது போல் இவர்கள் நடந்து கொண்டார்கள். பசி வந்தால் பத்தும் பறந்து போம் என்பார்கள். அந்த பத்தில் பண்பு கூட பறந்து போய்விடும். சந்தர்ப்பம் சூழ்நிலை மனிதர்களை பண்பற்றவர்களாக மாற்றிவிடும். அவர்களுக்குள் இருக்கும் மிருகக் குணம் விழித்துக் கொள்ளும். பண்பற்ற குணம் வெளியே வரும்.

கற்றறிந்த பண்புள்ள புலவர் ஔவையார் ஒரு இடத்தில்..

"எட்டேகால் லட்சணமே எமனேறும் பரியே
மட்டிற் பெரியம்மை வாகனமே முட்டமேற்
கூரையில்லா வீடே குலராமன் தூதுவனே
ஆரையடா சொன்னாயது"

என்று கம்பரை விளித்துப் பாடுகின்றார். அவலட்சணமே, எருமையே, மூதேவியே, குட்டிச்சுவரே, குரங்கே. இவ்வாறான பண்பற்ற சொற்கள் ஔவை வாயிலிருந்து கம்பர் மேல் ஏற்பட்ட கோபத்தினால் வெளிப்படுகின்றது.

1972 ஆம் ஆண்டு ஒரு விமானம் திடீரெனக் காணாமல் போனது. இவ்விமானத்தை யாராலும் தேடிக் கண்டு பிடிக்க முடியாமல் போனது. 90 நாட்களின் பின்பு சில மனிதர்களுடன் ஒரு பனி படர்ந்த, எந்தவித வெளித் தொடர்புகளையும் ஏற்படுத்த முடியாத ஒரு மலைப்பிரதேசத்தில் கண்டு பிடிக்கப்பட்டது. அவ்விமானத்தில் பிரயாணம் செய்தவர்களில் சிலர் இறந்துவிட மீதமுள்ளவர்கள் சிலரே உயிரோடு இருந்தார்கள். சூழவுள்ள பகுதிகளில் பனி படர்ந்த மலைப்பிரதேசங்களே இருந்த காரணத்தினால், உயிர் தப்பியவர்கள் வாழ்வதற்கு உணவை எங்கேயிருந்து பெற்றார்கள் என்று கேட்டபோது, இருந்த உணவெல்லாம் தீர்ந்து போக பசியால் ஒருவரை ஒருவர் கொன்று தின்றே வாழ்ந் திருக்கின்றார்கள்.

விமானத்தில் பயணம் செய்தவர்கள் அக்காலத்தில் படித்தவர்களாக இருந்திருக்க வேண்டும். ஆளுக்காள் சண்டை செய்து கொல்வதை விட்டு எல்லோருடைய பெயரையும் சீட்டில் எழுதி, அதில் 3 சீட்டுகளை எடுத்து அச்சீட்டில் பெயர் உள்ளவர்களை கொன்று உண்டிருக்கின்றார்கள். மனிதன் தன் தேவைக்காக எந்தளவு கேவலமாக பிணந்தின்னும் கழுகாகவும் மாறிப் போவான் என்பதற்கு இது சான்றாக அமைகின்றது. இவ்வாறான மனிதர்கள் அனைவரும் அடிப்படையில் கேவலமானவர்கள் இல்லை. சந்தர்ப்பம் சூழ்நிலையானது மனிதனை இவ்வாறான நிலைக்குக் கொண்டு செல்லும் என்பதே உண்மை.

மனிதர்களுக்குள் இரண்டு பக்கம் இருக்கும் என்பார்கள். அதன் ஒரு பக்கம் உறங்கிக் கொண்டிருக்கும். சந்தர்ப்பம் சூழ்நிலை வாய்க்கும் போது விழித்துக் கொள்ளும் உதாரணத்திற்கு ஒரு தாய் பிறரிடம் பேசும் போது என்னுடைய பிள்ளை குழப்படி செய்தால் நான் அடிப்பதில்லை, பேசி தவறைப் புரிய வைப்பேன். பிள்ளை என்னுடைய உயிர் கை வைக்க எப்படி மனம் வரும் என்பாள்.

ஆனால், சில சந்தர்ப்பத்தில் பிள்ளையின் குழப்படியைப் பொறுக்க முடியாது ஓங்கி அடித்துவிடுவாள். பின் நிதானித்து பிள்ளையைத் தூக்கி அணைத்துத் தடவிக் கொடுப்பாள். ரெமோ என்ற படத்தில் விக்ரம் இரு வேறுபட்ட குணாதிசயங்களை மாறி மாறி வெளிக்காட்டுகின்றார் இதை ஆரடவணிடந Personality என்பார்கள்.

சிலருக்கு வெளிப்படையாக இம்மாறுபட்ட குணாதிசயங்கள் வெளிப்படும். எத்தனையோ பிரபலங்கள் தமக்குப் பிடித்த பொருளைக் களவாடியிருப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். அடக்கமும் பொறுமையும் கொண்ட கண்ணகி மதுரையையே எரிக்கும் பெண்ணாகின்றாள். அவளுக்குள் அடங்கியிருந்த ஆவேசம் தன்னுடைய கணவன் கள்வன் என்று சொன்னபோது வெளிவருகின்றது. இவ்வாறு மனிதனுக்கு மனிதன் வேறுபட்ட குணாதிசயங்களைக் கொண்டவனாக இருக்கின்றான்.

இவ்வாறான மனிதர்கள் அனைத்து விடயங்களிலும் ஒத்துப் போவார்களா என்றால் அதுதான் இல்லை. கூடப்பிறந்த சகோதரர்கள் கூட கருத்து வேறுபாடுள்ளவர்களாகவே காணப்படுவார்கள். அதைத்தானே ஐந்து விரல்களும் ஒரு மாதிரி இல்லை என்று சொல்வார்கள். நல்ல நண்பன் என்று சொன்னாலும், அவர்களிடையே விட்டுக் கொடுப்புடனேயே நட்புத் தொடர்கின்றது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். பொருந்தாத அமைப்புக்களும், பொருந்தாத திருமண வாழ்க்கையும், பொருந்தாத உறவுகளும் என்றோ ஒருநாள் முறிந்துதான் போகின்றன.

இவற்றுக்கெல்லாம் அடிப்படைக் காரணம் ஒவ்வொரு மனிதர்களுக்குள்ளும் ஒளிந்திருக்கும் மனமே. எனவே மனிதர்களை இப்படியானவர்கள் என்று நாம் தீர்ப்பளிக்க முடியாது. மனித மனங்கள் எந்த நேரம் எப்படி மாறும் என்று யாராலும் கூற முடியாது. 'மனம் ஒரு குரங்கு. மனித மனம் ஒரு குரங்கு. நமக்குள்ளே இருந்து கொண்டு நன்மை தராது' என்று கண்ணதாசன் பாடியிருக்கின்றார். Bigg Boss பார்த்த போது இவ்வாறான சிந்தனைகள் எனக்குள்ளே எழுந்தன.

பொன்மொழி.....

வாய்ப்புக்கள் விலகும்போது அதை எண்ணிக் கவலைப்படாதே.. எல்லாம் நனஇமைக்கே என்று தொடர்ந்து முயற்சி செய்..மிகப்பெரும் வெற்றி உனக்காகக் காத்திருக்கிறது.......

# காலங்கள் திரும்பக் கிடைக்காது....

இந்த உறவுகள் அற்புதமானவை. மனைவி என்ற ஒருத்தியோடு பேசிக் கொண்டே இருங்கள் இல்லாவிட்டால் ஏதாவது சண்டையாவது போடுங்கள். பின்பு சமாதானம் ஆகி உறவாடுங்கள். எல்லா ஆண்களுக்கும் ஒரு நாள் வரும். ஒருவேளை அவள் முந்தி மரணமடைந்தால் அப்போது தெரியும், பிரிவு என்றால் என்னவென்று.

ஆகவே இப்போது கிடைக்கும் ஒவ்வொரு நொடியும் அற்புதமானவைவ் வீணாக்க வேண்டாம். அதிலும் பிரிந்து இருக்கவே வேண்டாம். அடுத்து, பிள்ளைகள் பள்ளிப் படிப்பு முடியும் வரைதான் அவர்கள் உங்களோடு இருப்பார்கள். அதன் பின் அவர்கள் உலகம் வேறு அதில் நீங்கள் நிச்சயமாய் இருக்கவே மாட்டீர்கள். அப்போது நீங்கள் அவர்களோடு தொலைபேசி மூலமாக பேசக்கூடநேரம் பார்க்க வேண்டும். இப்போது அவர்களிடம் அதிக நேரம் செலவு செய்யுங்கள். இப்படி இல்லாமல், உங்கள் பிள்ளைகள் உங்கள் அருகிலேயே இருந்தால் இது அற்புதமான தருணம்.

ஒரு நொடியைக்கூட வீணாக்க வேண்டாம். சும்மா அவர்களை பார்த்துக் கொண்டாவது இருங்கள். அடுத்து உறவுகளும், உடன் பணி செய்யும் தோழர்களும். இதைப்பற்றி தெரிந்து கொள்ள, நீங்கள் அடுத்த மாநிலத்திலோ அல்லது வேறு நாட்டிலோ இருந்தால், இது புரியும். வேறு நாடுகளில் இருந்தால் வேற்றுநாட்டு மொழிக்காரர் நம்மோடு நட்பாக இருப்பார்கள். ஆனால் தோள் மேல் கைபோட்டு "வாடா மச்சான்"என்று கூற முடியாது. ஒரு இடைவெளி இருந்து கொண்டேதான் இருக்கும்.

எல்லாம் ஒரே இடத்தில் கிடைத்து வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதர்களே! வாழ்கையை ருசியுங்கள் அனுபவியுங்கள். காலமே ஒரு நாள் நம்மை தனிமைப்படுத்த போகிறது. அன்று யாரும் நம்மை வந்து பார்க்கப்போவது இல்லை. நாம் நினைத்தால் கூட வெளியே போக முடியாது. தனிமையே நம்மை கொல்லப்போகிறது.அதுவரை, கடவுள் நமக்கு தந்த சினேகங்களோடு பேசுவோம் சண்டையிடுவோம் கொஞ்சிக் குலாவுவோம் ஏதாவது செய்வோம். ஆனால் தனிமை வேண்டாம் அது மோசமானது. தற்கொலைக்குச் சமமானது. காலங்கள் திரும்ப கிடைக்காது..என்பதை நன்கு புரிந்து கொள்ளுங்கள்!....

# நல்நெறியில்...

## கடமையும் கட்டுப்பாடும் (V.நந்தகுமார்)

கடமையைச் சரிவரச் செய்யும்போது, களிப்படைகிறோம். கடமையில் இருந்து வராத பணம் காலமறியாமல் கடந்து விடும். கருமங்களை காலத்திற்கேற்ப கைகூடக் கற்றுக்கொள்ளுதல் ஒரு சிறந்த கலை. கடமையின் காலங்களில் கண்ணீரும் உண்டு, களிப்பும் உண்டு, கலங்காதே. கஷ்டம் என்ற நினைப்பு கஷ்டமாகிறது, சுலபம் என்ற நினைப்பு சுலபமாகிறது. கடந்த காலங்களில் செய்தவற்றையும், செய்யத் தவறியவற்றையும், எண்ணிப்பார். கடந்து வந்த நாட்களை பின்நோக்கிப் பாருங்கள், பிழைகளை திருத்தி, திருந்துங்கள். கருமங்களை பொறுப்புடன் பார்த்தால், பௌர்ணமியைப் பார்க்கலாம். கடந்த காலங்களின் பாடங்களை பாரமாக நினைக்காதே, நல்ல பாடமாக நினை. கட்டிடம் கற்களால் கட்டப்படுகிறது, வாழ்க்கை அன்பால் அமைக்கப்படுகிறது.

கடுமையை அகற்றும்போது, கொடுமையில் இருந்து விடுபட வழி பிறக்கிறது. கர்வம், கோபம், கடுஞ்சொல், களைந்த காலங்கள் களிப்பானவை. கட்டுப்படாத மன அலைகள் அடித்துகொண்டே இருக்கும். கவலை நீக்க கலகம் செய்யாதே, மேலும் கலக்கம் அடைவாய். கட்டுப்பாடு இழந்த பழக்க வழக்கங்கள் சீரற்ற நெருக்கடிகளை தோற்றுவிக்கும். கட்டுப்பாடுகளை தட்டிக்கழிப்பவர்கள் புற்றுநோய்க்குள் தள்ளப்படுகிறார்கள். கட்டுப்பாடு கலைந்து தாறுமாறுகள் நுழையும்போது, துயரத்தில் துடிக்கிறோம். கட்டுப்பாடுகள் கஷ்டமாகத் தோன்றினாலும், காலம் பூராவும் காப்பாற்றி வாழ வைக்கும். கண்டிப்பு இருக்கலாம் ஆனால் கோபம் இருக்கவேண்டிய அவசியம் இல்லை. கரடுமுரடான எண்ண அலைகள் கஷ்டமான காலங்களைக் கொண்டு வரும்.

கல்வியை கனம் செய்யும்போது, அது உன்னை மேன்மைமிக்கவனாக்கும். கனிவான வார்த்தைகளை கவனத்தில் கொள்ளுங்கள் காலம்பூராவும் காப்பாற்றும். கண் கதிரவன்போல் கவர்ச்சியானது, எதிலும் நேரான பார்வையாய் இரு. கணவன் மனைவி வேறுபட்டிராமல் பேச்சிலும், செயலிலும் அன்யோன்யம் அவசியம். கடவுளின் நியதிப்படி குழந்தைகள் பிறப்பதற்கு நாம் ஒரு கருவியாக இருக்கிறோம்.

## நீரிழிவுநோயாளிகள் தவிர்க்கவேண்டிய காய்கறிகள்....

நீரிழிவுநோயாளிகள் சாப்பிடக்கூடாத சிலகாய்கறிகளின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. அதைப்படித்து, நீரிழிவு இருந்தால், அவற்றை உணவில் சேர்ப்பதைதவிர்த்துவிடுங்கள்.

-உருளைக்கிழங்கில் மாவுப்பொருள் அதிகம் நிறைந்திருப்பதால், இந்த உணவுப்பொருளை நீரிழிவு நோயாளிகள் தவிர்க்கவேண்டும்.

-சேனைக்கிழங்கு:- சேனைக்கிழங்குகளை சாப்பிட்டால் இரத்தத்தில் உள்ளசர்க்கரையின் அளவு சொல்லமுடியாத அளவில்அதிகரிக்கும். இந்தகிழங்கைஉணவில்சேர்க்கக்கூடாது.

-பீன்ஸ்:-இனிப்பாக இல்லாவிட்டாலும்,இதில்ஸ்டார்ச்மிகவும்அதிகம்உள்ளது. அதற்காக பீன்ஸ்களைமுற்றிலும் தவிர்க்கவேண்டுமென்பதிலை. ஆனால்அவற்றைநீரில்வேகவைத்துஅதுவும்அளவாகசாப்பிடவேண்டும்.

-பீட்ரூட்:-ஒருவேர்காய்கறிஎன்பதால்இதுமண்ணில்உள்ளஅனைத்து இனிப்புக்களையும் உறிஞ்சிமிகவும் இனிப்பான சுவையில்உள்ளது. அதற்காக இதனை அறவே தவிர்க்க வேண்டுமென்பதில்லை. ஏனெனில் இதில் மற்ற நன்மைகளும் அடங்கியிருக்கின்றது.

-பச்சைபட்டாணியில் ஸ்டார்ச் அதிகம் நிறைந்திருப்பதால், இந்தஉணவுப் பொருளையும் நீரிழிவுநோயாளிகள தவிர்க்கவேண்டும்.

-தக்காளிசேர்க்காத உணவுகளை பார்க்கவேமுடியாது.இருப்பினும் இது இனிப்புச் சுவையுடையதால், இதனை பச்சையாக சாப்பிடுவதைத் தவிர்க்கவேண்டும். மேலும் உணவுகளிலும் தக்காளியை அளவாகபயன்படுத்தவேண்டும்.

-சோளத்தில் பலவகைகள் உள்ளன. அதில் ஒன்றுதான் ஸ்வீட்கார்ன். இதுமிகவும் இனிப்பானது இதனை நீரிழிவுநோயாளிகள் அறவேதவிர்க்கவேண்டும். அதுமட்டுமல்லாமல், இதில்எண்ணற்ற அளவில் ஸ்டார்ச் நிறைந்துள்ளது.

-வாழைப்பூ, வாழைத்தண்டு போன்றவற்றை அதிகம்சமைத்து சாப்பிடுவோம். ஆனால் இந்த உணவுப்பொருட்களிலும் ஸ்டார்ச் அதிகம் நிறைந்துள்ளது. குறிப்பாக வாழைப்பழத்தில் இனிப்புச்சுவை அதிகம்உள்ளது, எனவே இந்த உணவுப்பொருட்களை தவிர்ப்பது நல்லது.

-சர்க்கரைவள்ளிகிழங்கு:- உருளைக்கிழங்குடன் ஒப்பிடுகையில் சர்க்கரை வள்ளிகிழங்கில் ஸ்டார்ச் குறைவாக இருந்தாலும் இதில கிளைசீமிக்இன்டெக்ஸ் அதிகம்உள்ளது. எனவே இத்தகையகிழங்கைஅறவே தவிர்க்கவேண்டும்.

# சுடோக்கோ புதிர்ப்போட்டி முடிவு - 11

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 4 | 2 | 1 | 5 | 7 | 6 | 8 | 9 |
| 7 | 8 | 1 | 4 | 9 | 6 | 2 | 5 | 3 |
| 5 | 9 | 6 | 8 | 3 | 2 | 7 | 1 | 4 |
| 8 | 5 | 3 | 7 | 6 | 9 | 1 | 4 | 2 |
| 2 | 6 | 4 | 5 | 1 | 3 | 9 | 7 | 8 |
| 9 | 1 | 7 | 2 | 4 | 8 | 5 | 3 | 6 |
| 1 | 3 | 9 | 6 | 7 | 4 | 8 | 2 | 5 |
| 4 | 7 | 8 | 9 | 2 | 5 | 3 | 6 | 1 |
| 6 | 2 | 5 | 3 | 8 | 1 | 4 | 9 | 7 |

# சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி முடிவு-102

| | | | |
|---|---|---|---|
| ப | ரீ | ட் | சை |
| து | த் | மு | மே |
| ந் | ஆ | டி | ள |
| ப | ட் | ட | ம் |

# குறுக்கெழுத்துப்போட்டி முடிவு - 165

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அ | ன் | னை | தி | ரே | சா | ணி |
| நு | ம் | க | ங் | ச | ங் | கு |
| ரா | பி | ம் | க | தி | க் | ச |
| த | ம் | பீ | ள் | ளை | யா | ர் |
| பு | க | ம் | ள | லி | ல் | ப |
| ர | ட | து | ன் | தே | கா | னை |
| ம் | க | ண் | ணீ | ர் | யி | ப |

# இப்படியும் நடக்குது இங்க!....

-மதவடி மயிலன்-



வணக்கம்!..வணக்கம்!...

நான்தான் மதவடி மயிலன்... மீண்டும் வந்திருக்கிறன். என்ன எல்லாரும் சுகம்தானே. இந்த மயிலன் உங்களிடம் சுகம் விசாரிப்பதில் ஒரு சந்தோசம்தான். வேறு ஒன்றுமில்லை. சுகநலம் விசாரிக்க...

உலகமெல்லாம் கடும் வெப்பம். மயிலன்வாழும் ஐரோப்பாவிலும் என்றுமில்லாத வெப்பம் 40 - 50 பாகை வெப்பம். சனம் எல்லாம் ஆற்றங்கரையையும் கடற்கரையையும் தேடி ஓடினார்கள் என்றால் பாருங்கோவன். அப்படி நல்ல வெய்யில்..

இதனால எங்கட ஆட்கள் பட்ட துன்பங்கள் பலவிதம் கண்டியளோ!...என்ன செய்வது காசு...காசு என்று உலகம் முழுக்க அலையும் தமிழன் இதையெல்லாம் அனுபவிக்கத்தானே வேண்டும்.

இதைவிட என்ன சங்கதி எண்டால் வெய்யில்கூடி, மண்டை கொதித்து, மயிலன் களைத்து மூளை குழம்பி பிறசரும் எக்கச்சக்கமாக ஏறி டொக்டரிடம் போகமுடியாமல் கடைசியாக அம்புலன்ஸ் வந்து தூக்கிக்கொண்டுபோய் ஆஸ்பத்திரியில் போட்டு, இந்த மயிலன் பிழைச்சு வீடு வந்திட்டான். என்ன செய்வது இருபத்தைந்து முப்பது வருடங்களாக வேலை இல்லாமல் வீட்டுக்க கிடந்து சோசல்காசில சாப்பிட்டுக்கொண்டிருந்தால் வருத்தம் வராமல் என்ன செய்யும் பாருங்கோ!..

சரி..சரி..இனிவிசயத்துக்கு வரலாம் என்று எண்ணுகிறன். அதாவது இந்தப் பவுண்படுத்தும் படாத பாட்டைத்தான் சொல்லப் போறன். பவுண் எண்டால் தங்கப்பவுண். எங்கடை ஆட்கள் பவுண் என்றால் வாயைப்

பிளப்பினம் கண்டியளே!... பவுணாலை எல்லாத்தையும் செய்யலாம், பவுணாலை எல்லாத்தையும் வேண்டலாம் என்றுதான் நினைப்பு. கல்வியையோ, அறிவையோ, பண்பையோ, அன்பையோ, காதலையோ வேண்ட முடியுமா? என்ற கேள்வியும் இருக்குத்தானே!

பவுண் வாழ்க்கைக்குத் தேவைதான். இல்லை என்று இந்த மயிலன் கூறவரவில்லை. இதை அளவாக வைத்திருங்கோ. இதைவிட்டு கிலோக்கணக்காக வேண்டி அடுக்கி எண்ணிப்போட்டு, பின்பு கள்ளருக்குப் பயந்து லொக்கரிலே கொண்டுபோய் முடக்கிப்போட்டு வெறுங்களுத்தோடு திரியும் பெண்மணிகளையும் இந்த மயிலன் கண்டிருக்கிறான் பாருங்கோ.. இது மாத்திரமல்ல லொக்கர் புல்லாகி இரண்டு மூன்று லொக்கர்களிலும் நம்மட ஆட்களின் பவுண்கட்டிகள் நகைகள் முடங்கிக்கிடப்பதாகவும் இந்த மயிலன் கேள்விப்படுகிறான்.

நம்மட ஆட்களின் கொண்டாட்டங்களுக்குப் போனால் தெரியும் நம்மட பெண்கள் பெண்பிள்ளைகள் ஏன் சிறுமிகள் சிறுவர்கள்கூட எத்தனை பவுண்நகை போடுகிறார்கள் ஒரு நகைக்கடை எழுந்து வந்தது மாதிரித்தான் காட்சியளிப்பார்கள். கால்சங்கிலிகூட இன்று புலம்பெயர் தேசங்களில் பவுணில் போடும் அளவிற்கு நிலைமை வந்திட்டுது பாருங்கோ?..

இன்று நமது பெண்கள் சிலர் இரண்டு மூன்று தாலிக்கொடியும் வைத்திருக்கிறார்கள். அதாவது சாறி மாற்றுவதுபோல ஒவ்வொரு கொண்டாட்டத்துக்கும் வெவ்வேறு தாலிக்கொடிகளை அணிகிறார்களாம். எப்படி இருக்கிறது நிலமை. "சந்தணம் மெத்தினால்" என்ற நிலைதான் பாருங்கோ..சாமத்தியச் சடங்கு என்றால் பெண்பிள்ளைகளுக்கு அணியும் பூ மாலைகளைவிட பவுண் சங்கிலிகள் அது இது என அணிந்து அந்தப் பிள்ளை பாரத்தில் தலைகுனிந்து நின்ற சம்பவங்களையும் இந்த மயிலன் கண்டுகளித்திருக்கிறான் பாருங்கோ..

சிறுவர்கள், சிறுமிகள் ஏன் இளசுகள்கூட தமது பெயரில் பெயர் பொறித்து கிலோக் கணக்கான பவுண்களைத் தொங்க விட்டுக்கொண்டு திரிவார்கள். சிலர் குளிர்காலத்துக்கு அணியும் யக்கட்டுக்கு மேலாக அல்லது சேட்டுக்கு மேலாகப் பலரும் தெரியும் வண்ணம் பவுண் சங்கிலிகளை அணிந்துகொண்டு பந்தா காட்டுவதும் தமிழர் நாகரீகமாகப் போச்சுது பாருங்கோ..

புலம்பெயர் தேசங்களில் எப்படி? எப்போ? எங்கே? என்ன செய்யவேண்டும் என்று தெரியாமல் அலையும் கூட்டமும் உண்டுதான் பாருங்கோ. கிட்டடியில் ஒரு தமிழன் வீட்டுக்குப் போயிருந்தேன். அவர்கள் நாய், பூனை வளர்ப்பது நாகரீகமாம் என்று எனக்கு லச்சர் அடித்தார்கள். நல்லதுதான் என்று சொல்ல இந்த இரண்டு செல்லப் பிராணிகளும் துள்ளிக்குதித்து ஓடிவந்ததுகள். அதுகளின் கழுத்திலையும் பவுண் சங்கிலிகள் பளபளக்க நான் மயங்காத குறைதான் கண்டியளோ.. இந்த அளவுக்கு ஒருசிலரின் செல்வச் செழிப்புத்தான் பாருங்கோ..

புலம்பெயர் நாடுகளில் சனிக்கிழமைதான் தேர் உருளும். இந்தச் சனிக்கிழமையை எப்படி இந்த ஐயர்மார் தீர்மானிக்கிறார்கள் என்று அந்த அம்மனுக்கும் பிள்ளையாருக்கும் முருகனுக்கும்தான் தெரியும். ஏனென்றால் அவையளும் கன பவுண் நகைகளைக் கள்வரிடம் பறிகொடுத்தவைதானே?.. இது சங்கதி வேறு..தேர்த்திருவிழா என்றால் நம்மட ஆண்களும் இளசுகளும் காட்டும் பந்தாவோ கட்டுக்கடங்காது.

அன்று ஒரு நாள் கோவில் தேர்த்திருவிழாவிற்குப் போயிருந்தேன். தேர் இழுக்கும் வடக்கயிற்றின் முன்னாலை பல பெரிசுகளும் இளசுகளும் வெறும் மேலுடன் இதுக்க வண்டி வயிறுகளுக்கு மேல மாட்டுக் கயிறுபோல பெரிய பவுண் சங்கிலிகளையும் போட்டுக்கொண்டு, தாம்தான் தர்மகர்த்தாக்கள் என்ற கணக்கில் பந்தாகாட்டும் கூட்டம் இப்பபாருங்கோ எல்லாக் கோவில்களிலும் இந்தக் கூட்டத்தினரைக் காணலாம். சமயபாடம் என்றால் என்னென்று தெரியாதவனும், நித்தம் தண்ணியடித்து, மாமிசம் உண்டு, வட்டிக்குக்கொடுத்து, மற்றவன்ர மனைவியை, சொத்தை அபகரித்த வள்ளல்கள் எல்லாம் இந்த முன்வரிசை பிரபலங்களாக மாறி இருப்பது ஒன்றும் ஆச்சரியம் இல்லை கண்டியளோ..

பவுண் விசயத்தில தனியே பெண்களை மட்டும் குற்றம் சொல்ல முடியாது. ஆண்களிலும் பெரும் பொறுப்பு உண்டு. மழை, பனி, குளிர், இரவு, பகலா உழைத்துச் சம்பாதித்த பணத்தை பவுணாகச் சேர்த்து வருசக்கணக்காக லொக்கரில் அடைத்து வைத்தால் என்ன பிரயோசனம். இதை சற்று ஆற அமர்ந்து சிந்திக்க வேண்டும். தான் தன் மனைவிக்கு அள்ளிக் குவிக்கும் நகை நட்டுக்களை

மனைவி பல நகைகளை அணியாமலே தன் மகளுக்கு சீதனமாக அள்ளிக்கொடுக்க மகளும் அப்படியே அடுத்த தலைமுறைக்கு அள்ளிக் கொடுத்து ஒரு றொட்டேசன் மாதிரித்தான் நடக்குது. இவ்வளவு பெருந்தொகை முடங்கிக்கிடப்பது நமக்கும் நட்டம். நாம் வாழும் நாட்டுக்கும் நட்டம்தான் என்பதை யார் உணருகிறார்கள் பாருங்கோ.

திருவிழாக்கள் மட்டுமல்ல பல கொண்டாட்டங்களில் பல ராசாக்களைப் பார்த்தால் பத்து விரல்களிலும் பெட்டி மோதிரம் போட்டுக்கொண்டு பெண்களுக்கு நாங்கள் சளைத்தவர்கள் இல்லை என்று அலையும் கூட்டத்தினரையும் இந்த மயிலன் கண்டிருக்கிறான். இதைவிட இரண்டு மூன்று சங்கிலிகளைச் சேட்டுக்கு மேல தொங்கவிட்டுக்கொண்டு எங்க பெண்கள் தங்களைப் பார்த்து வழிவார்கள் என்ற ஏக்கத்துடன் அலையும் காமக்களியாட்டக் காரர்களை காவடியுடனும் இந்த மயிலன் கண்டிருக்கிறான் பாருங்கோ.

இந்த ராசாக்களிடம் நாட்டுக்கு, விதவைப் பெண்களுக்கு, அனாதைச் சிறுவர்களுக்கு, முதியோருக்கு ஒரு சிறு உதவி கேட்டுப்பாருங்கள். உடனே கையை விரிப்பார்கள். தாய் தந்தை சொந்த நாட்டில் அனாதையாய் அலைய, முதியோர் இல்லங்களில் விட்டுவிட்டு, சொந்த பந்தங்களுக்குக்கூட ஒரு சதம் உதவாமல் வாழும் பக்த கோடிகளும் வெளிநாடுகளில் பல்லாயிரம் பேர்தான். உயிரோடு இருக்கும் நேராகக் காணும் மனித தெய்வங்களுக்கு உதவாமல் ஆண்டவனுக்கும் கடவுளுக்கும் லஞ்சமாக பவுணையும் பணத்தையும் அள்ளிக் கொடுத்துப் புண்ணியம்தேட நினைப்பது எவ்வளவு கெட்டித்தனம் கண்டியளோ..

சரி..சரி..மயிலன் இவ்வளவு மட்டுமல்ல இன்னும் பவுணோடு பல விடையங்களை சொல்லுவான். பத்து மோதிரம் போட்டு அழகுபார்க்கும் ராசாக்களே.. ஒரு மோதிரத்தையாவது கழட்டி நாட்டில் தாலிக்காக ஏங்கி 35 –40 வரை திருமணம்முடிக்க முடியால் அல்லல்படும் முதிர் கன்னிகளுக்கு உதவினீர்களானால் அதுதான் பெரும் புண்ணியம் என்று இந்த மயிலன் கூறுகிறான். கனக்கச் சொல்லுகிறான் என்று என்னைத் திட்டித் தீர்க்காதீர்கள். அடுத்த முறை இன்னொரு விடையத்தோட இந்த மயிலன் வருவான்..அப்ப வரட்டே. போட்டு வாறன்!...

# வாசிப்பை நேசிப்போம்!......

-திருமதி ஜெயா நடேசன்-

இவ்வுலகத்தில் வாழ்ந்த பல பெரியவர்களை, அறிஞர்களை, தொண்டர்களை அறிந்துகொள்வதற்கு மிகவும் உதவியாக அவர்கள் எழுதிய நூல்கள் அல்லது அவர்களைப்பற்றி எழுதப்பட்ட நூல்கள் ஆகும். அந்த வகையில் நூல்கள் காலங்கள் கடந்தும் பேசுபவையாகும். நூலை எழுதியவரோ அல்லது யாரைக் குறித்து எழுதப்பட்டதோ அவர் உயிருடன் இல்லாது போனாலும் நூலைப் படிப்பவர்க்கு அந்நபரை உயிரோடு படம் பிடித்துக் காட்டும் ஒப்பற்ற ஓவியமாக நூல்கள் விளங்குகின்றன.

நல்ல நூல்களை விலைகொடுத்து வேண்டிப் படிக்கவேண்டும் என்ற எண்ணம் முன்னைய காலங்களோடு ஒப்பிடுகையில் இக்காலத்தில் குறைந்து வருவதை அவதானிக்கலாம். வேலைப்பழு, நேரமின்மை, கைத்தொலைபேசிகள், கணனிகள் இவைகளே முக்கிய காரணமாகின்றன. இவைகளால் இன்று பலர் வாசிக்க மறந்த நிலையில் உள்ளனர். தொடர் நாடகங்கள், சினிமாவில் மூழ்கித் தொலைந்து போகாமல் வாழ்க்கையைத் தொலைத்துவிடாமல் வாழ்க்கைக்கு நன்மை பயக்கும் வாழ்வுக்கு வழிகாட்டும் நூல்களை வாசிக்கும் நூல்களை வாசிக்கும் பழக்கத்தினை உருவாக்கினால் நன்மை பெறலாம்.

சிலருக்கு நேரம் போவதில்லை என்ற பிரச்சனை இருக்கின்றன. அப்படியானவர்களுக்கு "ஆஸ்டிஸ் மெல்ப்ஸ்" என்ற அறிஞன் சொல்கின்ற ஆலோசனை அருமையானது. பொழுது போகவில்லை என்று சொல்பவர்கள் எப்போதும் கையில் ஒரு நூலை வைத்திருக்கட்டும் என்கிறார். தூரப்பயணம் செய்வோர், வைத்தியர்களைக் காணக் காத்துக்கிடக்கும் நேரங்களில் புத்தகங்களை வாசித்துக் கொள்ளலாம். கவிஞர்கள், எழுத்தாளர்கள் பல ஆக்கங்களை எழுதி எழுதிக் கஸ்டப்பட்டுப் பல நூல்களை அதிக பணம் செலவழித்து வெளியீடு செய்கிறார்கள்.. ஆனால் அதற்கு ஒத்துழைப்பு கொடுக்கிறார்களா?...புத்தகங்களை வேண்டி வாசிக்கிறார்களா?..என்பது கேள்விக்குறிதான்.

தனிப்பட்ட ஒருவர் தனக்காக வாசிப்பது ஒன்று. ஒருவர் மற்றவர்களுக்காகப் பொதுவான விடையங்களை பொது இடங்களில் வாசிப்பது இன்னொன்று. சிலர் தனியே தமக்கு

விளங்கக்கூடிய வகையில் முணு..முணுத்தபடியோ, அல்லது தொண... தொணத்த படியே வாசிப்பார்கள். அது அவர்களுக்கு விளங்குமேயொழிய கேட்பவர்களுக்கு விளங்காது. அது பயனற்ற விடையமாகும். ஆகவே பொது இடங்களில் மற்றவர்கள் கேட்க, ஒருவர் வாசிக்க வேண்டியிருப்பின், அவர் தெளிவாக, விளக்கமாக உரத்தகுரலில், பொருள் உணர்ந்து வாசிக்க வேண்டும்.

எதற்காக வாசிக்க வேண்டும். பொழுதுபோவதற்காக வாசிப்பது ஒரு விதம். அறிவையும், அனுபவத்தையும், ஆளுமையை வளர்த்துக்கொள்ள வாசிப்பது இன்னொரு விதம். "வாசிப்பின் குறிக்கோள்தான் நாம் எதை வாசிக்கிறோம் என்பதைத் தீர்மானிக்கின்றது" என்கின்றார் ஓர் எழுத்தாளர். "வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்" எனவே வாசிப்பை நேசிப்போம். அறிவை வளர்த்து வரலாறு படைப்போம்!...

## பயணங்கள்!....

பயணங்களில் பயணித்துக் கொள்வது பலவிதம்
ஒவ்வொன்றும் ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு விதம்
வாழ்க்கைப் பயணத்தில் பல இரகசியப் பயணங்கள்
புலம்பெயர் எதிலிகள் வாழ்வே துன்பப் பயணம்
சோகங்கள் சூழ்ந்த துயரமான அவலப் பயணமே...
மாணவர்கள் பரீட்சையில் கலாட்டாப் பயணம்
இளைஞர் யுவதிகள் விவாகரத்துப் படியேறும் பயணம்
வல்லவனாக வாழ்ந்தாலும் வாழ்வு தூரப் பயணமே...
கவிஞர்கள் காண்பது கற்பனைப் பயணம்
பேனாவோடு காடுமேடு தாண்டும் கவிப்பயணம்
வேலைக்கு ஓடுவோர் விரைவு அவலம் பயணம்
திரும்பி வருகையில் மனக்களைப்புப் பயணமே...
ஏழை பணக்காரன் ஏற்றத் தாழ்வுப் பயணம்
விடுமுறையில் ஊருக்குப்போவது உறவுப் பயணம்
உண்டு உறவாடி அகமகிழ்தலும் ஒரு பயணமே..
எவரையும் பார்க்காது அழைத்துவிடுவது மரணப்பயணம்
இறுதியில் உறவுகள் அழுதுபுலம்பி அனுப்புவதும் பயணம்
எம்மைப் படைத்த இறைவன் காலடிக்கும் நியதிப் பயணம்
மண்ணுக்கும் விண்ணுக்கும் இடையே வாழ்வும் ஒரு பயணம்!...

திரு. வ.சிவராஜா, திருமதி இ.சிவராஜா
மண்- ஆசிரியர்கள்......

அன்புடையீர்...

நீங்கள் அனுப்பிவைத்திருந்த மண்-195ஆவது இதழும், உங்கள் துணைவியாரின் உயிரினில் பாதி என்ற கவிதைத் தொகுப்பும் கிடைத்தன. மிக்க நன்றி.
நீங்கள் அண்மையில் மனிதரில் எத்தனை நிறங்கள் என்ற நூலையும் வெளியிட்டுள்ளதாக அறிந்தேன். அந்நூலின் பிரதியொன்றினை எனது லண்டன் முகவரிக்கு அனுப்பிவைத்தால் அதனையும் நூல்தேட்டம் 14ஆவது தொகுதியில் குறிப்புரையுடன் ஆவணப்படுத்தி உதவலாம்.

2002ஆம் ஆண்டு முதல் நூல்தேட்டம் தொகுதிகள் ஆண்டுதோறும் வெளிவந்தவண்ணம் உள்ளதை நீங்கள் அறிவீர்கள். உலகளாவிய தமிழியல் நூலகங்களுக்குச் சென்று ஈழத்தவரின் நூல்களைத் தேடியெடுத்து ஆவணப்படுத்தி வைப்பதன் மூலம் உங்களையொத்த ஈழத்தவரின் படைப்பாக்கங்களை உலகத்தமிழர் மாத்திரமல்லாது உலகளாவிய தமிழரல்லாத தமிழியல் ஆய்வாளர்களும் அறிந்துகொள்ளும் வாய்ப்பினை நூல்தேட்டம் வழங்கிவருகின்றது. தனி மனித முயற்சியாக எவ்வித நிதி உதவிகளையும் உங்களிடமிருந்து எதிர்பார்க்காமல் இப்பாரிய பணியை மிகுந்த பொருட்செலவுடன் செய்து வருகின்றேன். அதனை உணர்ந்து தயவுசெய்து நீங்கள், நான் கேட்கும் வரை காத்திராமல் உங்கள் புதிய நூல்களில் ஒரு பிரதியை எனக்கு தபால்மூலம் அனுப்பிவைப்பதை எதிர்காலத்தில் கரிசனையுடன் மேற்கொள்வீர்கள் என்ற எதிர்பார்க்கின்றேன். அதே வேளையில் உங்கள் எழுத்தாள நண்பர்களிடமும் நூல்தேட்டத்தின் இருப்பினை அறிமுகம் செய்து அவர்களையும் தமது புதிய நூல்களை எனக்கு அனுப்பிவைக்கத் தூண்டவும்.

எனது முகவரி: N.Selvarajah, 14, Walsingham Close, Luton LU2 7AP, United Kingdom
நூல்தேட்டப் பிரதிகளை Noolaham.Org என்ற இணையத்தளத்தில் இலவசமாகப் பார்வையிடலாம்.

ந.செல்வராஜா - நூலகவியலாளர்
லண்டன்

# இலவச விசா.......

எந்தெந்த நாடு களுக்கு இலவச வீசா வழங்கப்பட்டுள்ளது? முழுமையான விபரம் வெளியீடு. இலங்கை வரும் வெளிநாட்டவர்களுக்கு இலவச உள்வருகை வீசாவினை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. எதிர்வரும் ஒகஸ்ட் முதலாம் திகதி முதல் இலவச வீசா நடைமுறை அமுலுக்கு வரும் என சுற்றுலாத்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார். சுமார் 46 நாடுகளுக்கு இலவச வீசா வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இதன்மூலம் பெருமளவு சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலவச உள்வருகை வீசா வழங்கும் நாடுகளின் விபரங்கள் தற்போது வெளியாகி உள்ளன. ஒஸ்ரியா, பெல்ஜியம், பல்கரியா, கம்போடியா, க்ரோஷியா, சைப்ரஸ், செக் குடியரசு, டென்மார், எஸ்டோனியா, பின்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, க்ரீஸ், இந்தியா, சீனா, ஹங்கேரி, அயர்லாந்து, இத்தாலி, லட்வியா, லிதுவேனியா, லக்ஸம்பேர்க், மால்டா, நெதர்லாந்து, போலாந்து, போர்த்துகல், ரோமானியா, ஸ்லோவக் குடியரசு, ஸ்லோவேனியா, நோர்வே, பிலிப்பைன்ஸ், ஸ்பெய்ன், சுவீடன், பிரித்தானியா, அமெரிக்கா, ஜப்பான், அவுஸ்திரேலியா, தென்கொரியா, கனடா, சிங்கப்பூர், நியூசிலாந்து, மலேசியா, தாய்லாந்து, சுவிட்ஸ ர்லாந்து மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு இலவச உள்வருகை வீசா வழங்கப்படவுள்ளது.

தகவல்... அழகு - லண்டன்

பொன்மொழிகள்.......

1)
உறவில் உரிமை கொடுங்கள், வாழ்க்கையில் நம்பிக்கை கொடுங்கள், அன்பில் உண்மையைக் கொடுங்கள், நம்பிக்கையில் நேர்மையைக் கொடுங்கள் மகிழ்ச்சி தானாகவே அமையும்...

2)
புற்களின்மீது விழும் பனித்துளி எவ்வளவு நிலையில்லாததோ, அதுபோலவே மனித வாழ்க்கையும் நிலையற்றது...


KILI PEOPLE
Kilinochchi District People Organisation
அழைப்பிதழ்
கிளி மாவட்ட மக்கள் அமைப்பின்
1001
1001 BICYCLE PROJECT 2019
FOR OUR STUDENTS
துவிச்சக்கர வண்டிகள் வழங்கும் நிகழ்வு
17/08/2019 - காலை 9 மணி
திருகோணமலை மாவட்டம் - 50 துவிச்சக்கர வண்டிகள்
தி/மூதூர் பாரதிபுரம் வித்தியாலயம், கிளிவெட்டி
கும்பிறுப்பிட்டி & கிளிவெட்டி | திருகோணமலை
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
ஒருங்கிணைப்பு
1001 BICYCLE PROJECT 2019
FOR OUR STUDENTS





கட்டம் - 12 கிளிநொச்சி மக்கள் அமைப்பின் 1001 துவிச்சக்கர வண்டிகள் திட்டத்தின் கீழ் 12 வது கட்டமாக திருகோணமலை மாவட்ட கும்பிறுப்பிட்டி, கிளிவெட்டி, மூதூர் போன்ற பிரதேசங்களில் உள்ள தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு 50 துவிச்சக்கர வண்டிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. 17/08/19 அன்று இந்த நிகழ்வு கும்பிறுப்பிட்டி மெதடிஸ் தமிழ் பாடசாலை மற்றும் மூதூர் பாரதிபுரம் வித்தியாலயம், கிளிவெட்டி ஆகிய இடங்களில் நடைபெற்றது. கிளி மக்கள் அமைப்பின் 1001 துவிச்சக்கர வண்டிகள் திட்டத்தின் கீழ் பின்வருமாறு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்படுகின்றது. வழங்கப்பட்டவை...

கிளிநொச்சி - 651 மன்னார் - 50
முல்லைத்தீவு - 50 யாழ்ப்பாணம் - 60
விரைவில் வழங்கப்பட உள்ள மாவட்டங்கள் வவுனியா - 50
திருகோணமலை - 50 மட்டக்களப்பு - 50 அம்பாறை - 50

ஐரோப்பா மற்றும் கனடா, அமெரிக்கா நாடுகளில் வசிக்கும் கிளிநொச்சி மாவட்ட மக்கள் மட்டுமல்ல பிறமாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் இத்திட்டத்திற்கு உதவிபுரிந்து வருகிறார்கள். பாரிய வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி, செயற்படுத்தி பாமர மக்களின் பொருளாதார மேம்பாடு மற்றும் கல்விசார் நடவடிக்கைகளுக்குப் பேருதவி புரிந்துவரும் அனைத்து நல்லுள்ளங்களுக்கும் நன்றிகளும் வாழ்த்துக்களும். இந்த நல்லுள்ளங்கள்போல அனைவரும் உதவிகளை வழங்கி நலிந்தோரை வாழவைக்க உதவிக்கரம் கொடுப்போம்!..

-ஆசிரியர்-

# அகவை தொண்ணூறு காணும் கவிஞர் அம்பி....



முருகபூபதி-அவுஸ்திரேலியா)

ஈழத்து கவிஞர்களுள் மிக முக்கியமானவராகக் கருதப்படும் அம்பி இவ்வாண்டு (17.2.2019) சிட்னியில் அகவை தொண்ணூறை அடைந்தார். இவரது இயற்பெயர் இராமலிங்கம் அம்பிகைபாகர்.கவிஞர் அம்பி (சம்புகுண்டம்) நாவற்குழியைச் சேர்ந்தவர்.

அம்பி தனது ஆரம்பக் கல்வியை நாவற்குழி, கிறீஸ்தவ மிசன் பாடசாலையிலும் பின்னர் உயர் கல்வியை யாழ்.பரியோவான் கல்லூரியிலும் தொடர்ந்தவர். அறிவியல் மற்றும் கணித ஆசிரியராக தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நீண்ட காலம் பணியாற்றியவர்.

அம்பியின் படைப்புகள் :

01-கிறீனின் அடிச்சுவடு (2) அம்பி பாடல் (சிறுவர் பாடல்கள்) (3)வேதாளம் சொன்ன கதை (மேடை நாடகம்) (4)கொஞ்சும் தமிழ் (சிறுவர் பாடல்கள்) (5)அந்தச் சிரிப்பு (6) யாதும் ஊரே ஒரு யாத்திரை(7)அம்பி கவிதைகள் (8)மருத்துவத் தமிழ் முன்னோடி (9) Ambi's Lingering Memories (Poetry> பப்புவா நியூ கினி (10)Scientific Tamil Pioneer Dr Samuel Fisk Green (11) உலகளாவிய தமிழர் (12)A String of Pearls (12)பாலர் பைந்தமிழ்

அம்பி இதுவரையில் பெற்றுள்ள விருதுகள்:

1968 உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டு விருது (தங்கப்பதக்கம்)

1993 இலங்கை இந்து கலாசார அமைச்சின் "தமிழ்மணி விருது"

1994கொஞ்சும் தமிழ் சிறுவர் இலக்கிய நூலுக்கு இலங்கை சாகித்திய விருது.

1997 அவுஸ்திரேலியாவில் மெல்பன் "நம்மவர்" விருது.

1998 கனடாவில் சி.வை. தாமோதரம்பிள்ளை விருது (தங்கப்பதக்கம்)

2004 அவுஸ்திரேலியா கன்பராவில் தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் விருது

தமிழுலகில் நன்கறியப்பட்ட "அம்பி" என அழைக்கப்படும் படைப்பாளி இராமலிங்கம் அம்பிகைபாகர் என இனிய நண்பர். எழுத்துலகில் நான் பிரவேசித்த 1972 ஆம் ஆண்டு முதலாக இவரை அறிவேன். அக் காலப்பகுதியில் கொழும்பில் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் பணியாற்றினார். எங்கள் நீர்கொழும்புக்கும் பலதடவை வருகைதந்து இலக்கியம் பேசியவர். எமது பிரதேச ஆசிரியர்களுக்காக நடத்தப்பட்ட கல்விக்கருத்தரங்குகளிலும் உரையாற்றினார்.

இலங்கையில் வாழ்ந்த காலப்பகுதியில் அம்பியுடனான இலக்கிய உறவு ஆரம்பித்த போதிலும், நாம் மிகவும் நெருங்கிய ஆத்மார்த்தமான நண்பர்களானது அவுஸ்திரேலியாவில்தான்.

தற்பொழுது அவர் எமது குடும்ப நண்பர். எனது செல்வங்களுக்கு கனிவான "அம்பித்தாத்தா." நான் வசிக்கும் மெல்பனுக்கு வருகைதரும் போதெல்லாம் அவர் எம்முடனேயே இருப்பார். நாமிருவரும் இரவில் நேரம் கழிவதே தெரியாமல் அதிகாலை வரையில் உரையாடிக்கொண்டிருந்த நாட்களும் பசுமையானவை.

இவ்வாறு தொடங்கும் முன்னுரையுடன் 15ஆண்டுகளுக்கு முன்னர் அம்பி வாழ்வும் பணியும் என்ற ஆய்வு நூலை எமது முகுந்தன் பதிப்பகத்தின் சார்பில் எழுதி வெளியிட்டேன். இந்நூலை அம்பியினதும் எனதும் இனிய நண்பரான (அமரர்) சுந்தா சுந்தரலிங்கம் அவர்களுக்கே சமர்ப்பித்தேன்.

அக்காலப்பகுதி அம்பியின் பவளவிழாக்காலமாகும். அந்த நூலை தமிழ்நாட்டில் மூத்த எழுத்தாளர் செ. கணேசலிங்கன் அச்சிட்டுத்தந்தார். எமது நான்காவது தமிழ் எழுத்தாளர் விழா கன்பராவில் நடந்தவேளையில் (25-01-2004) அதனை சம்பிரதாயபூர்வமாக வெளியிட்டுவைத்தோம். அன்று அவரது பவள விழாவையும் கொண்டாடினோம். பேராசிரியர் ஆசி. கந்தராஜா பவளவிழா வாழ்த்துரையை சமர்ப்பித்தார்.

மெல்பன், சிட்னி, கன்பரா ஆகிய நகரங்களைச்சேர்ந்த எழுத்தாளர்களும் இலக்கியவாதிகளும் வானொலி ஊடகவியலாளர்களும் கலந்து சிறப்பித்த இவ்விழாவில், அம்பியின் முன்னாள் மாணவியும் கன்பராவில் வதியும் பல்மருத்துவருமான திருமதி அபிராமி யோகநாதன் தனது நடன வகுப்பு மாணவிகளுக்கு அம்பியின் வேலம்மா என்ற கவிதையை நடனமாகப் பயிற்றுவித்து அரங்காற்றுகையை நிகழ்த்தினார்.

இலங்கை மலையகத்தில் பாடுபட்டு கொழுந்து பறித்து நாம் அருந்தும் தேநீராக விருந்து படைக்கும் பெண்கள் பற்றிய பாடலாகும். மெல்பனிலிருந்து வருகை தந்திருந்த இசை ஆசிரியர் திருமதி ரமாசிவராஜாவின் மாணவர்கள் அம்பியின் மற்றும் ஒரு பாடலுக்கு இசையமைத்து பாடினார்கள்.

அம்பியின் பவளவிழா பின்னர் மெல்பனிலும் சிட்னியிலும் நடைபெற்றன. அக்காலப்பகுதியில் மெல்பனிலிருந்து வெளியான உதயம் பத்திரிகையின் ஆண்டுவிழாவிலும் அம்பி வரவழைக்கப்பட்டு பாராட்டி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

அம்பி, யாழ். தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் ஆசிரியராக பணியாற்றிய காலப்பகுதியில் கலைஞரும் எழுத்தாளருமான மாவை நித்தியானந்தன் அம்பியின் மாணவராவார். மாவை நித்தி 1995 இல் மெல்பனில் பாரதி பள்ளியை ஆரம்பித்தபோது அதனை தொடக்கிவைத்தவரும் அம்பிதான். எமது தமிழ் எழுத்தாளர் விழாக்கள் மெல்பன், சிட்னி, கன்பராவில் நடந்தவேளைகளில் அம்பியும் முன்னர் தவறாமல் கலந்துகொள்வார்.

மெல்பனில் பண்டூரா என்னுமிடத்திலிருக்கும் பூங்காவில் அம்பி தலைமையில் கவியரங்குகளும் நடத்தியிருக்கின்றோம். இவ்வாறு ஒரு காலப்பகுதியில் உற்சாகமாக இயங்கி மற்றவர்களையும் உற்சாகப்படுத்திய அம்பி அவர்கள், உலகெங்கும் சுற்றியலைந்து, உலகளாவிய தமிழர் நூலை எழுதியவர்,

தற்போது, தமது 90வயதில், ஏறினால் கட்டில், இறங்கினால் சக்கரநாற்காலி என்று அமைதி காத்தாலும், உரையாடலில் தனக்கிருந்த உற்சாகத்தை குறைத்துக்கொள்ளாதவர்.

அத்துடன் நினைவாற்றலும் மிக்கவர். தனது கடந்த கால வாழ்க்கைப் பயணத்தை நேரடிப் பேச்சிலும் தொலைபேசி ஊடாகவும் பகிர்ந்துகொள்வார். அன்பின் மறுபெயர் அம்பி என சில வருடங்களுக்கு முன்னர் மல்லிகை, ஞானம் அட்டைப்பட அதிதி கட்டுரையில் இவர் பற்றி எழுதியிருக்கின்றேன். இவருடனான எனது இலக்கிய நட்புறவு குடும்ப நட்புறவாகவும் நெருங்கியமைக்கு இவரது நல்லியல்புகளே அடிப்படை.

சிட்னிக்கு சென்றால் அவருடன் சில மணிநேரங்கள் செலவிடுவதும் அவரது நனைவிடை தோய்தல் கதைகளை செவிமடுப்பதும், அவருடன் அமர்ந்து உணவு அருந்துவதும் எனது வழக்கம்.

நகைச்சுவையும் அங்கதமும் அவரது பேச்சில் இழையோடும். நினைத்து நினைத்து சிரிக்கத்தக்க பல கதைகளை அவர் எனக்கு சொல்லியிருக்கிறார். உதாரணத்திற்கு ஒரு சம்பவத்தை இங்கு குறிப்பிடுகின்றேன். அவர் மெல்பனுக்கு வரும் சமயங்களில் எமது இல்லத்தில் தங்குவார். ஒரு தடவை அவர் இரவு உணவுக்குப்பின்னர் எடுக்கும் மருந்தை (மாத்திரை) கொண்டு வருவதற்கு மறந்துவிட்டார். (நாமிருவரும் நீரிழிவுடன் சொந்தம் கொண்டாடுபவர்கள்)

நல்லவேளையாக என்னிடம் அவர் எடுக்கும் மாத்திரையின் மற்றும் ஒரு வகை இருந்தது. பெற்றுக்கொண்டார். மீண்டும் அவர் ஒரு தடவை மெல்பன் வருவதற்கு முன்னர் தொலைபேசியில் சொன்னார். அப்பொழுது "அம்பி, மறக்காமல் இரவு உணவுக்குப்பின்னர் எடுக்கும் மருந்தை கொண்டு வாருங்கள்" என்றேன். உடனே அவர், "நான் உணவுக்குப்பின்னர் எடுக்கும் மருந்தைக் கொண்டுவருகின்றேன். நீர் உணவுக்கு முன்னர் எடுக்கும் மருந்தை வாங்கிவைத்திரும்" என்றார்.

இவ்வாறு நெஞ்சத்துக்கு நெருக்கமாக உரையாடும் , உறவாடும் அம்பியிடம் கல்வி கற்ற மாணாக்கர்கள் இந்தப் பூமிப்பந்தெங்கும் வாழ்கிறார்கள். ஆனால், நானோ அவரது மாணவன் இல்லை. அதனால் ஆசான் மாணாக்கன் என்ற உறவுக்கு அப்பால் எம்மிடம் நீடித்திருப்பதும் எஞ்சியிருப்பதும் இலக்கிய நட்பும் சகோதர வாஞ்சையும்தான்.

இனி அவரது வாழ்க்கைச் சரிதையை படியுங்கள்.

இராமலிங்கம் அம்பிகைபாகர் என்ற இயற்பெயரைக்கொண்ட கவிஞர் அம்பி , இலங்கையில் வடபுலத்தில் நாவற்குழியில் 17-02-1929ஆம் திகதி பிறந்தார். தனது ஆரம்பக்கல்வியை நாவற்குழி சி.எம்.எஸ் பாடசாலையிலும் பின்னர் உயர் கல்வியை யாழ். பரியோவான் கல்லூரியிலும் தொடர்ந்த அவர் விஞ்ஞான மற்றும் கணித ஆசிரியராக 1950 ஆம் ஆண்டு முதல் 1968 ஆம் ஆண்டு வரையில் யாழ். தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் பணியாற்றினார்.

இக்கல்லூரி தனது மகத்தான சேவையில் இருநூறு ஆண்டுகளை நிறைவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சுமார் 18 ஆண்டுகள் வரையில்

இங்கு பணியாற்றிய அம்பி அவர்கள், அதன்பின்னர் கிழக்கிற்கு இடமாற்றம் பெற்றார். அங்கு முதலில் ஓட்டமாவடி முஸ்லிம் மகா வித்தியாலயத்திலும் அதன்பிறகு, மட்டக்களப்பு அரச கல்லூரியிலும் சேவையாற்றினார்.

கொழும்பு கல்வி வெளியீட்டுத்திணைக்களத்தில் 1969 இல் கணித பாடநூல் எழுத்தாளராகவும் பணியாற்றிய அம்பி, சனத்தொகை பயிற்சிக் கல்விக்கான புலமைப்பரிசில் பெற்று அமெரிக்கா சென்றார். அங்கு University of Connecticut (Institute of public service) இல் பயிற்சியை முடித்துக்கொண்டு, தாயகம் திரும்பி, மீண்டும் கொழும்பில் சனத்தொகை கல்விப் பாடத்திட்ட அதிகாரியாக பணியாற்றினார். அதன் பின்னர், 1981 இல் பாப்புவா நியூகினி நாட்டிற்கு பணிநிமித்தம் சென்று அங்கு தொலைக்கல்விகல்லூரியில் கணிதத்துறை தலைவராக பணியாற்றினார். அங்கிருந்து, 1992 ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்தார்.

இளம் பராயத்திலிருந்தே கவிதை, கவிதை நாடகம், சிறுகதை, கட்டுரை, விமர்சனம், ஆய்வு முதலான துறைகளில் அவர் அளப்பரிய பணிகளை மேற்கொண்டிருந்தபோதிலும் தமிழ்கூறும் நல்லுலகில் கவிஞர் என்றே அறியப்பட்டவர்.

அறிஞர் அண்ணா தமிழகத்தின் முதல்வராகப்பதவி ஏற்றதையடுத்து தமிழ்நாட்டில் 1968 இல் நடந்த இரண்டாவது தமிழாரய்ச்சி மாநாட்டிற்காக நடைபெற்ற அகில உலக கவிதைப்போட்டியில் பங்கேற்ற கவிஞர் அம்பி, அதில் வெற்றியீட்டி தங்கப்பதக்கம் பெற்றவர். இதனை அம்பி அவர்களுக்கு, அச்சமயம் தமிழக அரசில் அங்கம் வகித்த மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் வழங்கினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இரசிகமணி கனகசெந்திநாதன் ஈழத்து பேனா மன்னர்கள் என்ற தலைப்பில் தொடர் எழுதியபோது அம்பியின் எழுத்துலகம் பற்றியும் விரிவாக குறிப்பிட்டுள்ளார். இயல்பிலேயே இனிய பண்புகளை தன்னகத்தே கொண்டுள்ள அம்பி நகைச்சுவையாகவும் அங்கதம் தொனிக்கவும் பேசவல்லவர்.

இதுவரையில் 15 இற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியிருக்கும் அம்பி அவர்கள், இலங்கையின் தமிழ் மருத்துவத்துறை முன்னோடியான அமெரிக்க பாதிரியார் மருத்துவகலாநிதி சாமுவேல் கிறீன் அவர்களைப்பற்றி விரிவான ஆய்வு நாலை தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதியுள்ளார்.

அம்பி, அத்துடன் நில்லாமல் குறிப்பிட்ட மருத்துவ முன்னோடிக்கு இலங்கையில் தபால் தலை வெளியிடுவதற்கும் முயற்சித்து அதில் சாதனை புரிந்தார். அம்பியின் பரிந்துரையை ஏற்றுக்கொண்ட இலங்கை அரசு குறிப்பிட்ட தபால் தலையை வெளியிட்டது. இந்த மதிப்பிற்குரிய செயலைப் புரிந்தமைக்காக இலங்கையில் அமெரிக்க தூதுவராலயம் அம்பி அவர்களை அழைத்து கௌரவித்து பாராட்டியது.

சாமுவேல் கிறீன் அவர்களின் கல்லறை அமெரிக்காவில் மசாசூசெட் மாநிலத்தில் கிறீன் அவர்கள் பிறந்த ஊரான வூட்சரில் அமைந்துள்ளது. அவ்விடத்திற்கு இரண்டு தடவைகள் நேரில்சென்று மலரஞ்சலி செலுத்தியவர் அம்பி அவர்கள் என்பதும் முக்கிய தகவல்.

இலங்கையில் இவரிடம் கற்ற பல மாணவர்கள் பிற்காலத்தில் இவரது தூ ண்டுதலாலும் ஊக்குவிப்பினாலும் எழுத்தாளர் களாக அறிஞர்களாக, கவிஞர்களாக உருவாகியிருக் கிறார்கள். கவிதைத்துறையில் இவரது ஆற்றலை வியந்து தமிழக இலக்கிய இதழான சுபமங்களா இவரை ஈழத்தின் கவிமணி என்று புகழாரம் சூட்டியுள்ளது.

பாப்புவா நியூகினியிலும் அவுஸ்திரேலியாவிலும் குழந்தை இலக்கியத்தின் வளர்ச்சிக்காக ஆங்கிலத்திலும் தமிழிலும் சிறுவர் இலக்கிய வரிசையில் சில கவிதை நூல்களையும் எழுதியிருக்கிறார். அத்துடன் அவுஸ்திரேலியா சிட்னியில் தமிழ்மொழியை ஒரு பாடமாகப்பயில தமிழ் மாணவர்கள் முன்வந்தபோது அவர்களின் தேவைகருதி உருவாக்கப்பட்ட தமிழ்ப்பாட நூலாக்கக்குழுவில் பிரதம ஆலோசகராக பணியாற்றி இங்கு வாழும் தமிழ்க்குழந்தைகளின் தமிழ் அறிவுத்தேவையை பூர்த்தி செய்வதற்கு தொடர்ச்சியாகத் தொண்டாற்றினார்.

அவுஸ்திரேலியாவுக்கு இலங்கை, சிங்கப்பூர்,மலேசியா, இந்தியா முதலான நாடுகளிலிருந்து தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களின் குழந்தைகளின் நாவில் தமிழ் வாழவேண்டும் என்பதற்காக இந்நாட்டில் உருவாக்கப்பட்டுள்ள தமிழ்ப் பாடசாலைகளில் தமிழைக் கற்பிக்க அமைக்கப்பட்ட பாடநூ லாக்கக் குழுவில் கவிஞர் அம்பியின் பணியானது விதந்து போற்றுதலுக்குரியது.தமிழ்சார்ந்த மாநாடுகள், கருத்தரங்குகள், விழாக்கள் உட்பட பல கவியரங்குகளிலும் அம்பி

அவர்கள் புகலிட நாடுகளில் வாழும் தமிழர்கள் தமிழை மறந்துவிடக்கூடாது என்ற தொனிப்பொருளிலேயே தொடர்ச்சியாக குரல் எழுப்பிவந்துள்ளார். அத்துடன் இதுதொடர்பாக பல கட்டுரைகளும் எழுதியுள்ளார். தேமதுர தமிழ் ஒசை உலகமெலாம் பரவச்செய்யவேண்டும் என்ற மகாகவி பாரதியின் கனவை நனவாக்க தமிழின் சிறப்பை ஏனைய மொழிகள் அறிந்தவர்களுக்காக ஆங்கிலத்திலும் எழுதி தமிழுக்கு தொண்டாற்றியுள்ளார்.

எழுத்துலகில்......

தினகரன் வாரமஞ்சரியில் வெளிவந்த இலட்சியச் சோடி என்ற சிறுகதையின் மூலம் இலக்கிய உலகில் அறிமுகமானஅம்பியின் படைப்புகள் :

-கிறீனின் அடிச்சுவடு -அம்பி பாடல் (சிறுவர் பாடல்கள்)

-வேதாளம் சொன்ன கதை (மேடை நாடகம்)

-கொஞ்சும் தமிழ் (சிறுவர் பாடல்கள்)

-அந்தச் சிரிப்பு -யாதும் ஊரே ஒரு யாத்திரை

-அம்பி கவிதைகள் -மருத்துவத் தமிழ் முன்னோடி

-Ambi's Lingering Memories (Poetry) பப்புவா நியூ கினி

-Scientific Tamil Pioneer Dr Samuel Fisk Green

-உலகளாவிய தமிழர் -A String of Pearls

-பாலர் பைந்தமிழ்

அம்பியின் நாடகங்கள்

-அம்பியின் வேதாளம் சொன்ன கதை கவிதை நாடகம்,

இலங்கையில் பிரபல நாடக இயக்குநர் சஹேர் ஹமீட் நெறியாள்கையிலும், யாழ்பாடி என்ற கவிதை நாடகம் அவுஸ்திரேலியாவில் அண்ணாவியார் இளையபத்மநாதனின் அண்ணாவியத்திலும் அரங்கேறியுள்ளன. தமிழில் விஞ்ஞானக்கட்டுரைகளை இலங்கையில் எழுதிய முன்னோடி கவிஞர் அம்பி அவர்கள் என்று பிரபல இலக்கிய விமர்சகர் கே. எஸ். சிவகுமாரன் அம்பியைப்பற்றி இலங்கையில் வெளியாகும் The Island பத்திரிகையில் எழுதியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

அம்பி இதுவரையில் பெற்றுள்ள விருதுகள்.....

1968 உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டு விருது (தங்கப்பதக்கம்)

1993 இலங்கை இந்து கலாசார அமைச்சின் "தமிழ்மணி விருது"

1994 கொஞ்சும் தமிழ் சிறுவர் இலக்கிய நூலுக்கு இலங்கை சாகித்திய விருது.

1997 அவுஸ்திரேலியாவில் மெல்பன் "நம்மவர்" விருது.

1998 கனடாவில் சி.வை. தாமோதரம் பிள்ளை விருது (துங்கப்பதக்கம்)
2004 அவுஸ்திரேலியாகன்பரா தமிழ் இலக்கியகலைச்சங்கத்தின்விருது
இலங்கையில் மல்லிகை, ஞானம் ஆகிய இலக்கிய இதழ்கள் முகப்பில் அம்பியின் உருவப்படத்துடன் அவரது பணியை பாராட்டி கட்டுரை எழுதி கௌரவித்துள்ளன.

அவுஸ்திரேலியா சிட்னியில் தமது மனைவி, மக்கள், மருமக்கள் மற்றும் பேரப்பிள்ளைகளுடன் வசிக்கும் அம்பியின் "ஓடிடும் தமிழா" என்ற கவிதை பிரபல்யமானது."புத்தம் புதிய கலைகள் மெத்த வளருது மேற்கிலே" சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச்செல்வம் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்" என்று நூற்றி முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் மக்களுக்கு அறைகூவல் விடுத்தவர் மகாகவி பாரதியார். பாரதியின் தமிழ்க் கவிதை இலக்கிய மரபில் தோன்றியிருக்கும் கவிஞர் அம்பி அவர்கள், உலகெங்கும் புலம்பெயர்ந்துசென்று வாழும் தமிழர்கள் தமது தாய்மொழியை கைவிட்டுவிடலாகாது என அக்கவிதையில் அறைகூவல் விடுத்துள்ளார். அம்பி கவிதைகள் நூலிலும் பல இதழ்கள், இணையத்தளங்களிலும் வெளியாகியிருக்கும் பிரசித்திபெற்ற அக்கவிதையை இங்கு காணலாம்.

ஓடிடும் தமிழா

ஓடிடும் தமிழா நில், நீ ஒரு கணம் மனதைத்தட்டு
வீடுநின்னூருள் சொந்தம், விளைநிலம் நாடு விட்டாய்
தேடியதெல்லாம் விட்டுத்திசைபல செல்லும் வேளை
பாடிய தமிழை மட்டும் பாதையில் விட்டிடாதே
ஓர்தலைமுறையின் பின்னே உன்னடி உறவென்றேனும்
ஊரிலே அறியாப்பிள்ளை உலகரங்கினில் யாரோ
தாரணிமீதில் நானோர் தமிழனென்றுறுதி செய்யின்
ஊர்பெயர் உடைகள் அல்ல ஒண்டமிழ் மொழியே சாட்சி
சாட்சியாய் அமையுஞ் சொந்தச் செந்தமிழ் மொழியே முன்னோர்
ஈட்டிய செல்வம் எங்கள் இனவழிச்சீட்டாம்
ஏந்த நாட்டிலே வாழ்ந்தபோதும் நடைமுறைவாழ்வில் என்றும்
வீட்டிலே தமிழைப்பேணும் விதிசெயல் கடமை ஐய!
வீட்டிலே தமிழைப்பேசும் விதி செயல் கடமை ஆமாம்
பாட்டனாய் வந்து பேரன் பரம்பரை திரிதல் கண்டே
ஈட்டிய செல்வம் போச்சே, இனவழி போச்சே என்று
வாட்டு நெஞ்சுணர்வை வெல்ல வழி பிறிதொன்றுமில்லை.

அம்பி அவர்களின் 90 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு சிட்னி வாழ் அன்பர்கள் பெருவிழாவை நடத்தினார்கள்.
அம்பி நல்லாரோக்கியத்துடன் வாழ வாழ்த்துகின்றோம்!...

# அன்பின் மறு உருவமாய் அன்னை தெரேசா...



26.10.1910 05.09.1997

"அன்னை" என்ற வார்த்தை சிலரின் வாழ்க்கைக்கு அடைமொழியாய் நிற்கும்போது அதற்கு அழகு கூடுகிறது. மெசடோனியா நாட்டில் எங்கோ ஒரு மூலையில் அல்பேனிய இனத்தில் பிறந்த ஆக்னஸ், பின்னாளில் தெரேசாவாக உருவெடுத்தபோது. அத்தகைய அன்னை பூமியில் அவதரித்து இறந்தநாள் நாள் புரட்டாதி 5 ஆகும்.

அவருக்கு இந்த "அன்னை" என்ற அடைமொழி அழகாய் பொருந்தி நின்றது. "அன்னை தெரேசா" என்று உச்சரிக்கும்போதே சாந்தமே உருவான ஒரு கருணை பொங்கிய முகம் நம் மனக்கண் முன்னால் ஒரு நொடி நிழலாடிச் செல்வது தான் உண்மை.. கடவுள் உள்ளமே.. கருணை இல்லமே.. அன்னை தெரசா கருணையின் உருவமாக, சேவையின் உறைவிடமாக இன்றளவும் புகழப் படுபவர் அன்னை தெரசா. அல்பேனியா நாட்டைப் பூர்வீகமாக கொண்ட அன்னை தெரசாவின் இயற்பெயர் ஆக்னஸ் கோன்ஜா போஜாஜியூ.

இவர் கடந்த 1910-ம் ஆண்டு அகஸ்டு மாதம் 26-ந்தேதி பிறந்தார். இவர் இந்திய குடியுரிமை பெற்ற ஒரு ரோமன் கத்தோலிக்க அருட்சகோதரி ஆவார். 12 வயதில் முதன்முதலாக ஆன்மிக அழைப்பை உணர்ந்த அன்னை தெரசா, தனது 18 வயதில் கன்னிகா ஸ்திரீயாக மாறுவது என முடிவு செய்தார். இதற்காக வீட்டைவிட்டு வெளியேறி, "சகோதரி தெரசா" என தன் பெயரை மாற்றிக்கொண்டார். 1923-ல் "சோடாலிட்டி ஆஃப் சில்ரன் ஆஃப் மேரி" என்ற சமூக சேவை அமைப்பில் இணைந்தார்.

பின்பு 1929-ல் கொல்கத்தா வந்த அன்னை தெரசா, அங்கு ஒரு பள்ளியில் சுமார் 17 ஆண்டுகள் பணிபுரிந்தார். 1946-ல் ஏழைகளுக்கு உதவுவதற்காக கற்பித்தல் பணியிலிருந்து விலகிய அன்னை தெரசா, சேவை செய்வதற்காக செவிலியர் பணிக்கான மருத்துவப் பயிற்சி பெற்றார். 1950-ம் ஆண்டு, இந்தியாவின் கொல்கத்தாவில் பிறர் அன்பின் பணியாளர் என்ற கத்தோலிக்க துறவற சபையினை நிறுவினார்.

நாற்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக ஏழைஎளியோர்களுக்கும், நோய்வாய்ப்பட்டோருக்கும், அனாதைகளுக்கும், இறக்கும் தறுவாயிலிருப்போருக்கும் தொண்டாற்றினார். 1952-ல் "நிர்மல் ஹ்ருதய்" என்ற இல்லத்தைத் தொடங்கினார். கொல்கத்தா தெருக்களில் ஆதரவற்றுக் கிடந்த ஏராளமான தொழுநோயாளிகளை இங்கு கொண்டு வந்து பராமரித்தார். அவர்களின் காயங்களுக்கு மருந்திட்டார்.

முதலில் இந்தியா முழுவதும் நிறுவப்பட்ட அன்பின் பணியாளர் சபை, பின்னர் வெளிநாடுகளுக்கும் சென்றது. சமூகசேவை, சகிப்புத்தன்மை மூலம் இவரது புகழ் உலகம் முழுவதும் பரவியது. அதன் தொடர்ச்சியாக 1979-ல் அமைதிக்கான நோபல் பரிசும், 1980-ல் இந்தியாவின் சிறந்த குடிமக்கள் விருதான பாரத ரத்னா விருதும் அன்னை தெரசாவிற்குக் கிடைத்தது. இது மட்டுமின்றி ஜவஹர்லால் நேரு விருது, பாரத ரத்னா விருது, அமெரிக்க ஜனாதிபதி பதக்கம், பிலிப்பைன்சின் ரமன் மகசேசே விருது, ஆர்டர் ஆஃப் ஆஸ்திரேலியா, மற்றும் இங்கிலாந்து, அமெரிக்க நாடுகளின் ஆர்டர் ஆஃப் மெரிட் உள்ளிட்ட 50-க்கும் மேற்பட்ட விருதுகளையும் கவுரவங்களையும் அவர் பெற்றுள்ளார்.

அன்னை தெரேசாவின் பிறர் அன்பின் பணியாளர் சபை எய்ட்ஸ், தொழுநோய் மற்றும் காசநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நல்வாழ்வு மையங்கள், இலவச உணவு வழங்குமிடங்கள், குழந்தைகள் மற்றும் குடும்பத்திற்கான ஆலோசனைத் திட்டங்கள், அனாதை இல்லங்கள், பள்ளிக்கூடங்கள் போன்ற சேவைகளில் பங்காற்றி வருகிறது. அரை நூற்றாண்டுக்கும் மேலாக மானுட சேவையில் ஈடுபட்டு வந்த அன்னை தெரசா 1997-ம் ஆண்டு 87-வது வயதில் மறைந்தார். இறப்புக்குப் பின் அவருக்கு திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பரால் முக்திபேறு அடைந்தவராக அறிவிக்கப்பட்டு கொல்கத்தாவின் அருளாளர் தெரசா என்று பட்டம் சூட்டப்பட்டார்.

# இருளவுள்ள உலகை, இறுக்கும் தீ!......

உற்பத்தித் தொழிற்சாலை ஒன்று எரிகின்றது, அதனுடன் சேர்ந்து சுத்திகரிப்புச் சாலையும் சேர்ந்து எரிகின்றது. இது ஒரு விடுகதை அல்ல, உண்மையான ஒரு சம்பவம். இன்று உலக மக்களிற்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய ஒரு நிகழ்வு உலகின் ஓரிடத்தில் நடக்கின்றது.

பிரேசில் நாட்டில் தன்னுடைய கொடிய செந் நாவை நீட்டி அகட்டி அமேசன் காட்டையே விழுங்கி கொண்டிருக்கும் தீயானது அந்த நாட்டு அரசியல்த் தலைவர்களின் ஆசியுடனேயே பரவத் தொடங்கியது. உலகில் உள்ள மிகப் பெரிய காடு என்று கணிக்கப்பட்ட அமேசான் காட்டில், விலைமதிப்பற்ற மூலிகைச் செடிகள், அரிய வகை உயிரினங்கள், பெரிய சிறிய மரங்கள், பல வகை விலங்குகள் என மனிதனிற்கு வளங்கள் கொடுக்கும் வரமாக உள்ளது.

இந்தக் காட்டுத் தீயால் மேற்குறிப்பிடப்பட்டவை அழியும் நிலையில் உள்ளதோடு மனிதனிற்கு தீங்கு செய்யும் $CO$ காபன் மொனொட்சைட் வாயுவும் வெளிவிடப்படுகின்றது. இந்த வாயுவை சுவாசித்தால் தலைவலி வாந்தி மயக்கம் என்பன ஏற்படும். அதிகளவு சுவாசிக்க நேர்ந்தால், சுயநினைவற்று மரணிக்கும்நிலை ஏற்பட வாய்ப்பும் உருவாகும். உலகின் நுரையீரல் என்று அழைக்கப்படும் அமேசன் காடுகள் உலக மக்கள் சுவாசிக்கத் தேவையான உயிர்வாயுவான $O_2$ ஒட்சிசன் வாயுவின் 20 விழுக்காட்டைக் கொடுக்கின்றது. $O_2$ஐ உற்பத்தி செய்வதால் மரங்கள் உற்பத்தித் தொழிற்சாலையாக உள்ளது. அதே நேரம் ஒளித்தொகுப்பு நடப்பதால் $CO_2$ காபன் ஈர் ஒட்சைடை உள் எடுத்து $O_2$ ஆக மாற்றுகின்றது. இச் செயற்பாட்டால் வளிமண்டலம் சுத்திகரிக்கப்படுவதால் சுத்திகரிப்பு ஆலையாகவும் மரங்கள் உள்ளது

அமேசன் காடானது எரிந்து அழியும் பொது $O_2$ உற்பத்தித் தொழிற்சாலையும், வளிமண்டல சுத்திகரிப்புத் தொழிற்சாலையும் எரிகின்றது என்பது கண்கூடு. சகாரா பாலைவனத்தில் பறக்கும் புழுதிமண் அமேசான் காட்டு மரங்களிற்கு உரமாக மாறுகின்றது. அமேசான் காட்டிலிருந்து வெளிவரும் $O_2$ உலக மக்களின் சுவாசத்திற்கு உதவுகின்றது. இன்று இக்காடானது எரிந்து கொண்டிருப்பதனால், வளி மண்டலத்தில் மனிதனிற்கு ஆபத்து விளைவிக்கும் $CO$ காபன்மொனொட்சைட் கலந்து கொண்டுள்ளது.

இதை வளிமண்டல அகச் சிவப்பு ஒலிக்கருவி (Atmospherie Infrared Sounder) மூலம் நாசா கண்டுபிடித்து அறிவித்துள்ளது. இந்த வாயு, வளிமண்டலத்தில் நீண்ட தூரத்திற்குச் சென்று காற்றை மாசுபடுத்தி பசுமை இல்ல வாயு மற்றும் பருவ நிலை மாற்றம் என்பன ஏற்படுத்தி சுற்றுச் சூழல் கேடு விளைவிக்கும்.

காற்றிற்கு ஏது வேலி என்பதற்கிணங்க அமேசன் காட்டிலிருந்து $O_2$ ஐ பெற்றுக் கொண்ட உலகம், இன்று CO காபன் மொனொட் ஸைட் டை சுவாசிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். அமேசான் காட்டை அழிப்பதன் மூலம் பிரேசில் நாட்டில் விவசாய நிலத்தைப் பெருக்கிக் கொள்ளலாம் என்னும் குறுகிய நோக்கமிருந்த போதும், இயற்கை வளமிகுந்த அமேசன் காடு பொதுவுடைமையாகும். பொது நல நோக்கத்தோடு அவாதானித்தால், இந்தத் தீப்பரம்பலால் பெரும் ஆபத்துண்டாகியுள்ளது. G-7 உச்சி மகாநாட்டில் அமேசன் காட்டுத் தீயை அணைக்க 22 மில்லியன் அமெரிக்க டொலர் வழங்க முடிவு செய்யப்பட்டது. ஆனால் அவ்வுதவியைப் பெற பிரேசில் மறுத்துவிட்டது. அதை ஏற்க சில நிபந்தனைகளையும் விதித்துள்ளது.

நாசா வெளியிட்டுள்ள ஒளிப்படம் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. நாசா வெளியிட்டுள்ள வரைபடத்தில் CO கார்பன்மொனொட்ஸைட்டு அடர்த்தியாக பச்சை நிறத்தில் காணப்படுகின்றது. இந்தக் CO கார்பன்மொனொட்ஸைட்டு கலந்துள்ள மேகங்கள் அமேசன் பகுதியின் வடமேற்குப் பகுதிக்கு பரந்து விரிந்து செல்லுகின்றது. அங்கிருந்து தென்கிழக்கு பகுதியை நோக்கி பரவுகின்றது.

தாயானவள் பிள்ளைக்கு உயிர்கொடுத்தது போல் மரங்கள் மனிதனிற்கு சுவாசிக்க (உயிர்வாழ) $O_2$ தருகின்றது. தாயிற்கு ஒரு கேடு வந்தால் தனயன் வாழாதிருக்கலாமோ? அமேசன் காட்டிற்கு ஏற்பட்ட அழிவை தடுத்து நிறுத்த வேண்டியது மனிதனின் கடமை. உலகத்தின் நுரையீரல் என்று அழைக்கப்படும் அமேசன் காட்டை அழிவில் இருந்து பாதுகாக்க நாம் என்ன செய்ய வேண்டும்? தீயை அணைக்க எம் கைகளால் முடிவில்லையாயினும், இந்தக் கட்டுரையை உங்கள் உறவுகளோடும் நட்புகளோடும் பகிர்ந்து மனித உணர்வுகளைத் தட்டி எழுப்பி தீயை கட்டுப்படுத்தி உலகைக் காக்க உங்களாலும் முடியும். இதோ அந்த அரிய வாய்ப்பு உங்களிற்கு!....

எழுத்து:- மங்கை அரசி.

# சிரி.....சிரி.........சிரிப்பு......

1) ஆசிரியர்:-இரண்டு திருக்குறள் சொல்லுபார்ப்பம்....
மாணவன்:- "பீடியால் சுட்டபுண் உள்ளாறும் மாறாதே
லேடியால் சுட்ட மனம்"
"மகன் தந்தைக்காற்றும் உதவி மதவில்
குந்தியிருந்து பீடிகுடிக்கச் செயல்"

2) கடன்கொடுத்தவர்:-
"கடன்பட்டார் நெஞ்சம்போல் கலங்கினான் இலங்கை வேந்தன்" என்று சொல்லுவாங்கள்.இவனுக்குக் கடன் கொடுத்துவிட்டுக் கலங்கவேண்டியுள்ளது..
கடனாளி:-ஏய்...இப்ப யாரப்பா உன் பணத்தை இல்லை என்று சொன்னது. நேரம் வரும்போது வெளிநாடு சென்று உழைத்தால் தரலாம் என்பதுதான் எனது திட்டம்..

3) ஒருவர்:-நம்ம காரியாலயத்துக்கு புது மனேச்சர் வந்ததால ஒருத்தரும் தூங்கவே முடியவில்லை..
மற்றவர்:- ஏன்?...
ஒருவர்:- மனேச்சர் விடுகிற கொறட்டைச் சத்தம் எல்லாரையும் எழுப்பி விடுகிறது...

4) கண்மணி:-அம்மணி நாங்கள் புதிதாக முதியோர் இல்லம் ஆரம்பிக்கப் போகிறோம்..உங்களால் ஏதாவது தரமுடியுமா?..
பொன்மணி:-தாரளமாகத் தரலாம் என்னோட மாமனாரையும் மாமியாரையும் தரலாம்....

5) கண்ணன்:-இந்த மணிக்கூடு ஓடுமா?...
குமரன்:-ஓ....நான் தூக்கிக்கொண்டு ஓடினால் ஓடும்...

6) தரகர்:-பொண்ணுக்குக் கொஞ்சம் வாய் நீளம் பறவாய் இல்லையா?..
தந்தை:-அதனாலென்ன மகனுக்குக் கொஞ்சம் கை நீளம் அவ்வளவுதான்....

இவைபோன்ற சிரிப்புக்களை எமக்கு அனுப்பி வையுங்கள் வாசகர்கள் சிரித்து மகிழட்டும்!.. ஆயுள் பெருகட்டும்!..

# விழிப்புணர்வு.....

புலம்பெயர் தமிழ் உறவுகளே சற்றுச் சிந்தியுங்கள்...! இலங்கையில் உள்ள உங்கள் உறவினர்களிடத்தில் வெளிநாட்டு மதுபானங்களையும் சிகரெட்டுகளையும் அறிமுகப் படுத்தாதீர்கள் மாறாக முடிந்தால் வெளிநாட்டு கல்வியையும், பொருளாதாரத்தையும் அறிமுகப் படுத்துங்கள். மாதாந்தம் பணம் வழங்கி முதுகெலும்பற்ற தங்கிவாழும் தலைமுறையை உருவாக்காதீர்கள், முடிந்தால் நிலையான வருமானமீட்டலிற்கு -வாழ்வாதாரத்திற்கு உதவி செய்யுங்கள்.

இலங்கைவாழ் உங்கள் உறவுகளிற்கு ஆடம்பர வாழ்க்கைக்கு பணம் வழங்கு வதைவிட இன்னமும் அடிப்படை வசதிகளிற்காய் ஏங்கும் தமிழ் உறவுகளிற்கு உதவுங்கள். பனியில் வெய்யிலில் பதினொருமாதம் வேலை செய்து ஒரு மாதம் ஒய்வெடுக்க நீங்கள் வருவதை நாமறிவோம் ஆயினும், உங்கள் ஒருமாத கால உல்லாச வாழ்க்கையையே வெளிநாட்டு வாழ்வாக எம்மவர்கள் பிழையாக புரிந்துகொள்கின்றார்கள்.

எனவே இங்குள்ள ஒருமாத காலத்திலும் உங்கள் செயற்பாடுகள் சிறந்த முன்னுதாரணமாக அமைந்தால் சிறப்பு. (குறிப்பாக நீங்கள் கூழ் காச்சி தண்ணி அடிக்கேக்க எடுக்கின்ற புகைப்படங்களை தயவு செய்து சமூக வலைத்தளங்களில் பதிவேற்ற வேண்டாம். ) தற்பொழதுள்ள இளைய தலைமுறையை இலங்கையிலேயே தொடர்ந்து தமது அடையாளத்துடன் வாழ அறிவுரை கூறுங்கள். இன்னமும் தமிழர் குடிபெயர்ந்தால் இது சிங்கள மக்களிற்கான நாடு என்பதில் பிழையேதும் இல்லை.

குறிப்பாக கற்ற அறிவுசார் உறவுகளிடத்தில் உங்கள் கல்விக்கு நீங்கள் வெளிநாடு வந்தால் இவ்வளவு உழைக்கலாம் என இலங்கை ரூபாவில் பெருக்கி கூறாதீர்கள் அவர்கள் தான் எதிர்காலத்தில் ஏனைய தமிழ் மக்களிற்கு பலமாகவும் வழிகாட்டியாகவும் இருக்கப் போகின்றவர்கள். அனைத்து புலம்பெயர் உறவுகளிற்குமான பதிவல்ல, சூழ்நிலை சார்ந்து பொருந்தக்கூடிய உறவுகளிற்கானது. பதிவிட்டவர் யாழ் பல்கலைக்கழக சட்டத்துறை பழைய மாணவரான தனஞ்செயன் அனைவரும் பகிர்ந்து கொள்வோம் விழிப்புணர்வு தான் விடுதலையின் முதற்படி.

# நாமும் நாட்டு நிலவரமும்.........

(கலைவாணி.ஏகானந்தராஜா)

தற்போது தமிழர் புலம்பெயர் தேசமெங்கும் கோவில்கள் திருவிழாக்கள் என்றும், திருமணம், சாமத்தியசடங்கு, பிறந்தநாள் விழா, வெள்ளிவிழா என்றும் சனி ஞாயிற்றுக்கிழமை என்றால் ஒரே அமளிதான். அங்கிருந்து கடத்தப்பட்ட நாம் இங்கு என்னவெல்லாம் செய்கிறோமோ அவற்றையெல்லாம் புலம்பெயர் நாடுகளுக்கும் கடத்திவிட்டோம். பணத்தையும் பொருட்களையும் மட்டுமல்ல, உடை நடை பாவனை ஆடம்பரங்கள் எல்லாவற்றையும் அல்லவா கடத்தி யுள்ளோம்.

வீடியோக்கள் படங்கள் மூலமும் ஊடகங்கள் மூலமும் கடத்தப்பட்டவை கொஞ்சநஞ்சமல்ல. நாம் செய்த தவறுகளுக்கு நாம்தானே தண்டம் செலுத்தவேண்டும். அதனால்த்தான் ஊரில் நடக்கும் திருவிழாவுக்கும் திருமணத்திற்கும் பிறந்தநாள் விழாவுக்கும் லட்சக்கணக்கில் பணம் அனுப்பும்படி கேட்கிறார்கள். அனுப்பித்தானே தீரணும்.? ஊரில் ஒருநாள் திருவிழாவுக்கு இரண்டு லட்சம் ரூபா வேண்டுமாம். மதியம் அன்னதானம் இரவு பலகாரம் உட்பட. (விஷேட நாதஸ்வரம் மேளக்கச்சேரிக்கு தனிப்பட வேறு. ) புலம்பெயர் நாடுகளைப்போலவே அங்கும் வசந்தமண்டப சுவாமிக்கு அலங்கார ஆபரணங்கள் எந்தநிறத்தில் சாத்தப்படுகிறதோ அதே நிறத்தில் பிராமணர்களின் பட்டு பீதாம்பரம் அலங்காரம் அமைந்திருக்கும். அந்தணர்கள் மட்டுமா சுவாமி காவும் பக்தர்களும் அடியார்களும் கூட சுவாமிக்கு பச்சை சாத்தும்போது பச்சை சேலை தேடி வாங்கி உடுக்கும் அளவுக்கு நாட்டு நிலவரம் மாறியுள்ளது.

இதே நிலமைதான் திருமணம் சாமத்தியசடங்கு பிறந்தநாள் விழாக்களிலும் காணப்படுகிறது. திருமண தம்பதிகள் முதல் மண்டப சோடனைவரை ஒரே நிறம் தான். மேடையில் பத்து ஆண்கள் ஒரேநிற சேட்டு அணிந்திருக்க அதே நிறத்தில் பத்து பெண்கள் ஒரே மாதிரி சேலை அணிந்திருப்பர். இந்த செலவு கூட திருமண தம்பதிகளின் செலவுதானாம். இப்படியான ஆடம்பர திருமணங்களுக்கு எங்கிருந்து பணம் போகிறது?.. இந்த ஆடம்பரங்களை தொடக்கிவைத்தவர்கள் யார்..?

அண்மைச் செய்தி ஒன்று இந்தியாவில் இருந்து இலங்கைக்கு செல்லும் விமானத்தில் பயணிகள் குறைந்துவிட்டதாம். ஆனால் விமானத்தில் மல்லிகை பூ ஏற்றுமதி செய்வதால் விமானச்சேவைக்கு வருமானம் கிடைக்கிறதாம். வெளிநாடுகளில் திருமணமண்டபத்தில் அல்லது தமிழர் விழாக்களில் (நடன அரங்கேற்ற விழாவில் ) வாசலிலே மல்லிகைப்பூவும் ஒரு கிளிப்பும் கொடுப்பது தற்போது வழக்கத்தில் வருகிறது. நல்ல காரியங்களில் பெண்கள் பூவும் பொட்டுமாக நிற்பதற்கு பூ கிடைக்காமல் போவதுதான் காரணம் என்றாகிவிடக் கூடாது என்கிற நல்லெண்ணம் தான்.

இந்த நாடுகளின் காலநிலைக்கு இந்தப் பூ மரங்கள் சரிவராது என்பதும் உண்மைதான். ஆனால் மல்லிகைச்செடி வளர்வதற்க்கு ஏற்ற காலநிலை சுவாத்தியம் உள்ள யாழ்ப்பாணத்துக்கு மல்லிகைப்பூ இந்தியாவில் இருந்து வரவேண்டுமா? இவையெல்லாம் அதிகமாகப் படவில்லையா? சிந்திக்கவேண்டியவர்கள் யார்?..மாற்றம் ஒன்றே மாறாதது என்பது உண்மைதான். ஆனால் இந்த மாற்றங்கள் ஆரோக்கியமானதா?.. என்பதே என் கேள்வி.

மற்றுமொரு அண்மைச் செய்தி, நாட்டில் தற்போது வாள்வெட்டு, வழிப்பறி, களவு இப்படிப் பல அட்டூழியங்கள். வெளிநாடுகளில் இருந்து போன ஒரு குடும்பத்திடம் 30 பவுண் நகை 600 யூரோ பணம் களவாடப்பட்டதாம். தவறு எங்கே? வேளிநாடுகளியேலே நகைகளை வெளியே அணிந்து செல்லமுடியாத சூழ்நிலை. அதை ஊரில் போட்டுக்காட்ட முடியுமா? யாரை யார் நோவது?.. வாள்வெட்டு வழிப்பறி ஒரு பக்க மோசடி இடம்பெற்றுக்கொண்டிருக்க, இன்னுமொரு பக்கம் டாக்டர்கள் சிலர் நோயாளிகளை மோசடி செய்து பணம் சம்பாதிக்கின்றனர். ஒப்பரேஷன் என்ற பெயரிலும் கண் வைத்தியம்என்ற பெயரிலும் செய்யும் மோசடிகள் பலப் பல. ஒரு தனியார் மருத்துவமனையில் மூச்செடுக்கமுடியாமல் முட்டுடன் வந்த நோயாளியை பரிசோதித்த டாக்டர் மருந்தை எழுதிக்கொடுத்து பணத்தையும் பெற்றுக்கொண்டபின் ,மருந்து கொடுப்பவர் (Dispencer) இன்று லீவுநாளை வந்து மருந்தை பெற்றுக்கொள்ளுங்கள் என்று கூறினாராம். நோய் நாளைவரை காத்திருக்குமென்றால் டாக்டர் பணத்தையும் நாளையே பெற்றிருக்கலாமே?... யாரை?.. யார் கேட்கமுடியும்!..

இன்னும் தொடரும்!.....

# மனிதம் நிறைந்ததொரு மனிதரோடு நானும்..... தோழர் கார்த்திகேசன் நினைவாக......

-வண்ணைத்தெய்வம



பச்சை மரத்தில் ஆணி அடித்ததுபோல இன்னமும் என் மனதின் ஆழத்தில் ஆழப் பதிந்திருக்கின்றது அந்த நினைவு...! சுமார் ஒரு அறுபது வருடங்கள் இருக்கும் என நினைக்கின்றேன். யாழ் மாநகரசபையின் 10ம் வட்டாரத்தில் (அன்று யாழ் மாநகரசபை பத்து வட்டாரங்களாகத்தான் இருந்தது) ஒற்றைக்கை துரைராசா என்னும் பணபலமும், (கூலிப்) படைபலமும் கொண்ட தமிழ் காங்கிரஸ் கட்சியின்வேட்பாளரை எதிர்த்து, கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் போட்டியாளராக எங்கள் கார்த்திகேசன் மாஸ்ரர் களத்தில் நின்றிருந்தார். கார்த்திகேசன் என்றால் யார் என்று எங்களுக்கு முகம் தெரியாது!

ஆனாலும் அந்தத் தூறல் மழையையும் பொருட்படுத்தாது சிவப்புக் கொடிகளை கைகளில் பிடித்துக்கொண்டு "போடு புள்ளடி நட்சத்திரத்திற்கு நேரே" என கத்திக்கொண்டு நானும் என்னுடைய வயதுடைய சில சிறிசுகளுமாக கிடங்கும் பள்ளமுமாக இருந்த அந்த மக்கிக்கிடங்கு வீதியில் வலம் வருகின்றோம்! சிறுவர்களான நாங்கள் மட்டுமல்ல எங்கள் அயலில் உள்ள இளைஞர்கள், பெரியவர்கள், முதியவர்கள் என அனைவரதுமனங்களிலும் சிம்மாசனம் போட்டு அமர்ந்திருந்தவர் கார்த்திகேசன் மாஸ்ரர்தான்!

எனக்கு விபரம் தெரிந்த நாட்களில் மாஸ்ரரை சந்தித்தபோது வியந்து நின்றேன்! காரணம் இவர் ஏனைய கல்விமான்களைப்போல படித்தவர் என்னும் கர்வம் இம்மியளவும் இல்லாதவர்! (நான் அறிந்த பல படித்த மனிதர்கள் ஆங்கிலம் தெரியாதவர்களிடமும் கதைக்கும்போது ஆங்கிலச் சொற்களை இடையிடையே புகுத்தித்தான் பேசுவார்கள்) மிகவும் சாதுவான போக்குடையவர், மற்றவர்களுடன் உரையாடும் போதும், பிரச்சனைகளை அணுகும்போதும் நிதானமான போக்குடையவர். எந்த நேரமும் சிரித்த முகம். நண்பர்களாக இருந்தாலும் சரி உதவி கேட்டுவரும் புதியவர்களாக இருந்தாலும்சரி அவர்களை உபசரிப்பதில் அவரும் அவருடைய மனைவியாரும் பெரும்அக்கறை காட்டுவார்கள். இப்படியான ஒரு மனிதரை மிக அரிதாகவே காணமுடியும்!.

அவருடைய படிப்பிற்கும், சமூகத்தில் அவருக்கு இருந்த மதிப்பிற்கும் என் போன்றவர்களெல்லாம் ஒரு கொசுறுக்குச் சமம்! ஆனாலும் நான் அவருடைய இல்லத்திற்கு செல்கின்ற சமயங்களில் பல பெரிய மனிதரர்களுடன் உரையாடிக்கொண்டிருந்தாலும் நான் சென்றதற்கான காரணத்தை கேட்டறிவதில்அவர் காட்டுகின்ற அக்கறையும் அந்த பெருந் தன்மையையும் பெரும் மகான்களிடம்தான் காணமுடியும்!. ஒரு சமயம் கிளிநொச்சியில் வசிக்கும் எனது உறவுக்கார நண்பரொருவர் தான் கட்டிக் கொண்டிருந்த வீட்டை கட்டி முடிப்பதற்கு வங்கியில் கடன் பெறுவதற்கு சாட்சிக் கையெழுத்து போடுவதற்காக அரசாங்க உத்தியோகத்தர்தான் தேவையென வங்கி நிர்வாகம் கூற, அதற்காக எனது சகோதரனைத் தேடி வந்தார். அவர் வந்த நேரம் எனது சகோதரர் கொழும்பில் நின்ற காரணத்தால் என்ன செய்யலாம்? என என்னிடம் ஆலோசனை நேட்டார். நான் ஏதோ ஒரு நம்பிக்கையில் அவரை கார்த்திகேசன் மாஸ்ரரிடம் அழைத்துச் சென்றேன்.

நான் என்னுடைய ஒரு தேவைக்காக அப்படியானதொரு உதவியைக் கேட்டால் அதில் ஒரு நியாயம் இருக்கின்றது. ஆனால் அவருக்கு முன்பின் தெரியாத ஒருவருக்காக இருபத்தையாயிரம் ரூபா கடனுக்கு (அன்றைய நாட்களில் இருபத்தையாயிரம் ரூபா என்பது இன்று இருபத்தைந்து இலட்சத்திற்குச் சமம்!) பிணை நிற்கும்படி கேட்பது எந்த வகையிலும் நியாயம் அற்றது! ஆனாலும் நான் கேட்டவுடன் எந்தவிதமானதொரு மறுப்பும் கூறாமல் கையெழுத்துப்போட்ட உயர்ந்த

குணத்தை எப்படி வார்த்தைகளுக்குள் அடக்குவது? அந்தச் சம்பவத்தை இன்றும் எனது அந்த நண்பன் ஆச்சரியத்தோடும், பெருமையோடும் சொல்லிக் கொள்வான். "கார்த்திகேசன் மாஸ்ரர் எல்லோரையும்போல சாதாரண மனிதர் அல்ல" என்று. கலை ஆர்வத்தால் நாடகங்களில் நடித்துக்கொண்டிருந்த நான், நண்பனுக்காக ஒரு நாடகத்தை எழுதிக்கொடுத்தேன். அயலிற்குள் அந்த நாடகம் மேடையேறியது. இதை அறிந்திருந்த மாஸ்ரர் அவர்கள், பின்பொருமுறை என்னுடன் உரையாடும்போது "நாம் எழுதுகின்ற நாடகங்கள் நாட்டுக்கு மக்களுக்கு ஒரு செய்தியைச் சொல்லவேண்டும்" என்றார்.

உதாரணமாக "மனோஹரா" என்ற திரைப்படத்தில் ஒருநாடகம் இடம்பெறும். அந்தத்திரைப்படத்தில் வருகின்ற மகாராணி செய்கின்ற கொடுமைகளை அம்பலப்படுத்துவதற்காக அவருடைய கதையையே பெயர்களில் மாற்றங்கள் செய்து நாட்டு மக்களுக்கு நடித்துக் காட்டுவார்கள்! இப்படியாக எங்கள் கலைப்படைப்புகள் மக்களை சிந்திக்க வைக்கவேண்டும் என பாறாங்கற்களாக இருந்த என் சிந்தனைகளை சிற்பங்களாக மாற உளியாக இருந்தவர். இலக்கிய ஆர்வத்தில் "சாட்டை" என்னும் சஞ்சிகையை நான் ஆரம்பித்தபோதும் அதை நெறிப்பபடுத்தியவர். எனது இல்லத்திலேயே நடந்த வெளியீட்டு விழாவிற்கு இவர் தலைமை தாங்க, திரு.டானியல் அவர்கள் சிறப்புரையாற்றியது நான் எதிர்பாராமல் இவர்கள் எனக்குச் செய்த மரியாதை!. கார்த்திகேசன் மாஸ்ரர் மரணித்துவிட்டார் என்ற செய்தியறிந்து, அன்றே அப்பொழுது அவர் வசித்துவந்த வட்டுக்கோட்டையில் உள்ள அவரது இல்லத்திற்கு சென்றேன். முற்றத்தில் ஐம்பதுக்கும் மேற்பட்ட நாற்காலிகள்போடப்பட்டிருந்தன. அன்று அஞ்சலி செய்ய வந்தவர்களில் முக்கியமானவர்கள் முன்னாள் மேயராக இருந்த "மைனர்" நவரத்தினம், மாநகர சபை உறுப்பினராக இருந்த கொட்டடித் தெய்வேந்திரம், தோழர் கணேசவேல், இன்னும் பலர்....நான் சந்தித்த... நேசித்த... நல்ல மனிதர்களில் எங்கள் கார்த்திகேசன் மாஸ்ரர் என்றென்றும் என் நெஞ்சத்தில் நிறைந்திருப்பவர்! இவரைப்பற்றி எண்ணி நயப்பதற்கு. வியப்பதற்கு... இன்னும் எத்தனையோ இருக்கின்றது. ஆனாலும் இத்தோடு நிறுத்திக் கொள்கின்றேன்.இலங்கையில் கம்யூனிசம் தோத்திருக்கலாம்! ஆனாலும் தோழர்மு. கார்த்திகேசன் என்ற இந்த மனிதம்நிறைந்த மனிதன் தோறகவில்லை.இன்னும் ஆயிரம் ஆண்டுகளுக்குவாழ்ந்து கொண்டே இருப்பார்!......

# யாழ்ப்பாணத்தில் நூற்றாண்டு நினைவு கார்த்திகேசன் நிகழ்வு.......

முற்போக்காளர்களை இனங்கண்டு, அவர்களை நினைவு கூர்ந்து அறிமுகப்படுத்த வேண்டும் எனும் அவாவுடன் கி.பி. தோழர் என அனைவராலும் அறியப்பட்ட பசுபதி சீவரத்தினம் அவர்கள் தலையிலான ஏற்பாட்டுக் குழுவின் ஒழுங்கில் பொதுவுடமை இயக்கத்தின் முன்னோடி, கல்வியின் கலங்கரை விளக்கு கம்யூனிஸ்ட் மு.கார்த்திகேசன் அவர்களின் நூற்றாண்டு தின நிகழ்வு ஜூலை 16, 2019 தினம் யாழ்ப்பாணத்தில் சிறப்புற நடந்தேறியது.

நிகழ்ச்சி நிரல் படங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது.
நிகழ்ச்சிநிரலுடன் கார்த்திகேசனின் நீண்டகால கம்யூனிஸ்ட் கட்சித் தோழர் சுப்பையா அவர்களினது கட்டுரையும் இணைக்கப்பட்டு பங்கேற்றவர்களுக்கு வழங்கப்பட்டது. முக்கிய ஒழுங்குதாரராக சசிரேகா சுந்தரம் ஏற்பாட்டுக் குழவின் பல பொறுப்புகளையும் ஏற்று நடாத்தினார். நிகழ்ச்சியில் மலையகம், கொழும்பு, திருகோணமலை, வவுனியா, பரந்தன், கிளிநொச்சியென நெடுதூரம் பயணித்து வந்த அபிமானிகளும், யாழ் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்து பங்கு பற்றியோரும் என கணிசமான தொகையினருடன் நிகழ்ச்சி ரங்கன் தேவராஜன் (சட்டத்தரணி) தலைமையில், பல்வேறு தலைப்பில் கார்த்திகேசனையும், கார்த்திகேசனின் செயற்பாடுகளையும் நினைவு கூர்ந்து பேசப்பட்டது.

பல தடவைகள்கார்த்திகேசன் போன்று ஆளுமையுள்ள ஆழமான அரசியல் அறிவுடன் மக்களின் தேவைகளை அறிந்து செயற்பட இனியொருவர் கிடைக்கமாட்டார் எனவும், அவரது கல்வி சார்ந்த அனுபவம் எவ்வாறு சமூகத்தினை மேம்படுத்தியது எனவும் கூறப்பட்டது. தற்போதைய சிறீலங்கா அரசியல் அவலநிலை பற்றியும், மக்களின் எதிர்காலம் என்னவாகும் எனும் ஏக்கம் கலந்த பேச்சுகளும் இடையிடையே வந்தன. தன்னை வளர்த்த தந்தையார் அமரர் சட்டத்தரணி கே.சி. நித்தியானந்தா, வேறு உறவினர்கள் காரத்திகேசனுடன் வைத்திருந்த நட்பு, தோழமையைக் கனம் பண்ணியும், தானும் கார்த்திகேசன் மேல் வைத்திருந்த

மரியாதையின் நிமித்தம் கட்சிப் பிரமுகர்களுடன் நிகழ்ச்சியில் பங்கு பற்ற வந்திருந்த மதிப்பிற்குரிய முன்னாள் அமைச்சரும், இந்நாள் யாழ் நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கார்த்திகேசனின் படத்திற்கு மாலை அணிவித்து கௌரவித்தார். ஜானகி கார்த்திகேசன் பேச்சாளர் பட்டியல் இறுதியில் கி.பி. தோழர் அக்காலகட்டத்தில் முற்போக்காளர்களை நினைவு கூருவதன் முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்தி, முற்போக்காளர் பட்டியலில் கார்த்திகேசனை முதலிடத்தில் வைத்து இந்நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்திருப்பதாகவும், இது போன்று 30 க்கும் மேலுள்ள முற் போக் காளர் களை ஒவ்வொருவராக நினைவுகூரத் உள்ளதாகவும் தெரிவித்து நன்றியுரையைக் கூறினார்.

கார்த்திகேசன் தனது காலத்தில் சமூகத்திற்கு ஆற்றிய சேவையைக் கனம் பண்ணி, ராஜா கிரீம் ஹவுஸ் உரிமையாளர் மண்டபத்தினை இலவசமாக வழங்கியதுடன், பங்கேற்றோர் அனைவருக்கும் சிற்றுண்டி, குளிர்பானமும் பரிமாற ஒழுங்கு செய்தார். கார்த்திகேசனின் முன்னாள் நெருங்கிய கம்யூனிஸ்ட் கட்சித் தோழர் அமரர் குமாரசாமி அவர்களின் புதல்வன், கார்த்திகேசனின் பிறந்த தினமாகிய ஜூன் 25 உதயமாகியவர். அவருடன் தனது இல்லத்தில் ஒவ்வொரு வருடமும் பிறந்ததினத்தை கொண்டாடியவர், இன்று அவுஸ்திரேலியாவிலிருந்து தனது தாய்வழி சிறிய தகப்பனும், முன்னாளில் கார்த்திகேசனின் அயலவரான கோபால் என்பவர் தயாரித்த செப்பிலான உருவப்படத்தை அவர் மூலமாகவே அன்பளிப்பாக அனுப்பி வைத்தார்.

"நூலகம்" நிறுவனத்தினர் கார்த்திகேசன் 25வது ஆண்டு நினைவாக பிரசுரிக்கப்பட்ட நூலினை ஆவணகப்படுத்திய இணைப்பு மண்டபத்தில் காட்சிப்படுத்தப்பட்டது. வெவ்வேறு விதமாக இந்நிகழ்வில் பங்கேற்றோர் ஒரு நிறைவான நிகழ்ச்சியின் பங்கு கொள்ளக் கிடைத்தது பற்றி திருப்தியுடன் சென்றனர்.

# மனிதநேயப்பணியில் இணைந்துகொண்டவர்கள்!..

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் மற்றும்கல்விச்செலவுக ளைப்பொறுப்பேற்றுஉதவும் மனிதநேயப்பணிகளில் மண் சஞ்சிகையோடு இணைந்து கரம்கொடுத்துவரும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம்.எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்து உதவலாம். இதுவரை இத்திட்டத்தில் இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

01. திருமதி.சிவதர்சினி.பிராங்ளின் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு- வவுனியா) - 480-00

02. செல்வன்.நகுல்.துரையரங்கன் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவுதிருகோணமலை -480-00

03. செல்வி.அஜந்தி.அழகராசா - பிரித்தானியா
ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு- கிளிநொச்சி -480-00

04. திருமதி.பிரிந்தாவனி.ஏகானந்தராசா - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா - 480-00

05. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா - 480-00

06. செல்வி அனிதா றஞ்சன் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - கிளிநொச்சி - 480-00

07. திரு ஜோகன்னாஸ் குறுண்ட்லர் - ஜேர்மனி - 480-00
ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா

08.செல்விகள்.வினிஷா.இராஜ்குமார்,தீபா.தர்மராசா-ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- மட்டக்களப்பு - 240-00

09. செல்வி.சுகிர்தா தவராஜ் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- கிளிநொச்சி - 200-00

10. செல்வன். சியாந்த எமில் சர்வானந்தன் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- வவுனியா - 200-00

# ஆதரவற்றோர் நிதி உதவிக் கணக்கு

ஆரம்ப இருப்பு 1-07-2019 + 359-82

அன்பளிப்புகள்:-

01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

02. செல்வி. அனித்தா றஞ்சன் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

03. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - Essen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)

04.திருமதி அஜந்தி பத்மநாதன் - London + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)

05. திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Weeze + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

06. திரு ஜோகன்னாஸ் குறுண்ட்லர் -Köln + 80-00
(Johannes -gruendler)
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

07. திரு ஜோகன்னாஸ் குறுண்ட்லர் -Köln + 100-00
(பிறந்தநாள் அன்பளிப்பு)
(Johannes -gruendler)

08. திரு.சிவகுமாரன் சாந்தலிங்கம் - Pforzheim +20-00

--------
+ 959-82

+ 959-82

அனுப்பியது:-

(1) "அருளகம்" அகிலாண்டெஸ்வரி சிறுவர் இல்லம்
வவுனியா -480-00

(2) "அன்பகம்" இந்து அன்பக சிறுவர் இல்லம்
வவுனியா -400-00


(3) "செபமாலை" சிறுவர் பாதுகாப்பு இல்லம்
தலைமன்னார்-மன்னார் -200-00

வங்கிக் கட்டணம் 3x15-00 - 45-00

--------

-1125-00

| | | | |
|---|---|---|---|
| வங்கிவரி 01.07.2019 - 31.07.2019 | - 14-66 | | |
| 01.08.2019 - 31.08.2019 | - 12-89 | | |
| | ----- | | |
| | 27-55 | - 27-55 | |
| | | -------- | |
| | | - 1152-55 | -1152-55 |
| | | | -------- |
| 31-08-2019 மீதி கையிருப்பு (மேலதிகச் செலவு) | | | - 192-73 |
| | | | --------- |


உ
சிவமயம்
Aum
Sivamayam
அருள்மிகு அகிலாண்டேச்வரி சமேத அகிலாண்டேசுவரர் திருக்கோவில்
ARULMIHU AGILANDESHWARY SAMETHA AGILANDESUWARAR THIRUKOVIL
தொ.பே.இல/ T.P.Number
0094 24 2221685
E-mail:
arulaham@gmail.com
ஸ்ரீ அகிலாண்டேச்வரி அருளகம் - சிறுவர் இல்லம்
SRI AGILANDESWARY ARULAHAM - CHILDREN HOME
கோவில்குளம், வவுனியா,
இலங்கை.
Kovilkulam, Vavuniya.
Sri Lanka.
RECEIPT பற்றுச்சீட்டு

Received with thanks from திகதி / Date : 31/05/2019
திரு/திருமதி/செல்வி Mr.Mrs.Miss "MANN" MR. V. SIVARASA of
விலாசம் Address "MANN" (ERDE) MAGAZINE - GERMANY
அவர்களிடமிருந்து ரூபாய் Rupees Four Hundred Eighty Euro only.
சதம் Cts
on account of [illegible]
[illegible] என்பதற்காக நன்றியுடன்பெற்றுக்கொண்டேன்.
வங்கி Bank காசோலை இல Cheque No திகதி Date
உரொக்கம் / காசோலை 480 Euro
ரூபா Rs. 93083/=
17506
Bank of Ceylon
S. Akila.
முகாமையாளர் Manager



உ
சிவமயம்

# ஸ்ரீ அகிலாண்டேசுவரி அருளகம்

## SRI AGILANDESHWARY ARULAHAM

அருள்மிகு அகிலாண்டேச்வரி சமேத அகிலாண்டேசுவரர் திருக்கோவில்
ARULMIHU AGILANDESHWARY SAMETHA AGILANDESUVARAR THIRUKOVIL

"இளம் சிறார்களை கருணை உள்ளத்துடன் பாதுகாப்போமாக"
"May we protect tender hearted children with compassion"

Kovilkulam,
Vavuniya. Sri Lanka
T.P : 0094 024 - 2221685
E.mail: arulaham@gmail.com

கோவில்குளம்,
வவுனியா,
இலங்கை.

Banker: Bank of Ceylon - Vavuniya. A/C No. 0002364895

Reg No. NEP/PCC/CH/125

போசகர்
Patron
Mr.A.Thiyagarasa, President,
(Nayinai Nagapoosani Amman Kovil)

கௌரவ தலைவர்
Hony.President
Mr.M.Sabanathan (Prop: Neem Rice Mill)

கௌரவ உப தலைவர்
Hony.Vice President
Mr.S.Ramamoorthy
(Prop: Thirusenthooraan Rice Mill)

கௌரவ செயலாளர்
Hony.Secretary
Mr.A.Navaratnarajah Trustee
Arulmihu Agilandeshwary Sametha
Agilandesuvarar Thirukovil

கௌரவ உப செயலாளர்
Hony. Asst.Secretary
Mr.V.S.Thevarajah (Govt. Contractor)

கௌரவ பொருளாளர்
Hony. Treasurer
Mr.S.Annalingam (Prop: Kugan Motors)

நிர்வாக உறுப்பினர்கள்
Commitee Members
Mr.A.Umathevan(Prop: New Sun Rice Mill)
Mr.P.Murugaraj (Prop: Sellam Rice Mill)
Mr.S.Sripathynathan (Prop: Asokan Rice Mill)
Mr.N.Thanapalasingam (Trader)
Mr.S.Sureshkumar (Divisional Secretariat)
Mrs.T.Ramanathan
Mr.A.Sooriyakumar (Trader)
Mr.N.Sureshinthiran (S.T.B)

நிர்வாக அதிகாரி
Administrator
Mr.R.Loganathan (Accountant)

June 17,2019

திரு. வ.சிவராசா அவர்கட்கு,

பிரதம ஆசிரியர், மண் சஞ்சிகை. ஜேர்மனி.

அன்பான வணக்கம்,

**பிள்ளைகளின் பராமரிப்பு நிதி உதவி**

இல்லத்தில் பராமரிக்கப்பெற்றுவரும் பிள்ளைகளான அபிராமி, தாட்சாயனி, சத்திய, ஆரணி இவர்களின் பராமரிப்பிற்காக தங்கள் பத்திரிகை வாசகர்களின் உதவியுடன் இம்முறையும் எமது வங்கி கணக்கிலக்கத்திற்கு அனுப்பி வைத்த பணம் ரூபா 93,083/- வை நன்றியுடன் பெற்றுக்கொண்டோம். தாங்களின் தொடர் உதவியை மனதாரபோற்றுகின்றோம்.

மேற்படி நான்கு பிள்ளைகள் உட்பட அனைத்து சிறார்களும் நலமாகவுள்ளனர். இத்துடன் பணத்திற்கான பற்றுச்சீட்டும், வீபூதி பிரசாதமும், தங்கள் சஞ்சிகைக்கான ஆக்காங்களையும் அனுப்பி வைக்கின்றோம்.

தங்களின் தொடர் உதவிக்கு எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்வதோடு, தாங்களும், தங்கள் குடும்பத்தினரும் நலமாக வாழ அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரப்பெருமான் அருள்புரிய வேண்டி நிற்கின்றோம்.

நன்றி

இங்ஙனம்

(ஆ.நவரெத்தினராசா)

ஒளிரும்வாழ்வு அமைப்பு - துணுக்காய்
ඔළිරුම්වාළ්වු සංවිධානය - තුණුක්කායි
Olirumvaalvu Organization - Thunukkai

Re.No:- MU/DS/TNK/RVSS/22/2015

திகதி:-24/07/2019

வ.சிவராசா

பிரதம ஆசிரியர்

மண் கலை இலக்கிய சமூக சஞ்சிகை

ஜேர்மனி

நன்றி தெரிவித்தல்

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் வாழ்கின்ற மாற்றுத்திறனாளிகள், பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் மற்றும் பெற்றோரை இழந்தபிள்ளைகள், பிள்ளைகளை போரில் இழந்த பெற்றோர்கள் ஆகியோரின் மருத்துவம், கல்வி, வாழ்வாதாரம் என்பவற்றை மேம்படுத்தும் நோக்கில் 2012 ஆண்டு தொடக்கம் ஒளிரும் வாழ்வு என்னும் எமது அமைப்பு இயங்கி வருகின்றது. சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தங்களைப் போன்றோரின் உதவியைப் பெற்று வழங்கிவருகிறோம். தற்போது நிரந்தர தொழில் வாய்ப்பை ஏற்படுத்தும் நோக்கோடு ஒளிரும்வாழ்வு என்னும் பெயருடன் தையலகம், புகைப்படக்கலையகம், உணவுற்பத்தி நிலையம், பாற்பொருள் உற்பத்தி நிலையம் என்பவற்றை அமைத்து அதில் கணவனை இழந்த பெண் தலைமைத்துவக்குடும்ப பெண்கள், மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்கு நிரந்தர வேலை வாய்ப்பை வழங்கிவருகிறோம்.

இவ் அமைப்பின் மேம்பாட்டுக்காக தங்கள் குடும்ப சகிதம் முன்வந்து தங்களால் அனுப்பிவைக்கப்பட்ட இப் பண உதவியினால் போரினால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் போரினால் கணவனை இழந்த பெண்கள் ஆகியோரின் குடும்பங்களின் வாழ்வாதார செயற்பாடுகளிற்காக பயன்படுத்துகிறோம் என்பதை தயவுடன் தெரிவித்துக்கொள்கிறோம். தாங்கள் கேட்டதற்கு அமைவாக விபரப்பட்டியலையும் அனுப்புகின்றோம். தொடர்ந்து இவ்வாறான உதவிகளை தங்களிடமிருந்து எதிர்பார்ப்பதுடன் அதற்காக எமது அமைப்பு சார்பாக என்றும் நன்றியுடையவர்களாக இருப்போம் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்

நன்றி

தலைவர்
ஒளிரும் வாழ்வு அமைப்பு
துணுக்காய்

செயலாளர்
ஒளிரும் வாழ்வு அமைப்பு
துணுக்காய்

E.Mail:- olirumvaalvu.thunukkai@gmail.com T.P:- [illegible]




# வாசகர் வாழ்த்துரை...

"செய்வனதிருந்தச்செய்"என்பதற் கமைய.
தன்னலம் கருதா சேவை மனித நேயப் பணிமனிதம் சார்ந்த மானுடன் இவை ஒருங்கே அமைந்த திரு. சிவராஜா அவர்கள்.!! அன்பு பண்பு அடக்கம் பெண்ணியல்பு அமைந்த துணைவி ராஜேஸ்வரி தமிழ் மேல் கொண்ட ஆர்வம் மண் சஞ்சிகை தாய் மண்ணை நேசிப்பதால் மண் எனப் பெயரிட்டாரோ?.. மண்ணுக்குள் புனிதமுண்டு!...

பூமித்தாய்க்கும் பொருள் பல உண்டு அதனால் மண்ணை நேசிப்பவர்களிடம் மனிதமும் உண்டு!...இதை இவர்களிடம் நான் காண்கிறேன் இவர்களின் எழுத்துக்களில் தெள்ளிய சிந்தனைகள் உண்டு!... வாழ்வில் நிகழ்கால நிதர்சனங்கள் உண்டுகாவியம் படைக்கவில்லை காத்திரமான வாழ்வியல்தன்மை படைத்ததுண்டு இருக்கும் போது இவரின் நல்லியல்புகள் பாராட்டுவது நல்லவை செய்யத்தூண்டும் ஆக இவர்கள் எழுத்துக்கள் மட்டுமல்ல நற்குணங்களும் போற்றத்தக்கவையே ஆகவே எனது பார்வையில் இவைகள் தான் தெரிந்தன.

அதையே இங்கு எழுதியம்பினேன்.

கெங்கா ஸ்டான்லி

# தாயகச்செய்திகள் சில....

இலங்கை பெண்களில் 40 சதவீதமானோர் அதிக உடற்பருமனைக் கொண்டு இருப்பதாக புதிய ஆய்வின் மூலம் அதிர்ச்சி தகவலொன்று கண்டறியப்பட்டுள்ளது. இத்தகவலை சுகாதார அமைச்சின் வைத்திய ஆய்வு பிரிவின் போஷாக்கு விஷேட வைத்தியர் திருமதி ரேணுகா ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

பல்வேறு காரணங்களால் நாட்டில் 1958 குளங்கள் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுவதாக, கமநல அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது. வட மாகாணம் மற்றும் மொனராகலை, அநுராதபுரம், குருணாகல் ஆகிய மாவட்டங்களில் உள்ள பெரும்பாலான குளங்கள் கைவிடப்பட்டுள்ளன.

இம்முறை ஆகஸ்ட் 5ஆம் திகதி ஆரம்பமாகும் உயர்தரப்பரீட்சை, ஆகஸ்ட் 31ஆம் திகதி நிறைவுக்கு வருகின்றது. வடமாகாணத்தில் 15,213 பாடசாலைப் பரீட்சார்த்திகளும், 3,857 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் இப்பரீட்சைக்கு தோற்றவுள்ளனர். வடமாகாணத்தில் 217 பரீட்சை நிலையங்களில் உயர்தரப்பரீட்சை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது

கடந்த பத்துவருடங்களில் 27ஆயிரத்தி 161பேர் வீதி விபத்துக்களில் உயிரிழந்துள்ளனர். இது முப்பதுவருட யுத்தத்தில் உயிரிழந்தவர்களுக்கு நிகரானதாகும் என எதிர்க்கட்சி உறுப்பினர் நிமல் சிறிபாலடி சில்வா தெரிவித்தார்.

இலங்கையில் பாதுகாப்பு படைகள் வசம் இருந்த காணிகளில் 71,178 ஏக்கர் காணிகள் கடந்த மார்ச் மாதம் 31ஆம் தேதி வரை விடுவிக்கப்பட்டுள்ளதாக இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.படையினரிடமிருந்த 84,675 ஏக்கர் காணிகளிலேயே, மேற்படி காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை அரசாங்கம் கூறியுள்ளது.விடுவிக்கப்பட்ட காணிகளுள் 81 சதவீதமானவை அரசுக்குச் சொந்தமானவை என்றும், 90 சதவீதமான தனியாருக்குரியவை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

2017ஆம் ஆண்டு இறுதிவரை இலங்கையில் 17,600 சிறுவர் துஸ்பிரயோக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்துள்ளது.

# உலகச்செய்திகள் சில...

1- 2019 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து 31-07-2019 வரை 12,546 அகதிகள் சட்டவிரோதமாக புகலிடம் கோரி ஐரோப்பாவை வந்தடைந்துள்ளதகாக ஐநாவின் சர்வதேச குடியேற்றத்துக்கான நிறுவனம் (IOM) தெரிவித்துள்ளது. அதேவேளை இந்த ஆண்டு இது வரை 407 புகலிடக் கோரிக்கையாளர்கள் பயணத்தின்போது கடலில் மூழ்கி இறந்தனர் என்று தெரிவித்துள்ளதோடு, ஐரோப்பாவிற்கு புகலிடம் கோரும் நோக்கத்தோடு கடல் மார்க்கமாக வந்த ஆபத்தான பயணத்தில் 2014ல் இருந்து 2018 வரை 30,510 பேர் இறந்துள்ளனர் என்ற அதிர்ச்சி அறிக்கையையும் வெளியிட்டுள்ளது

2- கொன்சர்வேட்டிவ் கட்சி தலைவராகவும் பிரித்தானியாவின புதிய பிரதமராகவும் திரு. பொரிஸ் ஜோன்ஸன் என்பவரைத் தெரிவுசெய்திருக்கிறது. (24.07.2019) இவரின் தெரிவு அவர்களின் கடசியினர் மட்டுமல்லாது பிரித்தானிய பொது மக்கள் பலராலும் எதிர்பார்க்கப்பட்டதொன்றாகும்.

3- தெற்கு ஆசியாவில் கடந்த மாதம் பெய்த கடும் பருவ மழையால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு மற்றும் நிலச்சரிவில் சிக்கி சுமார் 350 க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். இந்தியாவில் 184, நேபாளத்தில் 90, பாகிஸ்தானில் 41 மற்றும் வங்கதேசத்தில் 37 ஆகிய மரணங்கள் பதிவாகியுள்ளன.

4- சீனா, லண்டன் இடையிலான நேரடி சரக்கு ரயில் சேவையை சீனா தொடங்கி வைத்துள்ளது. சீனாவின் கிழக்கில் உள்ள யீ வூ நகரிலிருந்து புறப்பட்டுச் சென்ற சரக்கு ரயில் இரண்டு வாரங்களில் 12,000 மைல்(19,000 கி.மீ) பயணித்து லண்டன், Barking நிலையத்தை சென்றடையவுள்ளது. ஐரோப்பா நாடுகளுடனான வர்த்தக மற்றும் முதலீட்டு உறவுகளை பலப்படுத்தும் நோக்கத்தில் சீனா இந்த ரயில் சேவையை தொடங்கியுள்ளது.

5- சிரியாவில் நடைபெற்று வரும் போரில் தடை செய்யப்பட்ட இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டு பச்சிளம் குழந்தைகள் உட்பட நாளுக்குநாள் உயிரிழப்புக்கள் அரங்கேறிக்கொண்டு இருக்கின்றது. இதுவரைக்கும் 370,000-க்கும் மேற்பட்டவர்கள் பலியாகியுள்ளதாக ஐநாவின் சிரியா நெருக்கடிக்கான துணை பிராந்திய மனிதாபிமான ஒருங்கிணைப்பாளர் அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளார்.

இலண்டன்தமிழ்வானொலி பாமுகத்தொலைக்காட்சி
தொடர்மேடைகாணும் ஐரோப்பிய பொன்மாலைப்பொழுது-217

காலம்-19.10.19
மங்கலவிளக்கேற்றல்
வரவேற்புரை
பல்திறன் நிகழ்வுகள்
நாட்டிய நாடகம்
நடனங்கள்
கானக்குரல்(நம்மவர்பாடல்போட்டி)
இசைநிகழ்வுகள்
கௌரவிப்பு
கலைக்கோலங்கள் என
பல்திறன்பொன்மாலைப்பொழுது-217

இடம்-kaiser saal immaerath
/newimmerath markt-2
41812Erkelenz
Germany

அனைவரையும் அன்புடன்அழைக்கிறோம்
இலண்டன்தமிழ்வானொலி
பாமுகத்தொலைக்காட்சி
ஏற்பாட்டுக்குழுவினர்

தொடர்புகட்கு-00492451-9153048 info@firstaudio.net / 00442081330171

# மண் சஞ்சிகையின் 30 வது ஆண்டு நிறைவு விழாப் போட்டிகள்

1990ம் ஆண்டு தைப்பொங்கல் அன்று ஆரம்பிக்கப்பட்ட உங்கள்"மண்" சஞ்சிகை 2020 தை மாதம் 30வது ஆண்டுகள் நிறைவு செய்கின்றது. இந்த ஆண்டுவிழாவையொட்டி புலம்பெயர்வாழ் தமிழ் பேசும், எழுதும் வாசிக்கும் சிறுவர்கள், இளையோர்கள், மாணவமணிகளிடையே பல போட்டிகளை நடாத்தப்படுகின்றன என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

போட்டிகள் பற்றிய விபரங்கள் இச்சஞ்சிகையில் வெளியாகியுள்ளன. விபரங்கள் இணைக்கப்பட்டுள்ளன. மேலதிகமாகத் தேவைப்படின் நிழல்பிரதிகள் எடுத்துக்கொள்ளலாம். அனைவரும் போட்டிகளில் கலந்துகொண்டு பரிசுகளை வென்றிடுங்கள்!..

-ஆசிரியர்-

# ஆவணகம்

வழங்கும்

## 50வது ஆவணகக் கண்காட்சி

**பல்லாண்டு காலமாக பாதுகாக்கப்பட்டு வரும் எமது பொக்கிஷங்கள் உங்களது பார்வைக்காக வைக்கப்பட உள்ளன....**

காலம் : 13-10-2019 Sunday
நேரம் : 11.00am – 20.00pm
இடம் : Willi-Graf-Gymnasium
Borschtalle 26
80804 München
U2, U3 scheidplatz

*கண்காட்சி பார்வையிடும் நேரம் காலை 11.00 முதல் மாலை 16.00 வரை*
*கலை நிகழ்வுகள் ஆரம்பம் மாலை 16.00 தொடக்கம்....*

எனும் முகவரியில் மிகச் சிறப்பாக இடம்பெற உள்ளது.
எமது ஆவணகப் பெட்டகத்தின்னுள்ளே........

- ஓலைச்சுவடிகள்
- பண்டைய, தற்போதைய நாணயங்கள்
- முத்திரைகள்
- பத்திரிக்கைகள், தமிழர் வரலாற்று நூல்கள்
- ஈழ போர்க்கால வெளியீடுகள்
- எம்மவர் வரலாற்றுப் பதிவுகள்
- புகைப்படங்கள்
- பழம்பொருட்கள்

அனுமதி இலவசம்

பார்வைக்கு வைக்கப்படவுள்ளன.

- அனுமதி இலவசம் -

***திரண்டு வந்து ஊக்கமும் ஆதரவும்***
***தந்துதவுமாறு அன்புடன் அழைக்கின்றோம்***

(அன்பளிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, இலங்கையிலுள்ள தொண்டு நிறுவனங்கள் ஊடாக காருண்ய உதவிகள் மேற்கொள்ளப்படும்)

ANTON Joseph
Phone: 0049 157 55 96 6419
E-mail : joseph. anton2006@gmail.com
Skype : antony20068
Blog : aavanagam@blogspot.com








முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள துணுக்காய் "ஒளிரும் வாழ்வு இல்லம்" துணுக்காய் - பாண்டியன்குளம் பிரதேச செயலகப் பிரிவுகளில் வசிக்கும் ஆதரவற்றோருக்கு உணவளிக்கப்பட்டது. முல்லைத்தீவு மாவட்ட உளவளத்துறை அதிகாரியினால் இலவச மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டது. இப்பிரதேசங்களிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு இலவச கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களுக்கு "மணி" சஞ்சிகையின் வாசகர்களும் நிதி உதவி புரிந்து வருகின்றனர்.

Wissen, Kultur & Literatur • கல்வி, கலை, இலக்கிய சமூக இருமாத இதழ்

ERDE

MANN
Germany / Ausgabe 197














இலங்கை வடபகுதியில் காணாமல்போனவர்கள் உறவுகளின் போராட்டம் 1,000 வது நாட்களை நோக்கித் தொடர்கின்றது!...

வருட சந்தா ஜேர்மனி 20€
ஏனைய நாடுகள் 25€